வீரலக்ஷ்மி

என்னும்

ஒரு கற்பரசியின் இனிய சரிதை

இஃது,

சென்னை கா. பச்சையப்ப முதலியார் கலாசாலைத்
தமிழ்ப் பண்டிதராய் உபகார வேதனம் பெறும்
வித்வான் - பூவை - கிருஷ்ணசாமி முதலியார்

எழுதியது

சென்னை:
[illegible] குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1923

ரிஜிஸ்தர் [illegible]ந்தது.] [விலை 10 அணா.

முகவுரை.

—:o:—

'வீரலக்ஷ்மி' என்னும் மகுடம் வாய்ந்த இக்கதையின் சாராம்ஸம் ஆங்கிலக் கதையினின்று பெரும்பாலும் எடுத்தாளப்பட்டுளது. அக்கதையி னேக்கமே யான் மிகுதியுந் தழுவியுள்ளேன். கிறிஸ்து பிறந்து எண்ணூற்று முப்பத்து மூன்றா மாண்டிலே ஸ்பெயின் தேயத்திலே ஆஸ்டூரியாஸ் தேயத்தார்க்கும் மூரிஷ் தேயத்தார்க்கும் நடந்தேறியதாகக் கூறப்பட்டுள்ள விடயத்தை, இந்தியாவின் வடபுறம் அரசு புரிந்து வந்த இந்துக்களுக்கும் தென்புறம் அரசாட்சி செய்து வந்த மகம்மதியருக்கும் நடந்த விடயமெனவும்; இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் கிறிஸ்து பிறந்து ஆயிரத்திருநூற்று முப்பத்தோரா மாண்டிலே சண்டையுண்டாயிருந்ததால் இவ்வருடத்தையே சரித்திரத்திற்கிணங்க இக்கதையின் கால வரையறை யென்றுங் கொண்டுள்ளேன்.

இக்கதை ஆங்கிலேயக் கதை யாதலால், குருவெனப் பெயர்வகித்தோன் திருமணம் புரிதல் நியாய விரோத மென்பதும், காதலி தன் காதலன் பெயர் கூறி விளித்தலும், இறக்குந் தறுவாயில் இறப்பவனுக்கு

மந்திரோபதேசம் குருமார்கள் செய்வதும், இந்துக்கள் வழக்கத்திற்கு முற்றும் முரண்பாடுடையன. இக்கதையில் ஆங்காங்கு வந்துள்ள பெயர்கள் அவரவர் குணத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்பக் காரணப் பெயராமாறு இட்டுள்ளன.

இக்கதையில் காதல் - கவருடல் - கள்ளுண்டல் - பொய்மொழிதல் ஆகிய இவற்றின் கெடுதிகளும், செல்வம் - இரக்கம் - செய்ந்நன்றி - பொறுமை - வாக்குறுதி - நட்பு ஆகிய இவற்றின் சிறப்புக்களும், இராஜ நீதியின் பெருமையும் பல நீதிகளாலும் பழமொழிகளாலும் பெரியார் திருவாக்கால் விளக்கப்பட்டுள்ளன.

தற்காலத்தில் செவ்விய தமிழ் வாசகங்கள் சிறுபான்மையுள்ளவாதலால் கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் இக்கதை பயன்படுமாறு தெள்ளிய நடையால் எழுதப்பட்டுளது. கதை நோக்கமே நோக்கமாக வாசிப்போர்க்கு உற்சாகமும், வாசக நடையில் பயில விரும்பும் மாணவர்க்கு இஃது ஒரு வழி காட்டியுமாமெனத் துணிவுகொண்டு இதனைப் பிரசுரஞ் செய்யலாயினேன்.

கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியார் இப்புத்தகத்திலுள்ள குற்றங்களைப் பாராட்டாது குணத்தைக் கொள்வரென நம்புகிறேன்.

பூ. கி.

பிரதான நாமங்கள்.

——:o:——

1. வீரலக்ஷ்மி—கதாநாயகி.
2. மன்மதசொரூபன்—கதாநாயகன்.
3. குபேரன்—வீரலக்ஷ்மியைக் காதலித்தவன்.
4. சோமதத்தன்—குபேரன் துவிபாஷி.
5. மனோரஞ்சிதம்—சுந்தரானந்தன் காதலி—நூறு கன்னியர்களிலொருத்தி.
6. சுந்தரானந்தன்—ஸ்ரீபிரான் மாளிகைப்பிரபுவின் ஏகபுத்திரன்.
7 மயன்—சுந்தரானந்தன் வேறு பெயர்.
8. முகுந்தன்
9. ஆனந்த சொரூபன்
10. பிரதாபசீலன்
11. ஸ்ரீபாதன்

} முறையே மாளவ நாட்டரசர்கள்.

12. விசாலாக்ஷி—முகுந்தராஜன் காதலி.
13. குலசேகரன்—விசாலாக்ஷி தந்தை.
14. சுகுமாரன் - தனதத்தன்—ஆனந்தசொரூபன் புதல்வர்.
15. வீரமார்த்தாண்டன்—மாளவ நாட்டில் நியாயப் பிரமாணப் பலனை யிழந்தவன்.
16 சுப்பு செட்டி—வீரமார்த்தாண்டன் நண்பன்.
17. காமீயப்பகுரு—ஆமடாபாத் பிரதம குரு.
18. ஜயவீரன்—பிரதம குருவால் குற்றஞ் சாட்டப்பட்டவன்: வீரமார்த்தாண்டன் நண்பன்.
19. அப்துராமன்—ஐதராபாத் அரசன்.
20. உசேயின்—அப்துராமன் நண்பன் - சிறந்த போர்வீரன்.
21. அலாஸ்நாம்—அப்துராமன் சோதிடன்-
22. கமலாவதி—நூற்றுவருள் ஒருத்தி - வீரலக்ஷ்மி விஷயத்தை அப்துராமனுக் குரைத்தவள்.
23. காராஆலீ—ஐதாரபாத்தில் நியாயப் பிரமாணப் பலனை யிழந்தவன்.
24. மேகநாதன்—காராஆலி நண்பன்.
25. மேகநாயகி—மேகநாதன் காதலி.

வீரலக்ஷுமி

அத்தியாயம் I.

இருவழிப் பிரயாணிகள்.

பூமாதினுக்கு எழின் முகமாகப் பொலிந்து விளங்குவது பூபாளதேசம். இத்தேசத்திருந்து கிறிஸ்து பிறந்த ஆயிரத்திருநூற்று முப்பத்தோராம் வருஷம் செப்டெம்பர் மாதத்திறுதியிலே இரண்டு வழிப் பிரயாணிகள் அகலமும் நீளமு முள்ளதோ ரிராஜவீதியாக ஔரங்கபாத்துக்குச் செல்வாராயினர். அதுகாலம் வசந்த ருதுவாதலால், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம், மா, புன்னை, குருக்கத்தி, அசோகு, பாதிரி முதலியன புஷ்பிக்கலாயின. இப் புஷ்பங்கள் அவ்வீதியின் இருமருங்கும் புஷ்பித்திருந்தமையால், அதனை யழகுபெறச் செய்தனவன்றி அவ்வழிச் செல்வோர்க்கு நறுமணமுந்தருவதாயின. ஆண்மகனும் பெண்மகளு மாகிய அவ்விரு வழிப்பிரயாணிகளுள் ஆண் மகன் முப்பதுவயதுடையான். பெண்மகள் காண்போர்க்கு முதியளாகக் காணப்படினும், வயதோ இருபத்தொன்று. ஆண் மகன் உயர்ந்த உருவமுடையான். ஆடவற்குரிய ஆண்மையோ சிறிது மில்லான். அவன் முகத்தை ஒருவர் உற்று நோக்குவாராயின், அவனது மனம் கவலை யென்னுங் கடியோனால் கவரப்பட்டுள்ளதெனக் கருதாநிரார். அம்மாது நீண்டு நன்கமைந்த படிவ

முடையாள். முத்து நகையும், பவளவிதழும், தண்மதி முகமும், குவளைக்கண்ணும், ஆலிலைவயிறும், உடுக்கை யிடையும், கருமணலன்ன குழலும் அமைந்த ரூபலா வண்ய முடையாள். உத்தம மாதர்க்குரிய இலக்ஷணங்க ளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று ஆண் மகனுக் குரிய ஆண்மையு முடையளாயிருந்தாள். இவள் வெண் பட்டாடையும், விலையுயர்ந்த பூஷணங்களும் அணிந் திருந்தனள். அவ்வாண் மகன் உடுத்திருக்கும் உடையை நோக்குங்கால் கல்வி கற்கும் மாணவன் உடுக்கு முடை யை யொத்திருந்தது.

இவர்கள் பூபாள தேசத்தைக் கடந்து அதன் தெற்கேயுள்ள விந்தியமலை சென்றனர். அவ்வழிப்போக் கர் அன்றிரவு கழிக்கச் சுற்றுப்புறமுள்ள கிராமங் களில் ஏதேனும் ஓரில்லந்தோன்றுமா? என்று நாலா பக்கமும் நோக்கினர். அவர்கள் நோக்கம் அவமேயா யிற்று. சூரியனும் மேற்றிசை யடைந்தான். அவ்விரு வரும் அம்மலையோரம் செல்லுங்கால் முதிர்ந்து முனை யற்று நின்ற ஒரு முது மரத்தை நோக்கின வளவிலே "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" ஆதலால், அது பேயோ! பூதமோ! என்று மயங்கினர். அந்தி மாலைப்பொழுதுங் கழிந்தது. இருளோ பரந்தது. உடனே அவ்விருவர் பால் இரக்கங்கொண்டு வழி காட்டு வானாய்த் தன் நிலவினைப்பரப்பி வந்தனன் சந்திரன். பெண்மகள் மிகுந்த தைரியமும், சௌரியமு முடைய ளாயினும் அன்றிரவு மரங்களும், புதர்களும் பற்பல உருவமாகத் தோன்றவே அச்சங்கொண்டவளாய் "ஓ!

என் இன்னுயிர்க்கினிய மன்மத சொரூப! நாம் சென்னெறிவிட் டகன்றனம்போல் தோன்றுகிறது" எனலும் "நாம் வழிதப்பி வந்தோமில்லோம்: நீ மன மறுகல் வேண்டா: நாம் செல்வதே செந்நெறியாகும்: இருள் மூடுமுன் நாம் ஒரு குடிலை யடைவோமென்று சத்திரத் தலைவன் உறுதியுரைத்தனனன்றோ?" எனப் பிரிய வசனம் வழங்கினான். "நாம் அம்மலை யடிவாரத்தில் கண்காட்சியி னிமித்தம் ஒரு மணி காலம் காலதாமதஞ் செய்தோமல்லவா?" என்று அம்மாது கூறலும், "பெண்மணி! வீரலக்ஷ்மி! நீ கூறியது என் மனதை வருத்துகின்றது. என் பற்றியோ அங்குக் கழிக்க நேர்ந்தது? இருள் மூடுமுன் இருத்தற்கு இடந்தேடாது நின்னை இக்காட்டின் கண் நிற்கவிட்டது எனது குற்றமே" எனவருந்த, வீரலக்ஷ்மி "என் பொருட்டு வருந்துதல் வேண்டா. என் தேகமோ வன்மையுடையது. என்னுயிர்க் கினியாய்! தாங்களோ சக்தியற்றிருக்கிறீர்" என்று சொல்ல, மன்மத சொரூபன், "அங்ஙனம் ஒருபோதும் எண்ணேல். நான் மென்மையனாகக் காணப்படினும் வன்மையுடையன்" என மறுமொழி பகர்ந்தான்.

இங்ஙனம் இருவரும் வார்த்தை யாடிக்கொண்டு செல்லும்போது விண் மீன்கள் நன்கு விளங்கின. அவ்வழிப்போக்கர் சிறிது தூரங்கடந்து சென்றதன் பின்னர் ஒரு புறம் விளக்கு வெளிச்சம் தென்படவே களிகூர்ந்து மேன்மேலும் விரைந்து நடந்து செல்ல, ஒரு குக்கிராமம் அவர்கள் முன்னந் தோன்றியது. அக்கிராமத்தில்

நரியின் ஓசையே யொழிய பிறிதொரு ஓசையுமில்லை. கொசுகின் கீதமே யொழிய வேறொரு கீதமுமில்லை. ஒருவரேனும் வீட்டின் வெளிப்புறந் தோன்றினரில்லை. அக்கிராம முழுதும் ஒரே ஒரு விளக்கு வெளிச்சந் தான் புலப்பட்டது. அவ்விளக்கொளி ஒரு வீட்டின் மேன் மாடியில் இருப்பதாகத் தோன்றியதால், அஃதொரு சத்திரமென யூகித்து அதனருகே சென்று கதவைத் தட்டினான் மன்மத சொரூபன். உள்நின்று ஒருவன் வெளித்தோன்ற, மன்மதசொரூபன் "ஐய! நாங்கள் வழிப்போக்கர்; இரவு தங்க இடம் தேடுகிறோம்; இங்குத்தங்க அனுமதி கொடுப்பீராக; செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்திவிடுகிறோம்" என, அவ்வில்ல முடையான் "நீர் குபேரனிடமுள்ள செல்வமனைத்துங் கொடுப்பதாயினும் உமது வேண்டுகோளுக் கிணங்கேன். இங்குத் தங்க உமதருகே ஒரு மாது இருப்பதால் எனது அகத்தைவிட்டு உம்மையகற்ற நான் வருந்துகின்றேன். என் வீட்டில் இடமேயில்லை. அன்றியும் இன்றிரவு அன்னியருக்கு இங்கு இடந்தர யான் துணிகிலேன். 'புதியராகி யிரவினில் வந்த நல்லோர்க்கு இடங்கொடா தகற்றுவான் எரி நரகெய்துவன்' எனவும், 'வந்த விருந்தினர் வருந்த விடுவது அறமன்று' எனவும் ஆன்றோர் கூறினரேனும், 'நான் அங்ஙனஞ் செய்ய வேண்டி யிருக்கிறது. என் செய்வேன்; பாவம்!" என, மன்மத சொரூபன் 'படிப்பதோ திருவாசகம் இடிப்பதோ சிவன் கோவில்' என்பதற்கிணங்க இவனோ புராணம் புகல்கின்றான். 'ஏட்டுச் சுரைக்காயன்றி மேட்டுச்

சுரைக்காயன்று' என நினைத்து மிக அருவருப்புடன் "ஆயின், இக்கிராமத்தில் இடங் கிடைக்கக்கூடிய வேறு அகமாயினும் எமக்குக் காட்டும்' என, 'நான் இதை யும் மறுக்க வேண்டியிருக்கிறது. நாளைய வரையில் இங்கு ஒருவருக்கும் இடங்கிடைத்தலரிது. கூடுமாயின் பிரயத்தினம் செய்யும். அநுகூலமாகும் என்பது எனக் குச் சந்தேகம். இங்கு இன்றிரவு தங்கி யிருப்பவர் இக்கிராமத்தை விட்டகலு முன் ஒவ்வொரு இல்லாள னும் பிறரொருவருக்கு இடங்கொடுக்க மனம் நடுங்கு வன்" என்று இரக்கமுட னியம்பினன், அதற்கு மன் மத சொரூபன் மிகவும் கோபங்கொண்டவனாய் "யார் ஐயா இரக்கமென்பது ஒரு சிறிது மில்லாத அவ்வளவு உலோபகுணமுடன் இக்கிராம முழுதுங் கைக்கொண் டுள்ளது? என்று வினவ, "நூறு கன்னியர்கள்": கால தாமதஞ் செய்யாது ஸ்ரீபிரான் மாளிகையில் பிரயத்தி னஞ் செய்துபாரும். 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடை யார்' ஆதலால் ஒரு கால் இடங்கிடைப்பினுங் கிடைக் கும். இடது பக்கமே யேகின் இக்கிராமத்திற்குப் புறம்பே அரை நாழிகை தூரத்திலுள்ளது அம்மாளி கை" என்று சொல்லி, உள்ளே சென்று கதவைத் தாளிட்டு, விளக்கைக் கையமர்த்தினான்.

அத்தியாயம் II.

—:o:—

ஸ்ரீபிரான் மாளிகை

மன்மத சொரூபன் அவ்வகமுடையான் விருந்தோம்பாமைக்கு மிகவும் வருந்திக் கடுகடுத்துப் பேசவே, வீரலக்ஷ்மி, "தலைவ! புருஷார்த்தங்கள் நான்கினையுங் கெடுப்பது வெகுளி :

'வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை :
வெகுளியே குணந்தவம் வீரத மாய்க்குமால் :
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் : வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறென் றில்லையால்'
(காஞ்சிப்புராணம்)

என்னும் பெரியோர் வார்த்தை மறந்தீரோ, அவ்வில்லமுடையான் இடங்கொடுப்பது தன்னால் இயலாதென்றனனே : அவனை நோவதில் பயன் என்ன?" என்று பல இன்சொல் இயம்பி அவனது சீற்றத்தை யாற்றினள். "நூறு கன்னியர்கள் எனக் கூறினனே! அவர்கள் யாவர்? அவன் எவர்களைக் கூறினனோ?" என்று மன்மத சொரூபன் கூறலும், வீரலக்ஷ்மி "எனக்கும் அவன் கூறியது விளங்கவில்லை" என்றாள். அவர்கள் சிறிது தூரம் நடந்துசென்று ஸ்ரீபிரான் மாளிகை வாயிலைக் குறுகினர். அது போது மேகங் கறுத்து மின்னல் மின்னத்தொடங்கியது. உள்ளிருந்த ஒருவன் வெளிப்போந்து "நிற்பவர் யார்? வேண்டுவன என்ன?"

என்று வினவலும், மன்மத சொரூபன், "ஐயா! என்னுடன் வரும் இம்மாதினுக்கும் எனக்கும் இன்றிரவு தங்க இடந்தரவேண்டும்: இருவர்க்கும் இடந்தர இயலாதாயின் இப்பெண்ணுக்கு மாத்திரமேனுந் தருக: நீர் இல்லையென்று சொல்லாதிருக்க வேண்டுகின்றேன்: இன்று தொலைதூரம் பிரயாணஞ் செய்தோம்; அயல் கிராமத்தானொருவன் எங்கள் வேண்டுகோளுக் கிரங்கானாய் எம்மை யகற்றினான்: மழையோ மும்முரமாய் வரும்போல் தோன்றுகின்றது: மின்னலோ பளிச்சுப் பளிச்சென்று மின்னுகின்றது: இம்மாதோ மிகவுங் களைத்திருக்கின்றாள்: நீர் இச்சமயஞ் செய்யும் உதவி செய்யாமற் செய்த உதவியாகும்" என வேண்ட, "யானறிவேன் அவன் தடுத்த காரணம்: அக்காரணமே என்னையும் உமக்கு இடங்கொடுக்கத் தடைசெய்கின்றது: மழைவரும்போல் தோன்றுகின்றமையாலும், அயலில் எங்குந் தங்க இடமில்லாமையாலும், பெண்பால் இரவில் வெளியிருந்து வருந்துதல் நல்ல தல்லவெனத் தோன்றுதலாலும் உமது வேண்டுகோளுக்கு இணங்கவேண்டியிருக்கிறது." என்றான். அவனது எண்ணத்தை உணர்ந்ததும் உளங்கொளா உவகை கூர்ந்து "நீர் சொல்லியது முற்றிலும் உண்மையே: எங்கள் எண்ணத்தை நிறைவேற்றும்: சிறந்த வெகுமதி யடைவீர்" என்று மன்மத சொரூபன் கூற, "ஐயோ! இவர்களுக்கு இடங்கொடுப்பின் கெடுதி விளைவது நிச்சயம். இதைப் பிறர் உணர்வாராயின் உயிரே போகும்" என்று தனக்குள் நினைத்தும்,

'ஏவ ரெனினும் இடருற் றனராகி
ஓவில் குறையொன் றுளரேல் அதுமுடித்தற்கு
ஆவி விடினும் அறனே: மறுத்துளரேல்
பாவ மலது பழியும் ஒழியாதே'

(கந்த புராணம்).

என்றெண்ணிப், பின் ஒருவாறு தேர்ந்து "ஐயா! அறிவுடையாய்! இங்கு உமக்குத் தங்க இடந்தருகின்றேன்: பொழுது புலர்ந்ததும் என் உத்தரவின்றி நீர் இம் மாளிகைவிட்டு அகலுதலுங்கூடாது. இன்றிரவு இங்குத் தங்கினதாக ஒருவரிடத்துப் புகலுதலுங்கூடாது. அப் படிச் செய்வதாக உறுதி மொழியுரை" யென்றான். இருவரும் "அங்ஙனேயாக" என வாக்களித்தனர். பின்பு பாழுடைந்ததும், ஒருவருஞ் சென்று இருத்தற்கு இயலாததுமான ஒரு அறைக்குள் அவ்விருவரையுங் கொண்டு சென்றனன். அவன் அழைத்துக்கொண்டு செல்லும்போது அவனது உருவத்தையும் உடையையும் உற்று நோக்கி "இவன் பெருந்தகைமையின் காரணமாய் நமக்கு இவ்வுதவி செய்தவனல்லன்: பொருள் வேண்டியே செய்தனன் போலும்" என்று இருவரும் தம் முள்ளத்து உள்ளினர். அவ்வறைக்குள்ளே அவர்களை யிருத்தி "ஐய! என்னை மன்னிக்கவேண்டும்: உம்மை வேண்டுமென்றே இங்குக் கொணர்ந்தேன்: திருவுடையாய்! உங்களை உள்ளே புகச் செய்ததே என்னுயிருக்கு விபத்து. இக்கஷ்டம் நூறு கன்னியர்களால் நேர்ந்துள்ளது: இதோ ஒரு படுக்கை யிருக்கிறது: நீர் தனித்தனியே சயனிக்க விரும்புவீராயின் அதோ அருகிலொரு அறையில் மற்றுமொரு படுக்கையு

மிருக்கிறது" என்று கூறினன். அவனை மன்மத சொரூபன் "நீ நூறு கன்னியர்கள் என்று கூறிணுய்: அவர்கள் இங்கு வந்திருப்பதன் காரணமென்ன?" என்று கேட்க, "இங்கு அவர்களைப்பற்றி நீர் கேட்பது தகுதியன்று: அதனை நவிலவும் எனக்கு நாவெழவில்லை: நீர் வெளியூராகையால் எங்கள் மனக்கொதிப்பு உமக்கில்லை" என்று மிகுந்த வருத்தமுடனுரைத்து அவ்வறைக்குள்ளே ஒரு விளக்கமைத்து, 'என் மனையாளை ஓரிமைப்பொழுதுக்குள் இங்கு அழைத்துவருகிறேன்' எனக் கூறிச்சென்றனன்.

கூறியதுபோலவே அவனும் அவன் மனையாளும் அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொணர்ந்து கொடுத்த பின்னர் அவன் "ஐய! உமக்குவேண்டிய யாவுஞ் செய்தோம். இன்றிரவு இங்குத் தங்கும். யான் முன்னங் கூறிய அக்கன்னியர்கள் செல்லுமுன்னம் நீர் செல்லுதல் கூடாது. அவர்கள் போக நேரம் செல்லின் என் உத்தரவின்றி நீர் போதலுங்கூடாது" என்ருன். அதற்கு வீரலக்ஷமி "அருளுடையாய்! நாங்கள் உம் முயிருக்குக் கெடுதியுண்டாக்க எண்ணுவமோ? நீர் செய்த நன்றி மறக்கற் பாலதோ? 'எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் கூறிஞரன்ரோ?

'ஒருவன் செய்தி கொன்ரோர்க்கு
உய்தியில்லென அறம்பாடிற்றே'

(புறநானூறு)

நாங்கள் கற்றவைமுற்றும் மறந்து உம்மை இடர்க்குட் படுத்துவமோ? ஒருகாலும் படுத்தோம் படுத்தோம். நீர் எம்மிடத்து ஐயங் கொள்ளற்க.

'சிதைவகல் காதல் தாயைத், தந்தையைக், குருவைத், தெய்வப்
பதவியந் தணரை, ஆவைப், பாலரைப், பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டாம் மாற்றலாம் ஆற்றல்: மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ?
(இராமாயணம்)

கொலைபுரிதல் கூடாத தாயர் முதலாயினாரைக் கொலை புரியினும் பிராயச்சித்தம் உண்டு. செய்ந்நன்றி கொன்றார்க்கு என்றும் உய்வில்லை. எங்களால் உமக்குக் கெடுதி நேருமென மனதில் ஒரு சிறிதும் நினையாதீர்" என்று சொல்லிப் பின்னரும் "உமது கருத்தின்படி அப்படியே வாக்குறுதி செய்தோம். நாங்கள் உமது தயாள குணத்தைப்பற்றிப் பன்முறையும் புகழ உங்கள் பெயர் என்ன?" என, "என்பெயர் சோமன்: இவள் என் மனையாள்: பாக்கியம் என்னும் பெயரினள்" என்றான். "இம்மாளிகை எவர்க்குரியது" என்று மன்மத சொரூபன் கேட்க, "ஐயா! இது ஒரு பிரபுவினது. அவர் இங்கு வசிப்பதில்லை. இங்கு வந்து அநேக வருஷமாயின. அவர் உதயபுரத்தில் வசிக்கின்றார். நானும் என் மனைவியும் இதோ இருக்கிற என் மகன் நாகனும் இங்கிருக்கிறோம். இம்மாளிகை எம்மிடம் ஒப்புவிக்கப்பட்டுளது. இது தொன்மையதாகையால் நாளுக்கு நாள் பாழடைந்து வருகிறது" எனக் கூறினன்.

அத்தியாயம் III.

—:o:—

வீரலக்ஷ்மி தீரம்

ஒரு மணி காலங்கழிந்ததும், மன்மத சொரூபன் படுக்கையின்மேல் படுத்தவுடனே அயர்ந்து உறங்கினான். வீரலக்ஷ்மி வழி நடையினைப்பால் களைத்தவளாயினும் பார்த்தற்கும் நினைத்தற்கும் பயங்கரமான அவ்வறையில் துயில்கொள்ள மனமில்லாது, சிறிதுநேரம் அவ்வறைக்குள் உலாவித், துயில் கொண்டிருக்கும் மன்மத சொரூபனருகில் வந்து நின்று துயில்வோனை உற்றுநோக்கி "என் பிராண நாதா! உன் முகாரவிந்த மன்றோ என் மனதைக் கொள்ளை கொள்ளத்தக்கது. நின்மேனியோ செங்கனகநிறம். நின்புயமோ எனது நெஞ்சைக் கவருங் காந்தம். நீயோ—கல்விக் களஞ்சியம்; காதற்கடலைக் கடக்கவல்ல கலம்; வலிதிற்கிடைத்த அரும்பொருள்; என் கண்ணுக்கினிய கட்டழகன்; பேசற்கரிய பேரழகன்; வாழ்த்தற்கரிய வடிவழகன்; நின்னை இன்னும் யான் என்னவென்றுதா னியம்புவன்" என்று பலவாறு தன்னில்தானே யுரைத்துருகித் தற்செயலாய்ப் பின்புற நோக்குங்கால் ஒரு மூலையில் சுவரோடு சுவராய்ச் சாய்ந்திருந்த ஒரு மானிட உருவம் புலப்பட்டது. அவள் அதிக அச்சமுடையவளாய் மீண்டும் அதை யுற்று நோக்கும்போது, அவ்வுருவம் உடனே மறைந்தது. சோர்ந்துறங்கும் மன்

மத சொரூபனைத் துயிலுணர்த்திக் கண்டதை யுரைக்கக் கருதினளாயினும் அவன் அயர்ந்து உறங்குவதால் அங்ஙனஞ் செய்யத் துணிந்திலள். பின்பு அவள் தன் மனதை ஒருவாறு தேறுதல் செய்துகொண்டு, தோன்றியது என்னவென்றறியுமாறு அருகில் எரிந்துகொண்டிருந்த விளக்கை யெடுத்துக்கொண்டு அங்குச் சென்றனள்.

சென்றதும் சுரங்கமொன்றிருப்பதாகத் தோன்ற உற்று நோக்கி அதனுட்புகுந்தனள். சுரங்கத்திற்குள் செல்லுதற்குரிய படிகள் வழுவழுப்பாக விருந்தன. அச் சுரங்கத்திலுள்ள காற்று சிறிது கரியமில வாயுவுடன் கலந்திருந்தமையால் விளக்கோ ஒளிவிட்டெரியவில்லை. அங்கே பயங்கரமான அநேக ஆயுதங்களிருந்தன. குற்றவாளிகளின் குடலைப் பிடுங்கத்தக்க சிறிய ஈட்டிகளும், வளைந்த பற்களுள்ள சக்கரங்களும், மனிதர் அவயவங்களை வேறு வேறாகத் துண்டிக்கத்தக்க வேதனை யந்திரங்களும், உட்கார்ந்தவுடன் கரங்களையும், கால்களையும், கண்டத்தையும் இறுகப்பிடித்துத் திக்குமுக்காடச்செய்து கொல்லும்படியான நாற்காலிகளும், மார்பிலணியுங் கவசமும், தொடைக்கவசமும், மனிதரை உயிருடன் தீயிட்டுக் கொளுத்தற்குரிய கருவிகளும், கிழிப்பதற்குரிய குறடுகளும், நசுக்குதற்குரிய பயங்கரமான இயந்திரங்களும் அங்கு நிரை நிரையாக வைக்கப்பட்டிருந்தன. இவைகளைக் கண்டு யாதோ ஒரு தீங்கின் காரணமாய்க் கொண்டு சேர்க்கப்பட்டன இவை என நினைத்தாள். சிறிது தூரஞ் சென்றதன்பின் பரிமள

திரவம் நிரம்பிய அற்புதக் குப்பிகளும், சித்திரவேலை தீர்ந்த சந்தனப் பேழைகளும், மணப் பெண்களணியத் தகுந்த மதாணிப் பதக்கங்களும், முத்துச் சரப்பணிகளும், பற்பல ஆழிகளும் அமைந்துள்ள அணிகலப் பெட்டிகளும் பீடங்களின் மேற்பரப்பில் வைத்திருக்கக் கண்டு, பயங்கரமான இவ்விடத்திலே இத்தகைய விலையுயர்ந்த பூஷணங்களிருப்பதற்குக் காரணம் யாதெனப் பிரமை கொண்டாள். மேலும் அப்பணிகள் மங்கலாயும் அழுக்குப் படிந்ததாயுமில்லை. ஆயுதங்கள் துருப் பிடியாமலிருந்தன, எனவே தினந்தோறும் உபயோகப் படுத்துவனபோல் தோன்றின. இவ்வாயுதங்களும், விலையுயர்ந்த இவ்வணிகலன்களும் நம் முன்தோன்றிய மனிதனுக்கு உரியனவோ வென நினைத்து ஆண்டு நின்றுந் திரும்பும்போது அங்கு மற்றொரு கதவந்தோன்றியது. அக்கதவினருகே சென்றதும் உள்ளே யிருந்து ஒரு வெளிச்சங்காணப்பட்டது. உடனே அவள் பின்வாங்கி மனிதர் குரல் வருமென்று சில நேரம் அரவமெழா திருந்தும் வராததால் தீரமுடன் கதவைத்திறந்தாள். அந்தோ! அவள் கண்ட பயங்கரமான காட்சி அவளது குடலையும் நடுங்கச் செய்தது.

எற்புச் சட்டகம்.

அக்காட்சி என்னவெனில், மூன்று எலும்பு உருவங்கள். ஒவ்வொரு உருவமும் கையில் ஒரு ஈட்டி கொண்டிருந்தது. சிறிது நேரம் அவற்றை நிதானித்து நோக்கி, 'தெளியு முன் கொண்டிடேல் தெளிந்த பின்

ஐயுறேல்' என்ற வாசகம் உணர்ந்தவளாதலால் கையில் ஈட்டி கொண்டுள்ள காரணம் யாதென்றும், அவற்றின் சிரமேல் ஒவ்வொரு விளக்கு ஏன் தொங்கவிட்டிருக்கிற தென்றும் ஆராய்ந்துணர அவற்றினருகே சென்றனள். சென்றதும் நடு உருவம் தனது வலது கையைத் தூக்க, அதைக் கண்டு மிகவும் நடுநடுங்கி முன் செல்லாது பின் வாங்கினள். உடனே தசையற்ற அந்தக் கை முன்னைய நிலைமையை யடைந்தது. சில நிமிஷத்திற்கெல்லாம் அவ் வுருவம் மீண்டும் தூக்கவே வீரலக்ஷுமி பயந்து அவ் வறையை விட்டு மன்மத சொரூபன் சயனித்திருக்கும் அறைக்கு ஓட வழிதெரியாது மற்றொரு அறைக்குள் நுழைந்தாள். நுழைந்ததும் அவ்வறையின் மேலண்டை புறத்தில் ஒரு பெண்பால் வரக்கண்டு "ஐயோ! என் செய்வேன்: 'கேடுவரு முன் மதிகெட்டுவரும்' என் பதற்கிணங்க மதிகெட்டு ஏன் இங்கு வந்தோம். பாக் கியம் வருவதுபோல் தோன்றுகின்றதே. அறையை விட்டு வெளியே செல்லேலோமென்று சோமனுக்கு வாக் குறுதி தந்ததன்றி அநேக நீதிகளையும் புகன்றனமே. இவள் இப்போது நம்மைப் பார்க்கின் யாதுசொல்வாள்." எனப் பலவாறாக நினைத்துப் பிறகு "நாம் நினைத்தபடி பாக்கியமாயின் நல்லது: பிறராயின் கெடுதியே விளை யும். நம்பொருட்டுச் சோமன் உயிரிழக்க நேருமே. ஆ! தெய்வமே! என்று தன்னைத் தாநொந்து அங்குத் தொங்கவிட்டிருந்த ஒரு திரையருகில் பதுங்கி யிருந் தனள். சிறிது நேரத்திற்கெல்லாம் வந்தவள் பாக்கிய மல்லவென்றும் ஓரழகிய மாதென்றுந் தேர்ந்தாள்,

நூறு கன்னியர்களில் ஒருத்தி.

இம்மாது பதினெண் பருவத்தினள். பெருந்தன்மையும், கௌரவமுமுள்ளவள். கன்னிகைக்குரிய உடை உடுத்திருந்தனள். அவள் சந்திரவதனமும், பவழவிதழும், வளைந்தபுருவமும், முத்துப் பற்களும், மாந்தளிர் மேனியும், கொடியிடையும் உடைய ரூபசௌந்தரி. இத்தகையாள் அதிக துக்கமுடன் அவ்வறைக்குள்ளிருந்த ஒரு நாற்காலியின் மேல் வந்து உட்கார்ந்து தனக்குத் தானே "ஓ துரதிர்ஷ்டம் பிடித்த மனோரஞ்சிதமே! தப்பிப் பிழைக்க முடியாத காலையில் நீ தப்பிப் பிழைக்க முயல்வது என்ன மடமை: என்ன பித்து! என்னைக் கவர்ந்திருப்பது துரதிர்ஷ்டமே!: சுந்தரானந்தா! என் கண்மணியே! எங்குற்றனை? யாம் முற்றும் பிரிந்தோமேயாவோம். நீ உன் ரஞ்சிதத்தைப் பார்க்கும் எண்ணம் முற்றும் மறந்தனையோ?: அல்லது உள்ளம் என்னால் குறைவடைந்ததால் உயிர் நீத்தனையோ? ஐயோ! நான் நினைக்க நினைக்க என் மனம் அலமருகின்றதே!" என்றழுது 'எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டால் பயன் என்'என்று தனக்குத்தானே தேறினள். இப்படி அவள் துக்கப்படுவதை ஒற்றுக் கேட்டிருந்த வீரலக்ஷ்மி உளமுருகி அவளைத் தேறுதல் செய்ய நினைத்தாளாயினும், சோமனுக்குரைத்த வாக்குறுதி பின்னப்படுமெனஉன்னி நின்றாள். சில நிமிஷஞ் சென்றபின் மனோரஞ்சிதம் அவ்விடம் விட்டகலுகையில் ஒரு பெருந் தகைமையுடைய பெரியார் அவ்வறைக்குள் நுழைந்தார், அது கண்டதும் அவளுடல் அச்சத்தால்

நடுங்க, அக்கிழவர், "நங்காய்! என் பொருட்டு நடுங்கல் வேண்டா. நின் காதல் காரணமாய்க் கூறிய அனைத்தும் என் செவிப்பட்டது. உனது எண்ணம் எவ்விதத்திலும் முற்றுப் பெறும்" என்றார். "ஆ! முற்றுப் பெறும்! எங்ஙனே? ஐய! எவ்வுயிரும் நும்முயிர் போலெண்ணி யிரங்கும் பெரியீர்! நீர் அருள் சேர்ந்த அகத்தினராகையால், இருள் சேர்ந்த இன்னா உலகம் புகுதலில்லை; நீர் யாவராயினுமாகுக. 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல்' என் முன் தோன்றினீர். என் மேல் கிருபை புரிக. யான் எனதில்லம் விட்டு நீங்கி நெடுநாளாயது. நும்மிடம் இரக்கமே குடிகொண்டுளது,—

'கலையெலா முணர்ந்தா னேனும், கரிசறத் தெளிந்தா னேனும்,
மலையென உயர்ந்தா னேனும், மனமய லகன்றா னேனும்,
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனும்,
இலகிய இரக்க மின்றேல் எழுநர கடைவன்'

(தனிப்பாடல்)

என்னும் இயல்பினை இனி துணர்ந்து எளியாட்கிரங்கிய நீர் எம்பிரான் திருவருள் அடைவீர்" எனப் புகழ்ந் தேத்த, "நின் துக்க நிலைமையை உணர்ந்தேன்.

'பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது: பின்னது
அற்றோ ருறுவ தறிக'

(மணிமேகலை)

எனக்கூறி அவளது துக்கத்தை ஒருவாறாற்றி, "நல்லது நீ கூறிய சுந்தரானந்தன் யார்?" என்று வினவ, அவள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் நால்வகைக் குணங்களுமுள்ள மங்கையர்க்கரசி யாதலால் தலை குனிந்து "ஸ்ரீபிரான் பிரபுவின் புத்திரன்" என்றாள். "ஓ! நான் முன்னமே யூகித்தேன். அப்பிரபுவின் ஏகபுத்திரன். அவனை நீ காதலிக்கின்றனையோ?" என, அவள் மறுமொழி மொழியாது "என்ன! இவர் நம் நண்பரில் சேர்க்கத் தக்கவரோ அல்லது விரோதிகளில் ஒருவராகக் கருதத் தக்கவரோ? இதனை யுணராது நமது கருத்தை எங்ஙன மியம்புதல் கூடும்" என்று நினைத்திருக்க, அவர் மொழி அகத்துள்ளதை மறைப்பினும் முகம் அதைக் காட்டுமாதலால், "பெண்கள் நாயகமே! அறிவிலும் நல்லொழுக்கத்திலுஞ் சிறந்தோய்! என்னை நம்ப அஞ்சுகின்றனை போலும். நீ என்மீது எச்சரிக்கையா யிருப் பதைப்பற்றி நின்னை யான் நிந்திக்கவும், நீ என்பால் ஐயங்கொள்ள வேண்டியதென்னவென்று நான் அதிசயங் கொள்ளவுமில்லை. துரதிர்ஷ்டமே நின்னிடங் குடிகொண்டுள்ளது. உனக்குத் தீங்கு செய்ய நான் வந்தவனல்ல. உன் வருத்தம் என்னை வருத்துகின்றதால் நன்மையே புரியவந்தேன்" என, "கருணையங் கடலே! பெரியீர்! என்னை மன்னித் தருளவேண்டுகின்றேன்" என, "வினவும் வினாக்களுக்குத் தாமதஞ் செய்யாது விடைதருதி" என்று வினவத் தொடங்கினார் அப் பெரியார்.

பெரியவர்.—"நீ யார்?" உன் வரலாறென்ன?

கன்னிகை.—"என் பெயர் மனோரஞ்சிதம்; சில வாண்டுகளுக்கு முன்னமே என் தாய் மாண்டனள். தமது ஏக புத்திரியை யிழந்து என் தந்தை உதயபுரத்தில் வசிக்கிறார்."

பெரியவர்.—(அவள் உடுத்திருக்கு முடையை நோக்கிச் சாதாரண வகுப்பினள் எனத் தேர்ந்து) "உன் தந்தை உத்தியோகம் யாது?"

கன்னிகை.—(தந்தையின் உத்தியோகத்தை வெளியிட நாணி) "பொன் வெள்ளி வியாபாரி."

பெரியவர்.—"ஓ! உன் தந்தை தனிகர்: வட்டிக்குப் பொருள் கொடுக்குந் தொழிலினர்: அதிக வட்டி வாங்குதலால் அவரை யாரும் விரும்புகிறதில்லை. இக் காரணங் கொண்டே உன்னை அந்நூற்றுவருள் ஒருத்தியாக எடுத்தனர். உன் தந்தை பொருட்பேய் பிடித்தவர். அவருக்கு அவாவென்பது அதிகம்.

'செல்வ மென்பது சிந்தையி னிறைவே:
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே:
ஐயுணர் வடக்கிய மெய்யுணர் வல்லதை
உவாக்கடல் சிறுக உலகெலாம் விழுங்கும்:
அவாக்கடல் கடத்தற் கரும்புணையின்றே'

என்றார் சிதம்பர மும்மணிக் கோவையார்; மேலும்

'அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து'

என்னுந் தமிழ்மறை அறியார்போலும். அவ்வூரினர்செய லுஞ் சொல்ல வேண்டுவதில்லை. வாங்கும் போதிருக்கும் மகிழ்ச்சி கொடுக்கும்போதிருப்பதில்லை. 'கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை' ஆதலால் நின் தந்தை விரோதியாயினர். சிலர் வட்டியையும் சிலர் முதலையும் புரட்டுவர். சிலர் இரண்டையும் புரட்டுவர். சிலர் 'மூன்று மாதத்திற்கு வட்டியில்லை; அப்புறம் முதலே யில்லை' என்பர். நாட்டின் கொடுமையை இங்கே பன்னிப் பேசுவதால் பயன் என்ன."

கன்னிகை.—"நீர் நிகழ்ந்தன முழுதும் உணர்ந் தவர்" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் விட் டனள்.

பெரியவர்.—"நின் தந்தை காரணமாய் நின்னை நிந்திப்பது தகுதியன்று. அக்காரணத்தால் நான் உன் மீதுள்ள அன்பைக் குறைப்பதுமில்லை. ஸ்ரீபிரான் பிரபு வுக்குத் தன் மகன் உன்னை நேசித்திருப்பது தெரியா தல்லவா?"

கன்னிகை.—"தெரியாது: ஆயினும் அவர் புத்தி ரர் என்னை மணஞ்செய்து கொள்வதாக வாக்களித்திருக் கின்றனர்."

பெரியவர்.—"உன் நிலைமையைச் சுந்தரானந்தன் அறிவனோ?"

கன்னிகை.—"அவருக்கு அது போது தெரி யாது; மூன்று நாள் கடந்தபின்னரே இச்செய்தி

வெளிப்பட்டது. ஆயினும் அம்மூன்று நாள் முன்னரே என் தந்தை மூலமாய்த் தெரிந்திருப்பர்.

பெரியவர்.—" அப்படியா ! உன் தந்தை உம்மிருவர் நட்பை அறிவரோ ! நீ சொல்லிய வெல்லாம் உன் விஷயமாய்ச் செய்வதென்னவென்று நினைக்கச் செய்கின்றன. நின் நேசனை ஈன்றான் மாளிகையிது. இதன் பெயர் ஸ்ரீபிரான் மாளிகை. நீ இங்கு வந்தது யாது காரணம்பற்றி. தப்பிப் பிழைக்க வழி தேடும் பொருட்டோ ?"

கன்னிகை.—" நான் என் காதலனுடன் வார்த்தையாடிக் கொண்டிருக்குங்கால் அவர் இம் மாளிகையைப் பலபடப் புகழ்ந்து பேசுவதுண்டு. இம்மாளிகையின் பூர்வ சரித்திரம் புகலும்போது இங்குச் சுரங்கமொன்றிருப்பதாகவும், அச்சுரங்கத்தில் அநேக அறைகளிருப்பதாகவும், ஒவ்வொரு அறையிலும் அச்சம் விளைவிப்பதான ஆயுதங்களும், விலையுயர்ந்த அணிகலன்களும், வியப்பினை விளைக்கத்தக்க வெவ்வேறு பொருள்களும் இருப்பதாகவும், இம்மாளிகையினின்று அருகிலுள்ள வனத்திற்குப் போக ஒரு வழி யிருப்பதாகவுங்கூறுவர்."

பெரியவர்.—"ஓ ! அக்காரணம் பற்றித்தான் அவ்வழி கண்டு பிடிக்கும்பொருட்டு இங்குத் தனித்து வந்தனையோ ? வழி யொன்றுளதென்று கதையிற் கண்டதுண்டே யொழிய நான் பன்முறை முயன்றுங் கண்டிலேன். அவ்வழி எனக்குப் புலப்பட்டிருப்பின் என்னை நீ இவ்விரவு காணுதலியலுமோ ?"

கன்னிகை.—" என்ன! நீர் குற்றவாளியோ! அங்ஙனமாயின் உமக்கு ஒருவர் உதவி செய்யவேண்டியிருப்ப, எனக்கு நீர் உதவி செய்வது எவ்விதம்?"

பெரியவர்.—"இது பற்றி நீ வியசனப்படவேண்டாம். இங்கு உனக்கும் எனக்கும் நிகழ்ந்த சம்பாஷணையை ஒருவரிடமும் உரையாதே. நீ வந்த வழிச்சென்று சுகமாக இரு. விலங்கிட்டாற்போல் என்னைப் பிணித்து வைத்திருப்பினும் உன்னை விடுதலை செய்யுஞ் சூழ்ச்சி தேடுகிறேன். என் கையிலுள்ள மோதிரத்தை நன்கு கவனி. நீ இதை மறுமுறை நோக்கின் இதுவே என்று உணர்தல் வேண்டும். இக்கோட்டைக்கும் மகம்மதியர் இராஜதானியாகிய ஐதராபாத்துக்கும் இடைவழியில் எவரேனும் ஒருவர் இம்மோதிரத்தை உனக்குக் கொணர்ந்து காட்டுவர். காட்டுபவர் ஆண்பாலரேனும் பெண்பாலரேனும் அவர்பால் நம்பிக்கை வைத்து அவர் சொல்லும் வண்ணம் நடந்துகொள்."

கன்னிகை.—"ஐய! அங்ஙனே செய்கிறேன். நீர் செய்ய விரும்பிய உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்வேன். திங்கள் கறையிருளை நீக்கக் கருதாதுலகில் நிறையிருளை நீக்குவதுபோல நீர் உம்முடைய குறையைத்தீர்க்க முயலாது எம்போல்வார் வெங்குறை தீர்க்க முயல்கின்றீர். உமது குணமே உத்தமகுணம். உமது அருளே தண்ணருள்" எனப் பலவாறு புகழ, அப்பெரியவர் "என்னைப் புகழவேண்டுவதில்லை. உலகப் பொருட்கெலாம் உயிரென நிற்கும் பரம்பொருள் நிய மனப்படி நடக்கின்றேன். வியசனப்படேல்; இம்மோ

திரத்தின்மேல் கியாபகம் வைப்பாயாக" என்று சொல்ல மனோரஞ்சிதம் வந்தவழிச் சென்றாள்.

கை யேட்டுப் பிரதி.

இருவருக்கும் நடந்த சம்பாஷணை முழுதும் வீரலக்ஷ்மி ஊக்கமுடன் உற்றுக்கேட்டு, சிறிது நேரம் அங்குமிங்குந்திரிந்து, மனோரஞ்சிதத்திற்கு உதவி செய்வதின் காரணமாய் அப்பெரியாரிடம் பேசுதல் அல்லது மன்மத சொரூபன் துயிலுமிட மேகுதல் ஆகிய இவ்விரண்டனுள் செய்யத்தக்கது என்னவென்று நினைத்து முன்னதையே முடிக்கத் துணிந்தாளாயினும், சோமனுக் குரைத்த வாக்குறுதி யழிவுறு மென்றும், அப்பெரியார் அக்கன்னிகையை நோக்கி 'நம்மிருவருக்கும் நிகழ்ந்த சம்பாஷணையை ஒருவரிடமு முரையாதே' என்று சொன்னதை நினைத்தும் தனது இரண்டாவ தெண்ணமே நிறைவுறும் வழி நோக்கும்போது தற்செயலாய் ஒரு அறைக்குள் நுழைந்தாள். அங்கு ஒரு சமாதி தோன்றியது. அச்சமாதியினொரு புறம் செதுக்கப்பட்டிருந்த ஒரு சிலா சாசனம் புலப்பட "இதிலும் நூறு கன்னியர் என்றிருக்கின்றதே. நாம் முன்னம் பார்த்த மனோரஞ்சிதமும் இங்குக் குறித்துள்ள நூற்றுவருள் ஒருத்தியே யாம்" என நினைத்து அங்குள்ள மேஜையின் அறையை யிழுத்தனள். அதனுள் கையேட்டுப் பிரதி யொன்றிருந்தது. அவ்வேட்டில் பின் வருமாறு வரைந்திருந்தது.

1106-ஆ முகுந்தன் என்பானொருவன் மாளவ நாட்டிற்கு அரசனானன். இவன் குலசேகரன் மகள்

விசாலாக்ஷியைக் காதலிக்க, அதன் பலனாய் ஒரு மகவு உண்டாயிற்று. அம்மகவை ஓர் இடையனிடத்தும் அவ னில்லாளிடத்தும் ஒப்புவித்தனன். இவர்கள் அம்மகவை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர் த்து வந்தனர். அரசன் விசாலாக்ஷியை விதிப்படி மணம் புரியேனென்று அவமதித்த அவமதிப்பைக் குலசேகரன் சகியானாகி, மகம்மதிய ஜாதியாரை மாளவ நாட்டின் மேல் படையெடுக்க ஏவினான். போர்வீரனான டாரிக் என்பான் பெரிய சேனையுடன் மாளவத்தைச் சேரவே குலசேகரனும் உடன் சேர்ந்தான். இருதிறத்தாருக்கும் 1110 ஹூ த்தில் தபதி நதி தீரத்தில் பெரும்போர் விளைந்தது. மாளவ நாட்டினர் முற்றுந் தோல்வியடைய யவே, முகுந்தன் காயம்பட்டு விரைந்தோடி ஸ்ரீபிரான் மாளிகையில் மறைந்திருந்தனன். அயலவரைக்கொண்டு தன்னாட்டுக்குத் தீங்கிழைத்த குலசேகரன் நாணமுற்று விந்திய மலைகளின்மேல் திரிந்துகொண் டிருக்கையில், அவன் சிறை செய்யப்பட்டு ஸ்ரீபிரான் மாளிகையில் கொலை செய்யப்பட்டான். அவனது அருமைப் புதல்வி தன் தந்தையைக் காக்க முயன்றும் பயன்படா தொழிந் தமையால் மனம் வருந்தி யிறந்தாள். போரில் காயப் பட்டதன் காரணமாய் முகுந்தனும் மரணமடைந்தனன். மாளவப் பிரபுக்கள் தங்கள் ஊர்முழுதுங் கவர்ந்த மகம் மதியருடன் வாதாடி வழக்குரைத்து மூன்று ஊர்களைக் கைக்கொண்டு தனதத்தனை அரசனாக்கினர். அவன் 1135 ஹூ த்தில் மகம்மதியருடன் போர் புரிந்து கௌர வமாய் இறந்துபோயினான். அவனுக்குப் பின் குண

சீலன் அரசாண்டான். அவனுக்குப் பின் கருணாகர னும், தருமனும் முறையே அரசு புரிந்தனர். முகுந்த னுக்கும் விசாலாக்ஷிக்கும் பிறந்த பிள்ளை இடையனில் லத்திலிருந்து வளர்ந்து அவர்கள் பெண்ணை மணம்புரிய, பிரதாபசீல னென்ற பிள்ளை 1148ஆ பிறந்தது. பிர தாபசீலனோ வீர தீரமுடையான். இருமுறை மகம் மதியர்மேல் படை யெடுத்துச் செல்ல அவனைச் சிறை செய்து நந்தய புரத்திற்கு அனுப்பினர். அங்கே சில காலமிருந்து பின் தப்பித்துக்கொண்டு தன்னூர் சேர்ந் தான். 1181ஆத்தில் தருமன் இறந்தமையாலும், அவனுக்குப் பிள்ளைப்பே றில்லாமையாலும் இவன் அரசனானான். உடனே மகம்மதிய அரசனாகிய அப்து ராமன் என்பான் இவன்மேல் படையெடுக்கவே, இவன் அப்துராமனைத் தோற்கடிக்க இயலாது மானமின்றி ஓர் உடன்படிக்கை செய்தனன். அவ்வுடன்படிக்கையின் மகுடம் யாதெனில், 'நூறு கன்னியராலாய ஒற்றுமை' என்பது. இக்காரணத்தால் அவன் 1188ஆ ஸ்ரீபிரான் மாளிகையில் சிறை செய்யப்பட்டு 1191ஆத்தி லிறந் தான்." என்று எழுதி யிருந்தது. படித்து முடிந்த வுடன் ஒரு சத்தங்கேட்டது, உடனே இவள் பயந்து அக்கையேட்டுப் பிரதியை அம்மேஜை யறைக்குள்ளே யே வைத்துவிட்டுத் திரும்புங்கால் ஆண்டு ஓரறைக்குள் வெளிச்சந்தோன்ற ஆங்குள்ளது என்னென உணர அங் குச் சென்றனள். சென்றவிடத்து ஒரு மனிதனது தலையைக் கண்டனள்.

மாயத் தலை

இது வெண்மையாகிய கல்லினால் செதுக்கப்பட்டிருந்தது. அதனருகே மேஜையின்மேல் ஒரு விளக்கும், ஒரு புத்தகமுமிருக்கக் கண்டாள். அப்புத்தகத்து ஒவ்வொரு ஏட்டின் முகப்பிலும் "மாயத்தலையின் புத்தி கூர்மை"! என்றெழுதி யிருந்தது. அப்புத்தகத்தில் விரித்து வைத்திருந்த பக்கத்தைப் படிக்கும்போது, அம் மாயத்தலை கூறியதாக அடியில் வருமாறு வரைந்திருந்தன.

ஆகாரஸத்ருஶப்ராஜ்ஞஃ
ப்ராஜ்ஞயாஸத்ருஶாகமஃ
ஆகமைஃ ஸத்ருஶாரம்பஃ
ப்ராரம்பஸத்ருஶோதயஃ

(ரகுவம்ஶம்).

(பொருள்) உருவத்திற்குத் தகுந்த அறிவு:
அறிவிற்குத் தகுந்த கல்வி:
கல்விக்குத் தகுந்த முயற்சி:
முயற்சிக்குத் தகுந்த பலன்.

'புத்தி கூர்மையுடையான் அப்புத்தியால் பயனெய்தானாயின் புத்தியிருந்தும் பயனென்ன? புராதன சாஸ்திரங்களைப் பூராவாக வுணர்ந்து, பாஷைகளுங் கைவந்து அவற்றின் பயனாகிய சிறந்த புத்தியையும், அநுபவ சித்தியையும் ஒருவனுடையனாயின் நற்பதவி யடைவான். அவனது புத்தியும் தைரியமும் சமயோசிதமாயின் உண்மையாய் அவன் தன் எண்ணத்தை நிறைவேற்றுவான். ஆனால் சாஸ்திரப் பயிற்சியும், பாஷாக் கியானமும், அநுபவ

சித்தியும் ஒருத்தி உடையளாயின் உன்னத பதவியடைவாள். அவளது புத்தியும், அழகும் சமமாயின் அவள் தனது எண்ணத்தை நிறைவேற்றுவாள்' என்றிருக்க, அதிக மகிழ்வடைந்து 'இவை மன்மத சொரூபனுக்கும் வீரலக்ஷ்மிக்குந்தான் உரியனவோ' எனச் சிறுகுரலாகக் கூறிப் பின்னும் வாசிக்க,

'என் வாயினின்று வரும் வார்த்தைகள் நெருப்புப் போன்றவை. எனது நா பனிக்கட்டி போன்றிருந்தும் உச்சரிக்கும் சொற்களோ மின்னல் போன்றவை. நான் சொல்லும் சொற்கள் எல்லாக் காலங்களிலும் எல்லா வேளைகளிலும் உபயோகிக்கும் புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளன. வெண் கல்லால் செதுக்கப்பட்ட தலையாகிய நான்-தான் முதல் முதல் அறிவு புகட்டும் சொற்கள் கூறியவன். என்போலுந் தலைகள் பேசுந்திறமை யுள்ளனவல்ல. நானே ஆதி: நானே அந்தம்.' என்றிருக்கப் பயந்து 'ஆ! இந்தத் தலைக்குப் பேசுந் திறமையுமுளதோ? என ஐயங்கொண்டாள்.

பின்பு வீரலக்ஷ்மி அத்தலையைக் கவனித்து நோக்கும்போது, அது "பெண்ணே! நீ அச்சிறந்த புத்தகத்தில் பார்த்தது என்ன?" என்று உரத்த குரலுடன் கேட்க, அவள் நடுங்கினளாயினும் ஆண் மகனுக்குரிய தீரமோடு நின்று தான் படித்த யாவும் அதற்கியம்ப, அத்தலை, "வீரலக்ஷ்மி! பெரியோர் சொல்லுஞ் சொல்லைச் சிரசாக வகித்து நீ பிரவேசிக்கும் காரியங்களில் ஊக்கமும், புத்தியும், தைரியமும் காட்டுவையாயின் ஜயமே நின் முன் நிற்கும். உன் எண்ணம் நிறைவேற

அளவிறந்த இடையூறுகள் நேரிடும். அக்காலங்களில் உன் புத்தியை நன்கு செலுத்தி அவ்விடையூறுகளை யகற்றுதல் வேண்டும். அறிவினையுடையார் அனைத்தும் உடையாராதலால் இப்போது என்னிடம் விட்டகலுக. நான் இனிப்பேசேன்.'' என்றது. வீரலக்ஷ்மி "ஆ! என் பெயரை இது உணர்ந்ததெப்படி?'' என நினைத்து அவ்விடத்தை விட்டு நீங்கும்போது ஒரு விளக்கு வெளிச்சம் தன்முன் தோன்ற அங்குச் சென்றனள். அங்குத் தான் முன்னங்கண்ட பெரியார் நாற்காலிமே லிருக்கக்கண்டு செய்வது இன்னதென அறியாது அவருக்கு மிகுந்த விநயமுடன் வந்தனஞ் செய்தாள். அவரும் அவளை வரித்துத் தன்னருகே உட்காரவைத்தார்.

பெரியவர்.

இப்பெரியவர் "வீரலக்ஷ்மி! இக் கங்குலில் நீ கண்டதுங் கேட்டதுங் கணக்கில அல்லவா?'' என, வீரலக்ஷ்மி! தன் பெயர் இவருக்கு எவ்வாறு தெரிந்ததெனத் திகைத்து "கண்டேன்: கேட்டேன். இவைகளைத் தங்கள் திருவாக்கால் எனக்கு நன்கு விளக்குதல் வேண்டும்'' என்று இரந்து வேண்டினள். "நன்று: நீ கண்டதையுங் கேட்டதையும் நான் உணர்வேன். நீ கபடமின்றி முறைபடச்சொல்லி வருவாய்''என, அவள் சில நேரம் யோசித்துச் சில வினாக்களை வினவுவாளாயினள்.

1. "நூறு கன்னியர் என்பதன் விவரமும், சோமன் எனக்கும் என் நண்பனுக்கும் இங்கு இன்றிரவு

தங்க இடமளித்தது தன்னுயிருக்கே ஆபத்து எனக் கூறியதும் என்ன ?

2. " அச்சமும், ஆச்சரியமுந் தரத்தக்க ஆயுதங்களையும், விலையுயர்ந்த பூஷணங்களையும் இங்கே சேமித்து வைத்திருப்பதன் காரணம் யாது ?

3. "மூன்று எற்புச் சட்டகங்களுள் நடுவிலுள்ளது கையில் ஈட்டியைப் பிடித்துத் தூக்கியதெப்படி ?

4. " கல்லால் செய்த தலை பேசுந்திறமை வாய்ந்ததெங்ஙனம் ?

5. " நீர் யார் ? இம்மாளிகையில் தனித்து வசிப்பதன் காரணமென்ன ? " என்று கேட்க,

அப்பெரியவர் இவ்வினாக்களனைத்தையும் உனக்கு விளக்க இது காலமன்று. உன் முதல் வினாவுக்கு மாத்திரம் விடையளிக்கின்றேன். இது நிற்க. " நீ கையேட்டுப் பிரதியைப்பற்றி மறந்தனையோ " என, " ஆம் ! ஐயா ! யான் மறந்தேன் " என்று கூற, " அப்பிரதியில் நூறு கன்னியராலாய ஒற்றுமை " என்றெழுதி யிருந்ததல்லவா ? அவ்வுடன்படிக்கை நேர்ந்த காரணம் யாதெனில், அப்துராமன் போர் புரியச் சேனையுடன் புறப்பட்டுச் செல்லும்போது, பிரதாபசீலன் அவனுடன் யுத்தஞ்செய்ய முடியாமல் சமாதானஞ் செய்யவே, வருஷந்தோறும் நற்குடிப் பிறந்த நூறு கன்னியர்களை அனுப்பின் மாளவதேயத்தார்க்கு யாதொரு தீங்குஞ் செய்வதில்லையென்று அப்துராமன் கூறலும், அதற்கு

அவன் உடன்பட்டான். அப்துராமனும் தன் சேனையுடன் தன் நகரமடைந்தான். இதன் காரணமாகப் பிரதாபசீலன் 1188-ஆ பட்டத்தினின்று நீக்கப் பட்டானாயினும் அந்நாட்டினர் மகம்மதியருக்குப் பயந்து வருஷந்தோறும் நூறு கன்னியர்களை யனுப்பி வந்தனர்.

அப்துராமன் மரித்ததன் பின் அவன் செல்வச் சிறுவன் பட்டத்திற்கு வந்தான். மாளவ நாட்டினர், " வருடந்தோறும் உயர் குடிப்பிறந்த ஐம்பது கன்னியர்களையும், இழி குடிப்பிறந்த ஐம்பது கன்னியர்களையும் அனுப்ப உத்தரவளிக்கவேண்டும்" என்று மனு செய்து கொள்ளவே அங்ஙனே அனுமதி கொடுத்தான். பிரதி வருடமும் வசந்தகாலத்தில் மாளவ நாட்டரசன் கன்னியர்களைத் தேர்ந்தெடுக்க இரண்டு விசாரணைத் தலைவர்களை நியமிப்பான். நூற்றுவர் சேர்ந்ததன் பின் ஐதராபாத்துக் கனுப்புவர். கன்னியர்களைச் சேர்த்த அந்தத் தினமுதல் ஐதராபாத் அரசனுக்கு அவர்கள் உரியவரென்று கருதப்பட்டவராதலால், தங்கள் நண்பரோடும், உறவின் முறையாரோடும் அல்லது தங்களால் நேசிக்கப் பட்டவரோடும் பேசுதலொண்ணாது என்றும், வழிப் போக்கராவது, அயலாராவது, மற்றும் எப்பிரயாணிகளாவது இக்கன்னியர்கள் தங்குமிடங்களில் அணுகவொண்ணாதென்றும், அப்படித் தவறி நடப்போர் எத்தகைய உயர்ந்த நிலையிலிருந்த போதிலும் பிராணனையிழப்பர் என்றும் இந்நாட்டரசன் ஸ்ரீபாதன் கடினசட்டமேற்படுத்தி யிருக்கிறான். அயல் கிராமத்திலுள்ள அநேக குடிசைகள் அழலால் அழிந்துபோனதால் சில

கன்னியர்கள் இம்மாளிகையில் முதன்முறை தங்கியது இவ்வருடந்தான். இக்காரணம்பற்றியே சோமன் அங்ஙனஞ் சொல்ல நேரிட்டதென்று கூறலும், வீரலக்ஷ்மி "உண்மையாய் எமக்கு அவன் பேருதவி செய்தவனே யாகின்றான். ஆனால் மனோரஞ்சிதம்.........கபடமற்ற கட்டழகி........." என்று மாத்திரமியம்பி, தன் எண்ண முற்றும் இயம்பாதிருந்தனள். "அவனைத் தப்புவிக்க வேண்டும். நானும் அம்மாதும் பேசுங்கால் நீ கேட்டிருந் தாயல்லவா? நீ பெருமையும் கௌரவமும் அடையத் தகுந்த காரியத்தில் பிரவேசிக்கிறபடியால் நீ அதைச் செவ்வனே செய்து முடித்தல்வேண்டும்" என்று அப் பெரியவர் கூற, "அம்மாயத்தலை கூறியது என்மனத்தை மேன்மேலுந் தூண்டுகின்றது. அம்மாதுக்கு உதவிசெய் யும் வழியை எனக்குத் தெரிவிப்பீரானால் அங்ஙனே செய்வேன்" என்றாள். அதற்கு அப்பெரியவர் "நீ அக்கன்னியர் நூற்றுவருள் ஒருத்தியைத் தப்புவிக்க முயலுமுயற்சி பிறர் அறியின் உயிரே போய்விடும்" என, "யான் என்னுயிரைப்பற்றிக் கவனித்திலன். இந்த உடம்போ புன்புலால் நரம்பு என்புடைப் பொய்யுடல்; இதனைப் பெரியோர் நிலையெனக் கொள்வரோ! இது நீரில் பிறந்தழியுங் குமிழி யல்லவோ! நேற்றிருந்தார் இன்றில்லையே!

> இளமையு நில்லா யாக்கையு நில்லா:
> வளவிய வான் பெருஞ் செல்வமு நில்லா:
> மிக்க வறமே விழுத்துணை யாவது'
>
> (மணிமேகலை)

ஆதலால் மின்போல்தோன்றியழியும் உடல்கொண்டு அல்லவை கடிந்து நல்லவை செய்து அழியாப் புகழுடம்பை அடைதலே உத்தமம். மேலும், 'பெரியோர் சொற்படி நடந்துகொள்' என்று அத்தலை கூறிய சொல்லே என் மனத்தில் நிலைத்திருப்பதால் உமது மூலயாய் அவனைத் தப்புவிக்க உபாயந்தேடுகிறேன்" என்றாள். "இது நிற்க; உன்னுடன் வந்திருப்பவன் யாவன்? உன் காதலனோ?" என, வீரலக்ஷ்மி மன்மத சொரூபனை முறைப்படி அதுகாறும் மணஞ்செய்து கொள்ளாமையால் நாயகனென நவிலநாணித் தலை குனிந்து நிற்க, "நீ நவிலுதற்கு நாணுதல் வேண்டாம். அன்பு நூலாக இன்சொல் அலர் தொடுத்தமைத்த காதல் கன்மனத்தையும் கரையச் செய்யும்; தைரிய முற்றானைத் தைரியமற்றானுக்கும்; வலியுள்ளானை வலியிலனாக்கும்: அதன் வயப்பட்டோர் மருளுடையாரல்லர், அருளுடையாரே யாவர். குற்றங் கூறார்: நற்றமே நாடுவர். மன்மத சொரூபன்..........." என்று முடிக்காமுன், வீரலக்ஷ்மி, "என்ன! அவர் பெயரும் உமக்குத் தெரியுமோ! எமக்குரிய இரகசியமும் உமக்குத் தெரியும்போலும்: தெரியுமேல், சுவாமி! பிறரிடம் பேசாதொழிக" என, அவளது வார்த்தையின் நுட்பத்தால் இவ்விருவரும் ஊரைவிட்டோடி வந்தவர் என யூகித்து, "உமக்குள்ள இரகசியம் எல்லாந் தெரியும்: அயலவர்பா லறையேன்; இது சரதம். நும்மிருவரைப்பற்றி அம்மாயத் தலையின் மூலமா யுணர்ந்தேன். உமது இரகசியம் எனக்குத் தெரியும், அத்தலை நடந்ததைச் சொல்வதோடு நடப்பதையுஞ்

சொல்லுந்திறமுடையது" என, வீரலக்ஷ்மி "போதும்! போதும்!! விவரிக்கவேண்டுவதில்லை. சுவருக்குஞ் செவி யுண்டு. எவரேனும் ஒற்றுக் கேட்பினுங் கேட்பர். நீர் முற்றும் உணர்ந்தவரே யாவர்" என்று கூற "சரி; நீ கூறுவது நன்றாயிருக்கிறது. என்னைப்பற்றி எனக்கொன் றுந் தெரியாது. மனோரஞ்சிதம் என்னைக் குற்றவாளி யென்று கூறும்போது ஒற்றுக் கேட்டிருந்தாயல்லவா? என் நிலைமையை உன்னிடம் இயம்ப இயலாது. மாயத் தலை என் நன்மையைக் குறித்துப் பேசினதே யில்லை" என்று சொல்லிச், சிறிது நேரமான பின் "வீரலக்ஷ்மி! வெகு நேரமாயிற்று. இனிக் காலதாமதஞ் செய்யாது போதல்வேண்டும். ஆனால் நீ போகு முன் ஒன்றுகூற வேண்டியிருக்கிறது. அதாவது நீ உன் காதலனிடம் இன்றிரவு கழித்த விவரமுழுதும் விளம்புவையேல் உன் காரியம் நிறைவுறாது. பெண்பாலர் தமதெண்ணத் தைக் கணவர் மூலமாய் நடத்த உத்தேசிப்பராயின், அவர்கள் அனுசரிக்க வேண்டிய வழி ஒன்றுளது. ஒரு பெண் தன் எண்ணத்தை முடிக்க வேண்டின் அதனைத் தன் கணவனிடங் கூறினால் எங்குப் பழுது படுமோ! அக்கணவன் ஒரு கால் செய்யேனென்று செப்பிவிடின் செய்வதொன்று மில்லாது போமே யென நினைத்துத் தன் எண்ணத்தை முன்னங் கூறாது அவனிடம் இன் சொல் பேசி எப்பணியால் தன் காதலன் இன்புறுவனோ அப்பணியால் அன்னவனை அன்புறுத்தி மனங்கசியும் வண்ணம் மகிழ்வித்துப் பின் தன் எண்ணத்தைச் சிறிது சிறிதாக அவனுள்ளத்தில் புகச்செய்து தன் கோரிக்கை

நிறை வேற்றுவாள். 'மீன் குஞ்சுக்கு நீச்சு கற்றுக் கொடுப்பானேன். இருளன் பிள்ளைக்கு எலிபிடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டுமோ'; உனக்கு இதைக் கூற வேண்டுவதில்லை. இயற்கையா யமைந்ததே: இத்தகைய திறம் பெண்பாலர் உடைய ரென்று அறியா ஆடவர், அவர்கள் கூறுவதில் நம்பிக்கை வைத்து அவர் சொற்படி நடக்கின்றனர். ஆகையால் சூரியன் உதயமானதும் இக்கோட்டையை விட்டுப்போகுங் கால், சிறிது சிறிதாக நீ கண்டனவும் கேட்டனவும் அவனிடஞ் சொல்வாய். அவனே உன் எண்ணத்தை நிறைவேற்ற உன்னைத்தூண்டச் செய்'' என, வீரலக்ஷ்மி "ஆஅ! இப்பெரியவர் அசாத்தியர், பெண்கள் திருட்டும் புரட்டும் நன்குணர்ந்தவராக விருக்கிறார்'' என நினைத்துத் தலை குனிந்து நிற்க, பின்னுஞ் சொல்லுவார்: "பெண்கள் நாயகமே! மனோரஞ்சிதம் தப்பி யுய்யும் வழி உனக்குச் சொல்வதாகச் சொன்னேனல்லவோ? சொல்கின்றேன் கவனமுடன் கேட்பாய். நாளைக்காலை இம்மாளிகை விட்டு நீங்குங்கால் மன்மத சொரூபனுக்குத் தெரியாமல் சோமன் என்பவன் முன்னங் காட்டிய இரண்டாவது அறையில் நுழைவாயாகில் அங்கொரு மூலையில் முத்திரித்திருக்கும் முடிப்பொன்று அகப்படும். அதை எடுத்து ஜாக்கிரதைப் படுத்து. நீ போகும் வழியில் எங்கேனும் வைத்து விடாதே. நீ ஔரங்கபாத்தைச் சேருமுன்னர் அம்முடிப்பை யவிழ்க்கக்கூடாது. அவ்வூரை யடைந்ததும் அதன் மேற் கட்டியுள்ள பட்டுக் கயிற்றை யறுத்தபின் ஒரு உறைக்குள் ஒரு கடிதம்

இருக்கக் காண்பாய், அதில் எழுதியபடி நடந்து கொள்: அதுவே மனோரஞ்சிதத்தைக் காக்குஞ் சூழ்ச்சி. நற்காரியஞ் செய்யின் வரும் இடையூறுகள் எண்ணிறந்தன. 'இடுக்கணில் தளரார் எண்ணிய முடிப்பார்'. ஆதலால், நீ அவற்றைத் தைரியமுடன் விலக்குவையாயின், உனக்கு ஜயமே யுண்டாம். அவைகளை விலக்காவிடின் உன் உயிரே போம்,'' என்று அவளுக்குப் பலபடப் பகர்ந்து அவ்வறைவிட் டகன்றார் அப்பெரியார். வீரலக்ஷ்மியும் மன்மத சொரூபன் துயிலு மிடமேகினாள். அவன் அயர்ந்துறங்குவதைக் கண்டு நெடுநேரம் உறங்காமையால் தானும் உறங்கினாள். இவள் படுத்த சிறிதுநேரத்திற் கெல்லாம் மன்மத சொரூபன் துயிலுணர்ந்து, அவள் மற்றொரு கட்டிலின்மேல் அயர்ந்துறங்குவதைக்கண்டு அவளருகே நின்று நினைப்பான் ''இவள் முகத்தை நோக்கின் ஜோதி வீசுகின்றதே! கொவ்வைக் கனிபோன்றதே இவள் அதரம். ஆரணங்கே! என்னை அணங்குக் குள்ளாக்கினை. காரிகையே! நின்காரிகை என் நெஞ்சத்தைக் கவர்ந்தது. வல்லிக் கொடியே! மதிநுதலே! இன்னும் உறங்குவதென்னோ?'' என்று பலவாறு தன் மனதில் நினைத்து மீண்டுஞ் சயனிக்கச் சென்றனன். பொழுது புலர்ந்ததும் இருவரும் நித்திரை விட்டெழுந்தனர்.

மன்மத சொரூபன் அங்குக் கிடந்த ஒரு கடிதத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருக்க, இச்சமயமே நற்சமயமெனக்கருதி அக்கிழவர் குறித்த விடஞ் சென்று அச்சிறு முடிப்பை யெடுத்து ஜாக்கிரதையாக வைத்துக்

கொண்டு, மனோரஞ்சிதத்திற்கும் அப்பெரியவருக்கும் நடந்த சம்பாஷணை முழுதுங் கேட்டிருந்தாளாகையால், அம் முடிப்புக்குள் அவர் மோதிரம் இருக்க வேண்டு மென்று நினைத்து, உடனே செல்லின் தன் காதலன் சந்தேகங்கொள்வனென அஞ்சி, சிறிதுநேரம் அங்குமிங்குஞ் சுற்றிப் பார்ப்பதுபோல் பார்த்து, அவனருகே சென்றனள். இவ்விருவரும் தாங்கள் செல்ல வேண்டிய இடத்தைக் குறித்துப் பேசத் தொடங்கினர். வீரலக்ஷ்மி, "ஔரங்கபாத்து, நந்தயபுரம், கோலகொண்டா முதலிய விடங்களுக்குச் செல்லவேண்டும்" என்று கூறலும், அவன், "அங்குச் செல்வதினால் பயனென்ன? வேறு தேசங்களுக்குச் சென்றால் அநேக அற்புதக்காட்சிகள் காணலாம்" என்று சொல்ல, வீரலக்ஷ்மி "ஓ! களங்கமின்றி இதுகாறும் பேசிய யான் இன்று களங்கமுடன் பேசவேண்டியிருக்கிறதே" என்று ஐயுறவெய்த, மன்மதசொரூபன் அவள் முகக்குறிப்பை நோக்கி, ஒளித்துப் பேசுகிறாளென வுணர்ந்து "இரகசியமோ? என்னிடம் இயம்பக்கூடாததோ?" என, வீரலக்ஷ்மி, "இல்லை, இல்லை. நேற்றிரவு சொப்பனத்தில் ஒரு பெரியவர் என்னருகே வந்து நான் சில நாளைக்குள் நூறு கன்னியர்களின் காரணமாய் அல்லது அவர்களுள் ஒருத்தியின் காரணமாய்க் கௌரவமடைவேனென்றும், அக் கௌரவமடைதற்கு அநேக விபத்துக்கள் நேரிடினும் அவற்றை நான் என் புத்தி வலிமையாற் பறக்கடிக்கச் செய்வேனென்றுஞ் சொல்லினர்" என்றாள். மன்மதசொரூபன், "ஏ நங்காய்! நனவோ கனவோ? அவர் நினை

வுடன் நீ சயனிக்கச் சென்றதால் அவ்வெண்ணம் கன வில் உனக்கு முன்வந்து நின்றது. "விருமுந்துருத விடையில்லை: வினைமுந்துருத கனவில்லை, என்பவாத லால், நினைவிலுள்ளது கனவில் வருவது" என்று கூறுதலும், "அப்படியா! நான் கௌரவ மடைந்து நற்கீர்த்தி வகிப்பது உமக்கிஷ்டமில்லையோ" என்று புன் சிரிப்புடன் கூற, "இல்லை, அங்ஙனம் எண்ணு வனோ? சரி! அவ்வாறே செல்வோம்" என்றான். "நாம் ஔரங்கபாத்துக்குப் போகத் தங்களை வற்புறுத்தற்கு அடியாளை மன்னிக்க வேண்டும்" என்று பேசிக்கொண் டிருக்குங் கால், சோமன் உடனே அங்கு வந்து "கன் னியர்கள் சென்றனர்: நீர் போதற்குத் தடையொரு சிறிதுமில்லை" என்றான். அவ்விருவரும் சோமனுக்கு மிகுந்த வெகுமதி யளித்து அக்கோட்டையை விட்டுப் புறப்பட்டனர். சோமனும் கஷ்டத்திற்குத் தக்க ஊதி யங் கிடைத்ததெனஉவகை கூர்ந்தான்.

அத்தியாயம் IV.

நவீனநட்பு

அற்றை நாள் முற்றும் பிரயாணஞ் செய்து இரவு சமீபிப்பதன்முன் பர்வாணி தேசத்தருகே குறுகினர். அருணனும் அஸ்தமயமானன், பனியும் பெய்ய வாரம் பித்தது. பறவைகள் அங்கு மிங்கும் பறந்து தத்தங் கூடுபுக்கன. சந்திரனும் சுந்தரமாய்த் தண்ணொளியுடன் தயங்கினன். வீரலக்ஷ்மி, "நம்மைப் பின் பற்றி அப்பாதகன் ஒருகால் வந்தாலும் வருவனென அஞ்சுகின்றேன். உம்மைப்பற்றி யான் வருந்துகின்றேனே யன்றி என்னைப்பற்றியன்று. இரும், ஓ! காலடிச் சத்தம்கேட்கிறது" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஒருவன் அவர் பக்கம் அடைந்து "ஐய! உமக்கு வந்தனம். யான் போகும் வழியே நீரும் வருவீராயின் நான் உங்களுக்கு வழித் தோழனுவேன்" என்று கூற, மன்மதசொரூபன் சந்திரப்பிரகாச மிகுந்திருந்தமையால் அவனை நன்குநோக்கி இவன் விரோதியல்லன்: பெருந்தகைமை வாய்ந்தவன்: என்று நினைத்து, "நாங்கள் இவ்விரவைப் பர்வாணியில் கழிக்க நினைக்கிறோம்" என, அவன் "நானும் உம்முடன் இவ்விரவைக் கழிக்கின்றேன். இவ்வழியாய்த்தானே நீர் வருகிறீர்? அங்கனமாயின் நூறுகன்னியர்கள் இவ்வழிச் சென்றது நீர் அறிவீரோ? அக்கன்னியர்களால் வழிப் போக்கருக்கு இரவுகழிக்க இடங்கிடைப்பது அரிதாயிற்று"

என, "நாங்களும் நேற்றிரவு அதிகக் கஷ்டமடைந்தோம். இன்றையவிரவு அக்கன்னியர்கள் எங்குத் தங்குவரோ அறிகிலோம்" என, "நீர் எனக்கு நல்ல நண்பரானீர். என் பெயர் மயன். கன்னியர்கள் இவ்வழிச்சென்றது நீர் அறிவீரா? என்ற வினாவுக்கு நீர் விடையளிக்கவில்லை. அக்காரணம் என்னே? ஆ! இக்கேடு பிரதாபசீலனாலன்றோ நேர்ந்தது" என, (வீரலக்ஷ்மி ஸ்ரீபிரான் மாளிகையில் தான் கண்டனவும் கேட்டனவும் மன்மதசொரூபனுக்குத் தெரிவிக்காததால்) "நாங்கள் அவர்களைப்பார்த்ததில்லை. அவர்களைப்பற்றி ஒன்றும்தெரிந்திலம்" என்றான் மன்மத சொரூபன். "என்ன! நீர் கூறியது நம்பத்தக்கதோ? இந்நூறு கன்னியர்களை ஐதராபாத் அரசனுக்குக் கப்பமாக அனுப்புகிறானென்று அறியீரோ?" என்று வினவ, "நான் இதைக்கேட்டது முதன்முறை. பிரதாபசீலனைப்பற்றிச் சரித்திரத்தில் வாசித்திருக்கிறேனேயன்றி மற்றொன்றுமறிந்திலேன்" என, மயன் "அந்தோ! அவன் பொல்லாத பாதகன்: ஊரைக் கெடுத்த துரோகி: ஆயினும் அவன் முடிவில் தண்டிக்கப் பட்டான். அன்று கொல்லும் அரசன், நின்று கொல்லுந் தெய்வம்" என்று கூறவே, "என்ன நீர் கூறுவது அழகாயிருக்கிறது. மாளவநாட்டார் போர்முனையில் நிற்கப் பயமுடையரோ?" என்று அருவருப்புடன் கூற, "அங்ஙனம் நினையற்க, காலம் வருங்கால் அம்மகம்மதியரைக் காலனுக் கிரை யாக்குவாம் மாளவநாட்டார்" என்றான் மயன். வீரலக்ஷ்மி

"நமது வாய்க்குப்பூட்டு மில்லை சாவியுமில்லை. நானும் அந்நாட்டாளாயின் அங்ஙனேகூறுவன். இங்கு உண்மை உணராது வீண் வார்த்தையாடுவதால் பயனென்ன" என்றுகூற, மயன் மன்மதசொரூபனை நோக்கி "இம்மாதோ தைரியமுள்ள தையல். இம்மங்கை யுமக்கென்னமுறையோ : மனையாளா அல்லது தங்கையா?" என்றுவினவ, "மனைவி" என்றான். வீரலக்ஷ்மி "ஆ! நமது கௌரவத்தைக் காக்க இவர் பொய்யுரைக்க நேர்ந்ததே!" என வருந்தினள். மயன் "ஐயா! நீர் சுகபுருடர் : உமக்கு இத்தகைய தையல் இல்லக்கிழத்தியாதலால் சுகத்திற்கு வரம்பேது. உமக்குத் தானமும், தவமும், வானமும், மண்ணும் உளவாம். கிடைத்தற்கரிய பொருள் ஒன்றேனுமில்லை: 'தாய்க்குப்பின் தாரமன்றோ?' இது விஷயத்தில் நான் பொறாமை கொள்கிறேன். என் நிலைமையோ உமது நிலைமையின் முற்றும் மாறுபாடுடையது. நும் மனையாளை யொத்த ஒருத்தியை நான் எவ்வளவு காதலித்தேனோ அவளும் என்னை அவ்வளவு காதலித்திருந்தாள். பிரியுங்காலம் நேர்ந்தது. இதை உம்மிடத்தில் சொல்லிப் பயனென்ன?......... இப்போது நாம் பர்வாணிக்கு வந்தோம். இங்குப் பிரசித்தி பெற்ற நியாயப் பிரமாணப் பலனை யிழந்த ஒருவனிருக்கிறான்" என்று மயன் சொல்ல, மன்மத சொரூபன் அவன் யாவன்? என வினவ, "என்ன! அவனைப் பற்றியுமக்கு ஒன்றுந் தெரியாதோ? அவன் பெயர் வீரமார்த்தாண்டன். உமக்கு நூறு கன்னியர்களின் விவரந் தெரியாதபோது இது

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

உமக்குத் தெரிவதெப்படி? இவன் மாளவ நாட்டாருக்கு நண்பனும் ஐதராபாத் மகம்மதிய அரசனுக்கு ஜன்ம விரோதியுமாவன். இவன் தன்பாலுள்ள வீரர் அநேகரைப் போஷித்து வருகிறான். செல்வவான்கள் இவனது வீரத்திற்கும் கீர்த்திக்கும் பொறாமை கொண்டும், தங்கள் பொருளை அவன் கொள்ளையடித்தலால் அவன் மேல் வஞ்சங்கொண்டும் அரசனுகிய குணசீலனைத் தூண்டி அவன் நியாயப் பிரமாணப் பலனை யிழக்க வைத்தனர். மாளவநாட்டரசர்கள் அப்துராமனுக்குப்பயந்து இவனுக்கு வேண்டும் பொருளுதவி செய்து வருகிறார்கள். மாளவநாட்டரசனது பயம் இவனுக்கில்லை. அப்துராமனது தந்திரமும் இவனைத் தன் வயப்படுத்தும் வல்லமையும் பயன்படா தொழிந்தன" என, மன்மத சொரூபன் "அவனது குணம் எத்தகையது? அவனுருவம் எப்படிப் பட்டது?" என்று வினவ, "அவன் கொடியன்: தனிகர் சத்துரு: கொள்ளை யாடுவதிலும், கொலைபுரிவதிலும், பேர் போன வீரன்: சனியனை யொத்த விகார சொரூபன்: பார்ப்பவர் மனம் பயமுறச் செய்பவன்: இவனை அப்துராமன் சிறை செய்யத் தன்னாலியன்ற மட்டும் சாம, தான, பேத, தண்டமென்னுஞ் சதுர்வித உபாயங்களால் முயன்றும் பயன்படா தொழிந்தது. இவன் ஏழைகளுக்கு உதவி செய்வதனால், அவர்கள் இவனை அழகனென்றும், தயாளுவென்றும், கௌரவமுடையானென்றும் புகழ்வர்." என்று இங்ஙனம் வார்த்தையாடிக் கொண்டே பர்வாணியிலுள்ள கிருஷ்ணையன் சத்திரத் தலைவாயில் வந்து நின்றார் அம்மூவரும்.

அத்தியாயம் V.

———:o:———

கிருஷ்ணையன் சத்திரம்

பூர்வ காலத்தில் சத்திரங்கள் இக்காலத்திலிருப் பனபோ லிருந்ததில்லை. சீர்திருத்தங்கள் குன்றியே யிருந்தன. இக்காலத்தில் எத்தொழிலு மியற்றுதற் கிய லாதோர் அன்னம், சிற்றுண்டி விற்றல் முதலிய தொழி லி லிறங்கி, காலணாவைப் பேராணுவாக்கவும், பேராணு வை ரூபாவாக்கவும், ரூபாவை வராகனாக்கவும் எண்ண முடையராய்த் தன்னிடம் வருவார் மேல் சிறிதுங்கருணை யிலாது 'திட்டு வந்தால் வரட்டும் துட்டு வந்தால் போ தும்' என வழிபறிக்குங் கள்வ ராகின்றனர். 'முறுக்கு விற்று மூன்று வீடு வாங்கினான்' என்பது உலகில் வழங்குகின்றது. முகநட்பென்பது சிறிது மில்லாதவர் எனவே அகநட்புமில ரென்பது சொல்ல வேண்டியதே யில்லை. பொருட்பேய் பிடித்தவர். கண்டபடி உண்டி விற்றுப் பொருள் பறிக்குங் கள்வ ரன்றிப் பிறராகார். முற்கால சத்திரங்கள் சீர்திருத்தமில்லையாயினும், வரு வார் உளங்களிக்க உண்டியளிப்பதும், முகமன் கூறுவதும், அன்புடன் வார்த்தை யாடுவதுமே வளமெனக்கொள்வா ராகையால், வருகின்றாரை அதிகப் பொருள் கேட்டு வருத்துதலில்லை. முன்னங் கூறிய வழிப் போக்கர் மூவரும் இச்சத்திர மடைந்ததும் கிருஷ்ணையன் அவர் களை உபசாரமுடன் வரித்து உபசரித்து அங்கிருந்த சிலருடன் இம்மூவர்க்கும் உண்டியளித்து இவர்களி

னிடையில் தான் உட்கார்ந்திருந்து வேடிக்கையாகச் சில வார்த்தைகள் வசனிக்கத் தொடங்கினன். அச்சத்திரத்திலிருந்தோர் பெரும்பாலார் வர்த்தகராகையால், பல வகைப்பட்ட பட்டு, பட்டாடை, சூரியகாந்திப் பட்டு, சித்திரப்பட்டாடை, சால்வை, பூஷணங்கள், நவரத்தினங்கள் முதலியவற்றின் விலைகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

அச்சத்திரத்தில் அமுதுண்டவருள் ஒருவர் முதியர். அவர் வார்த்தை யாடுங்கால் உலக நடை நன்குணர்ந்தவரென்பது எவரு முணர்தல் கூடும். அவரது வயதோ அறுபத்தேழு. இவர் முன்னந் தனிகராயிருந்து ஈட்டிய பொருள்களைக் காதல், கவறாடல், கள்ளுண்டல் முதலிய தீயொழுக்கங்களிலழித்துக் குடிப்பதற்குங் கஞ்சி யின்றிப் பின்பு விலைகுறைந்த கலைகளையும், அணிகலன்களையும், சூரி முதலிய சிறிய சாமான்களையும் தெருத் தெருவாய்க் கொண்டுபோய் விற்று வருகிறாரென்றும், இவர் முகநட்பும், பேசுந்திறமையும், பச்சாதாபமு முடையவராதலால் யாவரும் இவரிடம் விசுவாசம் பாராட்டி இவர் கொண்டு செல்வதை வாங்குகின்றனரென்றும், தற்கால நிலைமையில் 'ஈரைப்பேனாக்கிப் பேனைப்பெருமாளாக்குமியல்பினர்' என்றும், இவருக்குக் குடியிருக்க ஒரு வீடு தானுமில்லை யென்றும், வியதானவராயினும் வியாபக சக்தி யுடையவரென்றும், இவர் வியாபாரப் பொருள்களை விற்கப் போகுங்கால் தான் கண்ட காட்சிகளை உள்ளதுள்ளபடி யுரைக்கும் உண்மையாளரென்றும், இவர் பெயர் சுப்பு செட்டி என்று சொல்கின்றனரென்

றும் கிருஷ்ணையன் மூவருக்கும் மொழிந்தான். இதைக் கேட்ட மன்மத சொரூபன் "ஐயோ! வரைவின் மகளிர் பால் காதல் கொள்ளுதல் கெடுதியே விளைக்கும்.

'விளக்கொளியும், வேசையர் நட்பு மிரண்டும்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே யறுமே: அவரன்பும்
கையற்ற கண்ணே யறும்'

(நாலடியார்)

மேலும் வேசையர் பல்லெச்சிலு நச்சலால் நாயனையர்: செய்ந்நன்றி சிதைத்தலால் தீயனையர்: நுண்பொரு ளானை நுகர்ந்திட்டு, வான் பொருளானை நயந்து வரித்த லால், கொம்பிடை வாழுங்குரங்கனையர். மேலும், இளங் குமரராங் குடத்தை எழிலெனும் கயிற்றிற் பூட்டிப் பொருட்சலம் வறண்டிட முகப்பர்: வறண்ட பின் போய்வாருமென்று நடுத்தலை குட்டுவர். அன்றியும் திருவெலாங் கவர்ந்து நரகினுமிடுதலால் கள்ளரிற் கொடி யர். இவ்வேசையரின் அநுபவ முதிர்ந்த தாய்க்கிழவி களோ தஞ்சின்னஞ் சிறுமிகளுக்கு

'கூனற் கிழவன் கொடுக்கும் பணயமதில்,
நானக்குழலே நறையுண்டோ?
சோறு சமைக்குஞ் சுயம்பாகி வந்தக்கால்,
வேறுமொரு வேளாண்மை வேண்டுமோ?
அப்பன் வருவான் அதன்பின் மகன் வருவான்
தப்புமுறை யென்று தள்ளாதே' என்றும்,

மீன் குஞ்சுக்கு நீச்சுங், கொடும்பாம்பின் குட்டிக்கு நஞ்சும் கொடுத்தவரார் நங்கையே! என்றும் போ திப்பர். ஆகவே மதிநல மாண்ட பெரியார் பொது மகள் புன்னலந் தோய்வரோ?

கவருடலோ மிகவுங் கொடியது. இது அறத்தைத் வேர் கல்லும், அருநரகிற் சேர்க்கும், திறத்தையே கொண்டு அருளைத் தேய்க்கும், மறத்தையே பூண்டு விரோதஞ் செய்யும்; இதனால் ஆண்மையும், வலிமையும், அழகும், குடிமையும், மானமும், செல்வமும், பெருமையும், குலமும், இன்பமும், தேஜசுஞ் சிதைவுறும்: மாமறை யொழுக்கும், புகழும், பயின்ற கல்வியும், ஒருங்கே யழியும். ஆகையால் கோதிலா மாமதியுடையார் சூதின்மேல் மனம் வைப்பரோ? ஒரு காலும் வையார்: வையார்.

'வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை: வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.'

என்பது பொய்யா மொழியார் பொய்யா மொழியாகையால் சூதாட்டுக் கருவியை அறிவானுன்ற பெரியார் தங்கையாலுந் தீண்டுவரோ? ஒரு காலுந் தீண்டார்: தீண்டார். நளனும், தருமராஜனும் சூதாட்டத்தினாலன்றோ பெருங்கேடடைந்தனர்.

'கள்விலை பகர்வோர், கள்ளினை நுகர்ந்தோர்,
கள்ளருந்துதற் குடன் படுவோர்,
கள்ளருந்தினரை மகிழுநர்,
நரகிற் கற்பகா லங்கிடந் தழுந்தி
எள்ளுறுந் தீய மலப்புழு வாகி,
மலத்தினை நுகர்ந்துபின் னிறந்து
விள்ளருங் கொடிய ரௌரவ நரகின்
மீட்டு மீட்டுழன்று நாள் கழிப்பர்.'
(கூர்மபுராணம்)

மேலும் கள்ளுண்ணுதல்,

'அறிவை யழிக்கும் : செயலழிக்கும் :
அழியா மானந்தனை யழிக்கும் :
செறியு மறிஞர் மதியாத செருக்கை
விளைக்கும் : ஈன்றாளும்
முறியும் : வெறுப்பு மிக விளைக்கும் :
முனிவு விளைக்கும் : பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும் : நகை விளைக்கும்........'

(விநாயக புராணம்)

ஆகிய கெடுதிகளை விளைக்கு மென்பது உண்மை.

'புலை மயக்கம் வேண்டிற் பொருட்பெண்டிர் தோய்தல் :
கலைமயக்கங் கள்ளுண்டு வாழ்தல்:— கொலைமுனிந்து
பொய்ம்மயக்கஞ் சூதின்கண் தங்கல் : இவைமூன்றும்
நன்மை யிலாளர் தொழில்'

(திரிகடுகம்)

ஆதலால் அறிவுடையார் இம் மூன்றுங் கைவிடுதல் வேண்டும். ஒருவர் இம் மூன்றும் உடையரா யிருக்க அவரிடந் திருமாது எங்ஙனஞ் செறிந்திருப்பாள்'' என்று கூறி அம்முதியாரை நோக்கி, "நீர் இங்கு வந்தது எதுபோது?'' என்று வினவ, "நான் நேற்றுக் காலை வந்தேன். இங்கு என் சாமான்கள் மிகவும் விலை யாகின்றமையால், நாளை வரையில் இங்கிருக்க எண்ணு கிறேன்,'' என்று விடைபகர, ஐயர் "சுப்பு! நாளை உனக்கு வியாபாரமாகாது. துக்கக்கிரமான ஒரு காட்சி யைக் காண யாவரும் சந்தையில் வந்து கூடுவர்'' என, "ஓ! அங்ஙனமாயின் நான் இன்னு மொருநாளிருக்

கிறேன்" என்றார் அம்முதியார், "துக்ககரமான காட்சி யாது?" என்று மன்மத சொரூபன் வினவ, "மூவரைத் தீயிட்டுக் கொளுத்தப் போகின்றனர்" என, "இப்பட்டணத்தில் இத்தகைய காட்சியைப் பார்த்தலும் இயலுமோ?" என உள்ளந்துளங்கிக் கூறினன் மன்மத சொரூபன். "என் செய்வது; மூவர் ஆலயத்தில் களவு செய்தனர்; இவர் கோயில் சொத்துடன் அகப்படவே பிரதம குருவாகிய காமியப்பகுரு இவர்களைத் தீக்கிரையாக்க ஆக்கியாபித்தார். அக்காலத்து ஜயவீரன் என்பானைக் கழுவிலேற்றுவர்" என, "எக்குற்றத்திற்காக" என்று மன்மத சொரூபன் வினவ, "இவன் தன் போன்ற இளைஞருக்கு ஆயுதங்களைத் தந்ததாகப் பிறர் கூறக் கேட்டதினால் இவன் வீரமார்த்தாண்டன் மாணுக்கன் என்றெண்ணி, வீரமார்த்தாண்டனைத் தலைவனுகக்கொண்டு சுகித்திருக்கும் பிரஜைகளைச் சண்டைக்குத் தூண்டி இராஜ துரோகஞ்செய்ய எத்தனித்தானென்ற குற்றஞ் சாட்டிக் கழுவிலேற்ற உத்தரவளித்தார்" என்றான். மன்மத சொரூபன் "தீரவிசாரியாது தண்டனைக்குள்ளாக்கினர் அக்குரு: நன்றாயிருக்கிறது! நியாயமே இவ்வூரில் இல்லைபோலும்" என, "இளைஞ! அதிகாரிகளுடைய செய்கைகளில் குற்றங் கூறேல்: அவர் கூரிய காதும் பக்ஷமற்ற தன்மையுமுள்ளவர்" என்று சப்புக்கொட்டி சொல்லினன். மயன் "ஓ பெரியோய்! நல்லது கூறினாய்! கொடுமையைப் பற்றற நீக்குவதும், நியாயத்திற்கு விரோதமாய்ப் பேசுவதைக் கடிவதும், ஒருவர் எத்தகையராயினும் நியாயமின்றி ஒரு காரியஞ்

செய்யின் முன்னின்று விலக்குவதும் ஒவ்வொருவனுடைய கடமையென்று கருதல் வேண்டும். இதனால் எக்கெடுதி வரினும் வரட்டும்'' என, வீரலக்ஷுமி "இத்தகைய கொடிய காரியங்களைக் கடியாராயின், மனிதப் பிறப்பாய்ப் பிறந்து பயனென்? இவற்றை நீக்க நினையாமலிருக்கின், நம் மிருதயம் இரக்க மென்பதை யிழந்து நிற்கும்: இரக்கமில்லையேல் எங்குச் செல்வினும் என்ன பயனெய்துவோம்.'' என்று கூறலும் யாவரும் அவளை யேறெடுத்துப்பார்த்தனர். சுப்புசெட்டி மெத்தவும் மெச்சினான்.

இங்ஙன மிவர்கள் பேசிக்கொண் டிருக்கும்போது சிறைச் சாலைக்கதிபனான நீலன் என்பான் உள்ளே நுழைந்தனன். அவனைக் கண்டு, "பேசிய யாவும் இவன் கேட்டனனோ? இவன் வந்தது யாது காரணம் பற்றியோ?'' எனக் கலங்கி, பின் ஒருவாறு தேர்ந்து "ஐயா! நீர் வந்த காரணம் யாது?'' என்றான் கிருஷ்ணையன். "ஐயா! இந்நாள் முழுவதும் ஓடி அயர்ந்தேன்: என் நாவறண்டிருப்பதால் தண்ணீர் தாரும்: எங்குச் சுற்றியும் ஒரு குரு அகப்படவில்லை: என் கஷ்டம் வீணையாயிற்று'' என, ஐயர் அவனுக்குச் சலங் கொடுத்து "என்ன! குருவா கிடைக்கவில்லை; கோபால தேசிகர், இராமாநுஜதாசர், வேணுகோபால சுவாமி எங்குச் சென்றனர்? என, இம்மூவரும் இருக்கின்றனர்: இன்னும் ஒருவர் வேண்டும். என் கஷ்டம் என்னவெனக் கூறுவேன்'' என்று கூறிச் சுப்புசெட்டியை நோக்கி இவ்வூரிலா இன்னு மிருக்கிறீர்? சில வாரங்களுக்கு

முன் இங்கு உம்மைப் பார்த்ததாக என் ஞாபகத்திற்கு வருகின்றது. அப்போது என் மனையாள் மணப்பெண்ணாகிய தன் தங்கைக்குக் காதணி வாங்கினாளல்லவா?" என்று வினவ, "ஆம். இவ்வூரின் மேல் எனக்கு அதிகப் பிரியம்: ஆகையால் நான் அடிக்கொருமுறை இங்கு வருகிறேன்" என்றார். ஐயரை நோக்கிக் கண் சிமிட்டி "சரி, இங்கு இவருக்குப் பணம் வரவேண்டி யிருப்பது போலிருக்கிறது: வாங்கும் பொருட்டு வந்தார்போலும்" என்று கூற, "ஆம்", எனப் புன்னகை செய்து "உமது கஷ்டம் யாது?" என்று அம்முதியார் கேட்ப, நாளைக்கு மூவரைத் தீக்ஷை யாக்கவும், ஒருவனைக் கழுவேற்றவும் நமது பிரதமகுரு உத்தரவளித் திருக்கின்றார். மேற்கூறிய அம்மூவரும் ஞானோபதேசஞ் செய்ப அம் மூவருக்காயினர். மற்றொருவனுக்குக் கிடைப்பதரிதாயுளது. அதனிமித்தந்தேடி அலுப்புண்டேன்" என, "சச்சிதானந்த சுவாமி பிடம் எனக்கு வேலை யிருக்கின்றது. அவர் இராமையன் சத்திரத்துக்கு இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு வருவதாகவும் என்னைக் காண்பதாகவுங் கூறி யிருக்கிறார். நீ அங்குச் சென்றால் அகப்படுவர்" என்றார். இதைக் கேட்டதும் "உமக்கு நான் நன்றியுள்ளவனா யிருக்கவேண்டும். நான் அங்குச் சென்று அவரைக் கொணர்ந்து என் காரியத்தை முடித்துக் கொள்கிறேன்" என்றான். மன்மத சொரூபனும், வீரலக்ஷ்மியும், மயனும், சுப்புசெட்டி மேல் சம்சயப்பட்டு "ஆ! நல்லவர்! ஒருவனைக் கொலை புரிய இவர் உதவி புரிகின்றார். வெகு நன்றாயிருக்கிறது"

என்று நினைக்கையில் நீலன் நேரமாயிற்றென்று அவ் விடம்விட் டகன்றான். சுப்பு செட்டியும் நித்திரை வரு கிறதென்று சொல்லி அங்கிருந்தவரிடம் யாதும் புகலாது சயனிக்கச் சென்றனன்.

சுப்புசெட்டி சென்றதும் "ஆ! முதியவரா! முதியவர் முனியத் தக்கதல்லவோ இச்செய்கை. இவ னிடம் நம்பிக்கை வைக்கலாகாது" என்று மூவரும் மொழிய, ஐயர் முகவாட்டமுடனிருந்தார். இம்மூவரும் செட்டியைப் பலவாறாக ஏசியபின் மயன் ஒரு பள்ளி யறைக்குட் சென்றனன். மன்மத சொரூபனும், வீர லக்ஷுமியும் மற்றோர் அறைக்குட் சென்றனர். சென்ற சிறிது நிமிஷத்திற்கெல்லாம் சுப்புசெட்டியைச் சாளர வழியாக் கண்டனர். கண்டதும் "ஐயோ! இவனைப் பற்றி இகழ்ந்து கூறினோமே, இவன் நம்மை என் செய்வனோ!" என்று மனங்கலங்கி யிருப்புழி, சுப்பு செட்டி, மன்மத சொரூபனும் வீரலக்ஷுமியு மிருக்கும் அறைக்குள் ஒரு அடி சதுரமுள்ள தேக்குமரத்தாற் செய்த ஒரு பேழையுடன் நுழைந்து, "ஓ வீர லக்ஷுமி! என்பால் அவநம்பிக்கை வேண்டாம். நான் மோசக்காரனல்லன். வஞ்சக முடையானுமல்லன். நீர் நினைத்த வண்ணம் இழி தொழில் புரிபவனுமல்லன். என் செய்கை விடிந்ததும் உங்களுக்கு நன்கு விளங்கும். அக்காலையில் என்மேல் வெறுப்படைந்து நிந்தித்த நீவிர் உங்களையே வெறுத்துக்கொள்வீர்" என்று கூற, வீர லக்ஷுமி "நீலன் விஷயத்தில் நடந்த உமது தன்மை யாது? ஐயவீரனைக் கொலை புரிவிக்கக் குரவன் கிடைக்

கும் வழியைக் கூறியதேன்?'' என்று வினவ, "சச்சி தானந்தசுவாமி என்னுயிர்த் தோழர்: நான் சொல்லும் வண்ணம் நடத்துபவர். நான் சொன்னதை அறிந்தீ ரல்லவா?'' என்றான். "ஆம்! ஜயவீரனைத் தப்புவிக்க வேண்டியல்லவா? ஐயோ பாவம்! உம்மை வீணே நிந்தித்தோம்.'' என்று துக்கிக்க, சுப்புசெட்டி "உமது உதவியின்றி எனது எண்ணம் நிறைவுறும் வழி யானறிந் திலேன். நள்ளிரவோ மிகவுஞ் சமீபித்தது. நீலன் அங்குச் சேராமுன், நான் அங்குச் சென்று அவருடன் தனித்து வார்த்தையாடவேண்டி யிருக்கிறது. யான் வேண்டும் வேண்டுகோள் யாதெனில், இந்தப் பூஷணப் பெட்டியை நீர் வைத்துக்கொள்ளும். நான் இங்கு மீண்டும் வர அனுகூலப் படாதாகையாலும், நான் இச்சமயம் இதைக்கொண்டு போதல் இயலாதாதலாலும் உம்மிடம் அடக்கஞ் செய்கின்றேன்'' என, "அங்ஙனே யாக: வைத்திருக்கிறோம். மீண்டும் உம்மை யாண்டுக் காண்பது?'' என்று வினவ, சுப்புசெட்டி "நீர் நாளைப் புறப்பட்டுப் போவீராயின் நாளையிரவு பரான்புரம் அடைவீர். அங்குக் கோபாலையர் சத்திரமிருக்கிறது. இப்பெட்டியை அவ்வையரிடங் கொடுப்பின் அவர் என் னிடங் கொடுப்பர்'' என்றான். "அங்ஙனே செய் கிறோம். உமது காரியம் இரகசியமாகச் செய்தல் வேண்டுமே! நீர் இவ்விடம் விட் டெவ்வாறு செல்வீர்?'' என்று வினவ, "பின்புறம் ஒரு கள்ளவழி யுள்ளது'' என்று சொல்லி அவருடன் அங்குச் சென்று அவ்வழி யே ஏகினான். அவன் சென்றபின் இருவரும் தம்

மறைக்குட் செல்லும்போது மனிதர் காலடி யரவங் கேட்க, "ஐயோ! செந்தலைப் புலிகளிடம் அகப்பட்டனமே!" என்று பயந்து சாளரத்தருகே நின்றனர். அதுகாலை ஒருவன் அச்சத்திரவாயிலின் கதவைத் தடதடவென்று தட்டவே, ஐயர் "யாரது? சுவதந்திரன் போல் துணிவுடன் உரப்பாய்த் தட்டுகிறது" என்று சினந்து கேட்க, "நான் மாளவ நாட்டிலிருந்து வந்த உன் நண்பன் சோமதத்தன்" என்று கூற "நள்ளிரவில் வந்த காரணம் யாது? வேண்டியதென்ன?" என்று வினவ, "யான் ஒரு தனிகனுடன் வந்திருக்கின்றேன், இரவு தங்க இடம்வேண்டும்" என்றனன். இதைச் செவியேற்று "நண்ப! இன்றிரவு நீவி ரிருவரும் இங்குத் தங்க இடமில்லாமையால் இதனருகேயுள்ள சத்திரத்திற்குப் போமின்" என, சோமதத்தன் "ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் இவ்வழிச் சென்றதை நீர் கண்டதுண்டா?" என்றுவினவ, "அவர்கள் இங்குளார்" என்றான். உடனே சோமதத்தன் என்னருகிருக்குந் தனிகருக்கோ இத்தேசபாஷை தெரியாது. இவர் ஜயபுரத்தேசத்தவர். என்னை மொழிபெயர்ப்பதி னிமித்தம் அழைத்து வந்தனர். யான் முன்னங் கூறிய இருவரும் ஜயபுரத்தில் குற்றஞ் செய்துளராம். அவர்களைக் கண்டுபிடிக்க இவர் வந்திருக்கிறார். நாங்கள் அதிகாலையில் இங்குவருகிறோம். அவர்கள் போகமுயலின் தடுத்து வைத்திரும்" என்றான். அதற்கவன் உடம் என்று உடன்படவே, இருவரும் அயலிலுள்ள சத்திரஞ் சென்றனர். இவையாவும் அவ்விருவர் செவி

யுறக்கேட்டு உடல் நடுங்கினர். வீரலக்ஷுமி "ஐயோ! தெய்வமே! என்னை யேன் இத்துன்பத்திற்குள்ளாக்கி ஞய்: கருணையங் கடலே! பெண்ணுய்ப்பிறந்து பொல்லாப்பழியடைந்தேனே! 'அல்லலே பெண்ணெனப் பிறத்தல்: ஆங்கதில் அல்லலே கட்டழகுடைமை'. என்று துக்கித்து, தன் காதலனை நோக்கி "அன்புள்ள நாதா! இனித்தாமதித்தல் தக்கதல்ல, அவன் பகை நம்மை என்செய்யும் எனநினைத்தலுங் கூடாது. ஒருசிறிய நாகமேனும் தன் கூரிய எயிற்ருல் ஒரு குஞ்சரத்தையுங் கொல்லுமே! ஆகவே இவ்விடம் விட்டு அகல்வதே தக்கது. சுப்புசெட்டி காட்டிய வழியே நாம் செல்லுதல் வேண்டும்" என்றலும், மன்மதசொரூபன் உடன்பட்டு உரைப்பாஞயினுன். "நாம் சுப்புசெட்டி சொல்லிய பரான்புரஞ் செல்லின் அந்நகரம் மகம்மதியருக் குரியதாதலால் இந்நாட்டதிகாரம் அங்குச் செல்லுதலில்லை. நாம் இன்புற்றிருக்கலாம்." என்றனன். பின்பு இருவரும் கிருஷ்ணையனுக்குச் சேரவேண்டிய தொகையை அப் படுக்கையின்மேல் வைத்துவிட்டு, சுப்புசெட்டி தந்த பெட்டியைக்கொண்டு கள்ள வழியாய்ப் புறம் போந்தனர்.

அத்தியாயம் VI.

——:o:——

காமியப்பகுரு : வீரலக்ஷ்மி, மன்மத சொரூபன்மேல் குற்றஞ்சாட்டித் தீக்கிரையாக்க முயல, வீரமார்த்தாண்டன் அவர்களைத் தப்புவித்தல்.

வீரலக்ஷ்மியும் மன்மதசொரூபனும் பரான்புரம் நோக்கிச் சென்றார்கள். நீலன் என்பவன் சச்சிதாநந்த சுவாமி வருவாரென்று சுப்புசெட்டி சொன்ன சத்திரஞ் சென்று நெடுநேரங் காத்திருந்தும் அவர் வராமைகண்டு மனதில் அருவருப்புக்கொண்டு நிந்தித்திருக்குங்கால், அவர்வருதலைக்காணுதலும் உடனேசென்று, "சுவாமி! நம் பிரதம குரு நால்வரைக் கொலைபுரிய உத்தரவளித்திருக்கின்றார். மூவர் முத்தியடைய உத்தமர் மூவர் கிடைத்தனர். ஏனைய ஒருவனுக்கு ஒரு குரு கிடைக்காது அலைந்தலைந்து நீர் வரும் சத்திரம் இதுவெனவறிந்து உமது வருகைக்கு நெடுநேர மெதிர்நோக்கி இங்குக் காத்திருக்கின்றேன். இப்போது வந்தீர், உடனே தயவுசெய்து என்னுடன் வரவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர் "மகனே! நான் மிகவுங் களைத்திருக்கின்றேன், கிஞ்சித்து உணவருந்தி உன்னுடன் வருகின்றேன்" என்று கூறி உணவருந்தி அவன்பின் நடக்கலுற்றார். நீலன் அவரை யழைத்துக்கொண்டு போய் ஜயவீரனிருக்கும்அறையைக் காட்டினாக, அவர், "நீலா! என்னாலியன்றளவு இவ்விரவு முழுதும் அவனுக்கு ஞானோபதேசஞ் செய்கிறேன்" என்று சொல்லி அத

னுட் சென்றனர். நீலனும் தன்னில்லஞ் சேர்ந்தான். வைகறையாமம் அவ்வறையில் இருவருமில்லாது மறைந்தனர். பார்வாணி தேசத்தினர் பலர் நால்வர் மரிக்குங் காட்சியைக் கண்ணுறக் கடைத்தெருவில் வந்து கூடினர். சச்சிதானந்த சுவாமியும் ஜயவீரனும் எங்கேயோ ஏகினர் என்ற சங்கதி வெளிப்படவே, ஜனங்கள் பலபடப் பகர்வாராயினர். 'ஜயவீரன் பகவானிடத்தில் மிக்க பக்தி யுள்ளவன், அப்பகவான் குருவேடங் கொண்டுவந்து அவனை அடிமைகொண்டு மறைந்தருளினன்' என்றார் ஒருகூட்டத்தார். 'ஜயவீரன் மகம்மதியர் நண்பன், அவருள் ஒருவன் குரு வேடம் பூண்டு வந்து அவனைச் சிறையினின்றும் விடுவித்தனன்' என்றார் மற்றோரீட்டத்தார். 'வீரமார்த்தாண்டன் மிக்க விதரணசாலி; சச்சிதானந்தகுருவேடம் பூண்டு அவனைச் சிறையினின்றும் விலக்கினன்' என்றார் ஒரு சாரார். இவர்கள் இங்ஙனங் கூறுநிற்ப, வீரலக்ஷ்மியும் மன்மதசொரூபனும், சுப்புசெட்டியும் கிருஷ்ணையனுக்குச் சேரவேண்டிய தொகையைத் தன் தன் படுக்கை மேல் வைத்துவிட்டுச் சத்திரத்தினின்று அன்றிரவே அகன்றன ராகையால், ஜயவீரன் தப்பிப்பிழைத்தமைக்குக் காரணம் இம்மூவருமேயென்று கருதினர் பலர். வெய்யோன்வெளிப்பட்டவுடன் மயன் நண்பர் நம்மைவிட் டகன்றனரே "இன்றோடே பேயோடானும் பிரிவு" என்று வருத்தமே மனதிற்கொண்டு வருந்தினன். 'ஜயவீரன் தப்பிப் பிழைத்தமைக்கு நம்முடைய நண்பர்களே காரணம்.' என்று பலர் பகர்வதைக்

கேட்டு ஆனந்த பரவசமாயினன். பின் தன்மனதை ஒருவாறு தேறுதல் செய்துகொண்டு முன்சென்ற தன் நண்பர்களை மீண்டுங் காணலாமென்று வெகு வேகமுடன் நடப்பாராயினன்.

அன்று பகல் பன்னிரண்டு மணிக்குக் குற்றவாளிகள் மூவரையும் கடைவீதிக்குக் காமியப்பகுரு கட்டளையால் காவலாட்கள் கொண்டு சென்றனர். அவவிடத்து அக்கினி வளர்க்கப்பட்டிருக்கவே குற்றவாளிகள் அதைக்காணுதலும் நடுநடுங்கி யுள்ளங் குழைந்தனர். அங்கு, குருமார்கள் அக்குற்றவாளிகளுக்கு மந்திரோபதேசஞ் செய்தபின், அவர்கள் பகவானைத் துதிசெய்யும்போது அக்கினியில் தள்ளுண்டாராய் 'ஐயோ! தெய்வமே! எனக்கூக்குரலிட்டு உயிர்துறந்தார்கள். இத்துக்கச் செயலைக்கண்டயாவருந் துக்கிக்கலாயினர். இங்ஙனமிருப்ப, காமியப்பகுரு ஜனங்கள் பலபடப் பேசுவதைத் தன் நண்பர்பகரக்கேட்டு, மன்மதசொரூபன், வீரலக்ஷ்மி, ஜயவீரன், சுப்புசெட்டி ஆகிய இந்நால்வரும் தப்பிச்சென்றனரே! இவர்களைக் கண்டு பிடிக்கும் மார்க்கம் எவ்விதமென்று நினைக்கலுற்றான். நினைக்குங்கால் ஒரு கூட்டம் வருதல் கண்டு அந்நால்வரும் பிடிபட்டார் போலும். நாளைச் சந்தேகமின்றித் தீக்கிரையாக்கலாம் என்று நினைத்தான். வீரலக்ஷ்மிமேல் குற்றஞ் சாட்டிய குபேரனும் அவன் நண்பன் சோமதத்தனும் அவருடன் வந்தனர். 'நால்வரில் இருவர் மாத்திரம் அகப்பட்டார் போலும். ஜயபுரத்துக் குற்றவாளிகள் இவ்விருவர்

தானே ?' என்று குருகேட்க 'ஆம்' என்றான் சோமதத்தன். குற்றவாளிகள் மீண்டும் அகப்பட்டார் என்பது செவியுற்றவுடன் அங்கு அநேகர் கூட்டங்கூடினர். வீரலக்ஷ்மியை மிகுநயமுடன் நன்கு நோக்கி 'இவ்விருவர்மேல் குற்றஞ்சாட்டியவனும் அவன் நண்பனும் வரக்கடவர்' என, குபேரனும் சோமதத்தனும் அவர் முன் போந்தனர். 'இப்பெண்ணின் நாமதேயமென்ன ? இவளருகில் நிற்பவன் இவள் கணவனோ?, என்று கேட்க, சோமதத்தன் தன் நண்பனுடன் சிறிதுநேரம் வார்த்தையாடியபின் கூறுவானாயினன். "எம்மை நல்லுலகஞ் சேர்க்கவல்ல குருவே! இவள்பெயர் வீரலக்ஷ்மி, நியாய விதிப்படி யுரைப்பின் இவள் அவன் மனைவியல்ல. * இவன் ஜயபுரத்துக்குரு. மன்மதசொரூபன் என்னும் பெயரினன். இவன் இவளைக் காதலித்துத் தன் நாட்டைத்துறந்து இவ்விடம் வந்தான்" என, இவர்களைத் தனித்தனியே விசாரிக்க வேண்டுமென்று காமியப்பகுரு சொல்ல, இருவரையும் தனித்தனி யறைக்குள் கொண்டு சென்றனர்.

காமியப்பகுரு, வீரலக்ஷ்மி யிருக்கும் அறைக்குட் சென்று அவளது உருவத்தையும் முகப்பொலிவையுங் கண்டு மதிமயக்கங்கொண்டு எண்ணுவானாயினன். இம்

---

* ஆங்கிலேய குருமார்கள் ஒருமாதின் மேல் காதல் கொள்ளுதலும் அவளை மணம்புரிதலும் அடாதென்று ஏற்பாடிருப்பதால், மன்மதசொரூபன் செய்தது குற்றமேயாகும் என்று இங்குணரத்தக்கது. இக்கோட்பாடு இந்துக்கள் வழக்கத்திற்கு முற்றும் முரண்பாடுடையது.

மங்கையர்க்கரசியின் முகாலம்பமே மேலாம் பதவி : இவளுடன் கூடிவாழ்வதே வாழ்வு : இப்பெண்மணியை யடைகிலா வறுமையேவறுமை. (சிறிதுநேரம் ஒன்றுந் தோன்றாது) இது முடியுமோ ! (தன்நிலைமையைக்கருதி) ஏன்முடியாது ? மணமகன்,—

"ஏந்தெழில் மிக்கான், இளையான், இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினும் மாதர்க்கு
அயலார்மே லாகும் மனம்"

(எனப்பணித்துளார் குமரகுருபரர்)

"பெண் எனப்படுவ பீடில பிறப்பு நோக்கா: உள்நிறைவு உடைய வல்ல : ஓர் ஆயிரமனத்தவாகும் : எண்ணிப் பத்துக்கையிட்டால் இந்திரன் மகளும் வெண்ணெய்க் குன்று எரியுற்றாற்போல் மெலிந்து பின் நிற்கும்." என்றார் சிந்தாமணியாரும். எனப்பலவாறாக எண்ணி வீரலக்ஷ்மியை நோக்கி "நீ ஏன் அவனைக்காதலிக்க வேண்டும் ?" என, அதற்கவள் 'நற்குண நற்செய்கை முதலியவற்றால்' என்றாள். இதைக்கேட்டதும் அவள்மேல் விருப்பம் மிகுதியும்விம்ம 'பெண்ணே ! உன்னைநோக்கின் நீயோ தேவகன்னியர்களைத் தோற்கடிக்கின்றாய். உனக்குயாதொருகெடுதியும் வாராமல் காப்பாற்றுகிறேன். நீ அவனை இனியிச்சியாதே. நீ உன் தயவை என்னிடஞ் சிறிது காட்டுவையேல், நீ சுகித்திருக்கலாம்' என்று தாறுமாறான பேச்சுக்களைப்பேசினான். அவள் தன்னை மீறிய கோபங் கொண்டவளாய் 'இங்ஙனம் அடாத

வார்த்தை நீர் புகலல் பொருந்துமோ? நின்னால் எக்கெடுதி விளையினும் விளையட்டும்,' என உரத்த தொனியுடனுரைப்பவே, அநேகர் அவ்வோசைகேட்டு அவ்வறைக்குள் நுழைந்தனர். சோமதத்தனும் குபேரனும் சென்றார். சென்றவர் இவ்விருவர் முகநோக்கி, குருவின்மேல் சந்தேகங்கொண்டு நிற்ப, "நான் என்னால் கூடியவளவு இவளை நல்வழிக்குக் கொண்டுவர முயன்றும் பயன்படவில்லை. இவள் தீவினை வயத்தளாதலால் இவளை நோவதில் பயனென்ன! வீழ்மழைசுரந்தபாலும் உண்டபின் வெய்ய நஞ்சாம்: ஆழ்கடல் பிறந்த நஞ்சும் உண்டபின் அமிழ்தமாகும்: ஆதலால் மாந்தரெல்லாம் இருவினை வயத்தராவர்

'முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்,
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்,
மதியின ராயினும், வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்?'

(கந்தபுராணம்)

என்றதினால் விதியின் பயன் யாவரால் வெல்லுதல் கூடும். தீவினைப்பயனால் என் நற்புத்தி கேட்டிலள் இவள்" எனமுடித்தான். இதைக்கேட்ட வீரலக்ஷ்மி 'ஆ! நன்று! ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தியழுகிறது' எனத் தனக்குள் நினைத்தாள்.

பின்பு குரு தன்பரிவாரங்களை நோக்கி 'இவர்களை எங்ஙனம் பிடித்து வந்தீர்? அதை எனக்குத் தெளிவாய் விளக்குவீர்,' என்று கூற, அவர்கள் 'பெருமையும் நற்

குணமும் வாய்ந்த புண்ணிய! இவர்களைப் பரான்புரம் என்னும் ஊரினருகில் கண்டோம். வழிதப்பிச் சென்றதால் எமது கைப்பட்டனர். பரான்புரம் மகம்மதியருக்குரிய தாதலால், அவ்விடஞ் செல்லின் தங்களாணை அங்குச் செல்லாதென்ற எண்ணங்கொண்டார் போலும். இவர்களொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது. அங்கிருந்த பெட்டியைச்சுட்டி இது இவர்களிடமிருந்தது. இப்பெட்டி சுப்பு செட்டிக் கரத்திலிருக்க நாங்கள் கண்டிருக்கிறோம். ஜயவீரனைப் புறம்போக்கினவர் இவர்களே' என்றார். அப்பெட்டியைப் பரிசோதிக்க, சிறிய ஆயுதங்களும் அற்பவிலையினையுடைய அணிகலன்களும் அதிலிருந்தன. குரு, குபேரனையும் அவன் நண்பன் சோமதத்தனையும் தன்னருகே வரித்து 'இவர்கள் சங்கதியைச் சாங்கோபாங்கமாக உரைப்பீர்' என்று வினவ, சோமதத்தன் உதவியால் குபேரன் சொல்வானாயினன். "இவள் ஜயபுர தேயத்தினள். இவள் தந்தையார் பெரியவியாபாரியும் கௌரவமுமுள்ளவர். இவள் தாய் சில ஆண்டுகளுக்கு முன்னம் மாண்டனள். இவள் முதியளாகக்காணப்படினும் வயதோ இருபதுதான் இருக்கலாம். மிகுந்தசாமர்த்தியமுங் கூரியபுத்தியுமுடையாள். மன்மதசொருபன் இவளுக்கு இளவயதுமுதல் கல்விகற்பித்துவந்தான். சிலவருடங்களுக்குள் இவனை ஜயபுரத்துக் குருவாக்கினர். இவன் அடிக்கொருமுறை இவளது இல்லம் போவது வழக்கம். இஃது இங்ஙனமிருப்ப இவள் தந்தையார் காலஞ்சென்றார். மன்மத சொருபனிடத்து இவள் நடந்துள்ள துர்

நடத்தைகள் சிலகாலம் வெளிவராது மறைவாயிருந்தன. இவள்தந்தையிறந்து ஆறுதிங்களாயினபின், நான் இவளை மணம்புரிய மனங்கொண்டேன். ஜயபுரியில் எனது நிலைமை மிகவும் மதிக்கத்தக்கது. எனக்கோ வருவாய் வரையறை யில்லை. இவள் நிலைமையை நோக்கும் போது எனதெண்ணத்திற்குத் தடைபண்ணுளென எண்ணியிருந்தேன். இவள் என்னை இச்சித்தாளில்லை. அதன் காரணமும் எனக்கு நன்கு விளங்கிற்றில்லை. இதன் காரணத்தை நன்கறியுமாறு ஒருவனை ஏற்படுத்தினேன். அவன் அத்தொழிலுக்குப் பயன்படாதொழியவே, நானே இவர்கள் நடத்தையைப் பரிசோதிக்கத் தொடங்கினேன். அதுவும் பயன்படவேயில்லை. இருவரும் தங்கள் நட்பை வெளிப்படுத்தாது மறைத்து வைத்தனர். இரண்டு வருடமானபிறகு மன்மதசொரூபன் வீரலக்ஷ்மிக்கு ஒரு நட்புக்கடிதமெழுதினான். அக்கடிதம் என் கைக்குச் சிக்கவே சந்தேகம் நிவர்த்தியாயது. மன்மதசொரூபன் தான் எழுதிய கடிதம் என்கைப்பட்டதுணர்ந்து தன்காதலி வீரலக்ஷ்மியுடன் அவ்வூரைவிட்டகன்றான். நான் இவர்பின் தொடர்ந்து முடிவில் இவர்களைக் கண்டுபிடித்தேன்'' என்று சொல்லி முடித்தான். "குருவாயுள்ள ஒருவன் ஒருமாதினைக் காதலிப்பதும், மணஞ்செய்ய மனங்கொள்வதுந் தகாதென முன்னோர்களால் விதிக்கப்பட்டுள்ளமையால் இவ்விருவருங் குற்றவாளிகளேயாவர். ஆகையால் நாளைப் பகல் பன்னிரண்டு மணிக்கு இவர்களைத் தீக்கிரையாக்குக'' என்று கூறி அவ்வறைவிட் டகன்றான் காமியப்ப குரு.

வீரலக்ஷ்மி எண்ணாத எண்ணமெலா மெண்ணி யெண்ணிச் சிந்தை நொந்து "ஓ தெய்வமே! என் கதியை என்னவென் றியம்புவன்; ஸ்ரீபிரான் மாளிகையிலுள்ள தெய்வத் தன்மை பொருந்திய சிரமும், விவேகத்தில் முதிர்ந்த வயோதிகரும் நம்மைப் பற்றி என்னென்ன வோ இயம்பினரே; ஒன்றும் பயன்படா தொழிந்ததே: என் பிராணனைப்பற்றி நான் பயங்கொள்ளவில்லை; என் னைப்பற்றி என் காதலன் உயிர் துறக்க நேர்ந்ததே:—பின் ஒருவாறு தேறுதல் அடைந்து, இன்பம் வந்துற்ற காலை இறுங்களிப் பெய்தலும், துன்பம் வந்துற்ற காலைத்துய ருழந் தழுதலும் அறிவிலாரியல்பு. நல்லோர் துன்ப மும் இன்பமும் தொல்வினைத் தொடர்பு என்பர்;—நானை தீக்கு இரையாக்கத் தீர்மானித்தானே—நன்னலம் பயப் பதுண்டேல் தீயவும் நல்லவாகும்; செந்நலம் இழப்ப துண்டேல் நல்லவும் தீயவாகும்:—அவனை நோவதால் பயனென்ன?" என்று பலவாறாக வருந்துவாளாயினாள். மன்மத சொரூபனும் தன்னறையிலிருந்து தன்னைத் தானே நொந்துகொண்டு, தன் நேசியின் உன்னத குணங்களைப்புகழ்ந்தும் வருந்தினான். இவர்கள் இவ் வாறிருப்ப, காமியப்பகுரு வீரலக்ஷ்மி யிருக்கும் அறைக்குட்சென்று "என் காதலுக் கினியகண்ணே! என்னுளைசக் கமைந்த அமுதமே! என்மனதுக் கிசைந்த மாதே! என்னை நீ இங்ஙனம் வருத்துதல் கூடுமோ? என் சொல்லை நீ செவிமடுத்துக் கேட்பாய். நீ இறக்குந்தறு வாய் மிகவுஞ் சமீபித்துளது. இச்சமயமாயினும் என் மனதுக்கினிய இன்மொழி கூறுவையேல், நின்னையித்

துன்பத்தினின்றும் நீக்குகின்றேன். 'மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிறாய்' அந்தோ! பாவம். என்ன சொல்கிறாய்? கண்மணி!" என்று காமியப்பகுரு கூற, வீரலக்ஷ்மி அவன்மேல் கடுஞ்சினங் கொண்டு "ஓ துராத்மா! நீ உன் மனக்குற்றங் களைந்து பிறர் குற்றங்கண்டு குற்றஞ் சுமத்தல்வேண்டும்.

'தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு'

என்றதால் நின் குற்றத்தை முன்னங் களைதல் வேண்டும். 'மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகளுடைத்தால் பொன்குடமோ?' இதைத் தெய்வம் பொறுக்குமோ? நீ பெரி நரகிற் சேரா தொழிவையோ? முற்காலத்தில் இராவணன் சீதையைக் கற்பழிக்க முயன்று பட்டபாடு அறியாயோ?

'வெற்பெடுத் துயர்ந்த திண்டோ
ளிராவணன் விரகத் தெய்திப்
பொற்புடைச் சீதை நெஞ்சம்
மெலிவுறப் புன்மை செய்து
கற்பெனுங் கனலி பற்றக்
கிளையொடுங் கரிந்தா னென்னில்
அற்புடை யவர்க்குத் தீமை
புரிவரேல் நரகி னாழ்வார்.'

(கூர்மபுராணம்)

ஆகவே நீ கரிந்து நரகெய்துவது திண்ணம். 'அறம்புகழ் கேண்மை பெருமை யிந்நான்கும், பிறன் தாரம் நச்சுவார்ச்சேரா: பிறன் தாரம் நச்சுவார்ச்சேரும் பகை

பழி பாவம் அச்சம்.' 'பகை பாவம் அச்சம் பழியென நான்கும் இகவாவாம் இல்லிறப்பான்கண்' என்றார் பெரியாரும்.

'இந்தியக் குஞ்சரத்தை ஞானப்பெருங் கயிற்றால்
சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்தியே - பந்திப்பர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்துவார்'

என்னும் அரியவிதியை அறியாவுனக்கேன் குருவெனும் பட்டம்? ஓ அற்பனே! பிறனில் விழைதல் கூடாது. சிறந்தோனாகிய இந்திரனும், சந்திரனும் அடைந்த இடுக்கணே மிகுதி. இந்திரன் பிறனில் விழைந்து உடல் முழுதும் இழிகுறி யெய்தினான். சந்திரன் குரவனில்லாளைத் தழுவி வெந்துயராழ்ந்தான். ஆகவே என்னை விட்டப் புறஞ்செல்" எனக் கடிந்து கூற, காமியப்பகுரு 'ஆ! இவளது கற்பின் திட்பமே திட்பம்; பெண்ணிற் பெருந் தக்கயாவுள: கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்' எனக்கருதி இத்தகைய மாதரசியை மனையாளாகப் பெறுமவர் பெரும் பேறுடையராயிருக்கவேண்டும். இக்கற்புக் கரசியோடு கூடி நடாத்து மில்லறமே வாழ்வினுக்கும் உயர்கதிக்கும் வித்து எனவும், துறவறத்தின் வேறெனவும் வேதம் கூறுகின்றது.' என உள்ளத்துள்ளினான். இதற்குள் பொழுது புலர்ந்தது. அவனுந் தன்னறையடைந்தான். பகல் பன்னிரண்டு மணியானதும் இருவரையும் ஆவணவீதி கொண்டகன்றனர். அங்கே தழலுங் கொழுந்துவிட்டுத் தயங்கியது. இவர்களைத் தழலில் தள்ளுதற்குத் தயாராக விருக்கையில் ஒரு பேரிகை

முழக்கம் முழங்கியது. அம்முழக்கம் யாதெனஆராய் வுழி வீரமார்த்தாண்டன் ஆரவாரத்துடன் அங்கடைந் தான். அப்போது காமியப்பகுருவும் தனக்கு விபத்து நேர்ந்துவிட்டதென ஓட்டமெடுத்தான். ஆண்டிருந் தோர் யாவரும் வியந்து மகிழ்ந்தனர். இருவரும் மரண தண்டனையினின்றும் உய்ந்தனரெனக் குதூகலித்தனர். வீரமார்த்தாண்டனுடன் வந்த வீரர்கள் அவ்விருவரையும் பிணித்து வைத்திருந்த இருப்புச் சங்கிலிகளைக் களைந்து அவர்களுக்கு ஆசிகூற, ஆண்டுள்ளோர் அனைவரும் வீரமார்த்தாண்டனைப் புகழ்ந்து போற்றுவாராயினர்.

ஜனங்களின் ஆரவாரமும், தன்னைப் புகழ்ந்துபோற் றுவதுங் காதாரக் கேட்டு, "ஓ என்னரிய நேயர்காள்! நான் இந்நாட்டை விட்டுப் பிரிந்து முப்பது வருடமாயின. நான் உங்கள் நன்மையின் பொருட்டே பாடுபட்டு வரு கின்றேன். அரசன் தனிகர்களின் ஏவலால் என்னை ஊரைவிட் டகற்றினன்" என்று கூறினன். குற்றவா ளிகள் இருவரும் அவனை நோக்கி "ஐயா!

'உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்னும் பெரியார் திருவாக்கிற் கிணங்க நீர் எங்களை இவ்விடுக்கணி னின்றுங் காப்பாற்றினீர்: உமக்கு நாங்கள் செய்யுங் கைம்மாறு யாதுளது?" எனலும், வீரமார்த்தாண்டன் 'என்னை நீர்புகழுதல் வேண்டாம், சுப்புசெட்டி என்னை விடுத்து உம்மைக் காக்கச் செய் தனன்: ஆகவே நீர் அவனைப் புகழுதல் வேண்டும்'

என்றான். உடனே மன்மதசொரூபன் "சுப்புசெட்டி ஒரு பெட்டி தந்தனர். அது குருவின் பரிவாரத்தால் கவரப்பட்டு அவர் வசத்துளது. என்பாலுள்ள பணத்தில் ஒருபாகந் தருகிறேன். இப்பணப்பை குருவுக்குக் கிட்டாமையால் என்னிடமே யிருக்கிறது. அப்பெட்டியைக் கொண்டுபோய் அவரிடங் கொடுத்தருள்க" என்று வேண்ட, "மன்மதசொரூப! பணம் வேண்டுவதில்லை: உமது வழிச்செலவுக்கு வைத்துக்கொள்ளும். அவர்கள் கவர்ந்தபொருளை மீண்டுங் கைக்கொள்கிறேன்" என்றுகூறித் தன்னிடமுள்ள வீரரைவிடுத்து அப்பெட்டியைக் கைக்கொண்டான். பின்பு வீரலக்ஷ்மியை நோக்கி 'மாதே! எங்குச் செல்ல எண்ணம்?' என, 'மகம்மதிய நாட்டுக்குப் போக உத்தேசம். அங்கு இவர்கள் கோட்பாடு செல்லாது' என, வீரமார்த்தாண்டன் "நான் ஒரு முக்கிய காரியார்த்தமாகப் போகவேண்டும். நீர் அந்தநாடடையும் வரையில் என் வீரர்கள் நூற்று வரையும் அனுப்புகிறேன். நீர் சுகமாகச் செல்வீராக" என்று சொல்லித் தான் செல்லு மிடஞ் சென்றனன்.

குரு தன்னறைக்குட் சென்று 'ஓ என்னுயிர்க்கினிய நங்காய்! உன்னை விட்டு உயிர் வாழ்வனோ! என்னைத் தணந்து ஏகினையன்றோ? அது நின்கருணையின் காரணமாமோ? கைக்கெட்டினது வாய்க்கெட்டாது போயிற்றே!' என நினைத்துத் தன் மனதை ஒருவாறு திடப்படுத்தி "சீ! அற்பப் பெண்ணே! உன்னையான் விடுவனோ? நீ எத்திறத்திற் சிறந்தவள்.? அற்பனைக் கட்டி யழுகின்றாய். என் கௌரவத்தையும், செல்வச்

பெயர் அவனுக்குக் காரணமாயது. உயர்ந்த உருவமும் ஒள்ளிய முகக்களையு முள்ளான். தேகவன்மையில் மிகுந்தோன். மயனைக் கொண்டு போய் அவன் முன்னிலையில் விட்டதும் "நீ யார்?" என்றான். அதற்கவன் "நான் ஒரு சிறந்த வம்சத்திற் பிறந்தோன்: என் பெயர் மயன் என்பர். என்னிடஞ் சின்னஞ் சிறிய ஒரு பை நிரம்பப் பொன்னுணயமுளது, விலையுயர்ந்த வேறு பணிகளில்லை. வேண்டுமாயின் பரீக்ஷிக்கலாம்" என்று கூற, அதற்குக் காராஆலி "நீ சொல்வது சொல்: உன்னைப் போகவிடின் ஆயிரம் பொன் கொடுக்கவேண்டும். நீ கொடுத்த பின்னரே உன்னை விடுதலைச் செய்வேன். உனக்குத் தெரிந்தோர் அனேகரிருக்கலாம்: அவர்களிடம் வாங்கிக் கொடு" என்றான். அதற்கு "அங்ஙனே செய்கிறேன்: என் வாக்கையே உறுதியாக நம்பி என்னை விடும்: என்பால் ஐயுற வேண்டாம்" என்றான் மயன். காராஆலி "இக்காலம் இரவாதலால் நீ இங்குத் தங்கிவிடு. நாளையதினம் போகலாம்" எனவும், மயன் "அங்ஙனஞ் செய்வது யாதொரு பயனுமில்லை: என் காதலி செல்கிறாள்: அவளை யானடைய வேண்டும். இன்றிரவு என்னை விடுக்க உமக்கு விருப்ப மில்லையேல்; உன் வாளுக்கு இரையாக்கும்" என்றிரக்கமுட னியம்பினான். இதைக் கேட்டுக் காராஆலி "சரி! உனதெண்ணம் நன்கு விளங்கியது: உன் காதலி உடுத்திருக்கும் உடையை எனக்கு நீ விவரமாய் எழுதிக் கொடு: அவளை நான் உன்னிடஞ் சேர்க்கிறேன். அங்ஙனஞ் செய்யின் நீ எனக்கு மீண்டும் ஆயிரம் வராகன் கொடுக்க

வேண்டும்'' என்று கூற, அவன் மிகுந்த உவகையுடன் உடன் பட்டு அவளுடுத்திருந்த உடையி னடையாளத்தை யுள்ளதுள்ளபடி எழுதிக் கொடுத்தான்.

இவனது நிலைமை யிவ்வாறிருக்க; காராஆலி கூட்டத்தைச் சார்ந்த ஒருவன் எஜமானன் முன்னிலையில் வந்து "இறைவ! சத்திரத்தலைவனாகிய நமது நண்பன் பாபா என்பான் தன் சத்திரத்தில் சோமதத்தன் வந்திருப்பதாகவும், அவனுக்கு உமது உதவி வேண்டியிருப்பதால், வேண்டியது வேண்டியாங்கு நமக்குக் கிடைக்குமென்பதாகவும் தன் புதல்வனிடஞ் சொல்லியனுப்பினன். நீர் அவ்விடம் போதல் நலம்'' என்றான். இதைக் கேட்டதும் காராஆலி, தன்னை யொருவரு முணராவண்ணம் வேடம் பூண்டு அச்சத்திரத்தினுட் செல்லவே, சோமதத்தன் காராஆலியிடங் கழறுவான் "நான் உனக்கொன்றுரைக்கின்றேன்: அது செய்யின் உனக்கு ஆயிரம் வராகனளிப்பேன். இதோ என்னருகிலுள்ளவர் பெயர் குபேரன். இவர் ஜயபுர தேயத்தார். நம் பாஷையறியார். இவர் உன்னை நாடிவந்த காரணம் யாதெனில், இவ்வழியாக வீரலக்ஷ்மி என்னும் மாதும் மன்மத சொரூப னென்னும் ஆடவனும் வருவர். இவர்கள் காமியப்ப குருவை அவமானஞ் செய்து வந்தமையால், அவர் உன்னுதவி கொண்டு மீண்டுஞ் சிறை செய்ய வெண்ணியிருக்கிறார். இக்காமியப்பகுருவோ மிகுந்த செல்வவான். குபேரனும் செல்வவான்.

பொருளெனப் படுவதோ:—

> 'பூரியர்தமை வேந்தாக்கும் : புவிபுரப்பிக்கும் : துய்க்குஞ்
> சீரிய வுண்டி சேர்க்கும் : தேவர்த முலகம் போக்கும்:
> காரிய மனைத்துங் கூட்டும் : கருதலர் தம்மைவாட்டும்' :
>
> (இராமாயணம்)

மேலும், 'இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு' ஆதலால் இப்போதே உனக்கு ஐந்நூறு வராகன் முன்னந்தருகிறேன். அவர்களைப் பிடித்து என்னிடம் ஒப்புவிக்க வேண்டும்' என்று கூற, காராளி "ஆம், 'பொருளிலார்க்கிவ் வுலகமில்லை' என்பதையே உறுதியாகக் கொண்டு நானும் என்கூட்டத்தாரும் வழிப் போக்கரை வழிபறித்துப் பொருள் சேர்க்கின்றோம். நீ சொல்லிய வண்ணஞ் செய்கிறேன். அவர்களுடுத்திருக்கும் உடையினடையாளமெழுதிக் கொடு" என்றான். சோமதத்தனும் உவகைகொண்டு அங்ஙனே செய்தனன். மயன், சோமதத்தன் இவ்விருவர் செயல்களிவ்வாறிருக்க:—

வீரலக்ஷ்மியும் மன்மத சொரூபனும் நெடுவழி நடந்து முடிவில் பரான்புரத்துள்ள கோபாலையர் சத்திரஞ் சென்று அமுதுண்டு ஒரு அறைக்குள் சயனிக்கச் சென்றதும், ஸ்ரீபிரான் மாளிகையில் நடந்தன யாவும் வீரலக்ஷ்மி விளம்பவே, மன்மத சொரூபன் கேட்டு மகிழ்வடைந்தான். இவ்விருவரும் அங்கு இரவு தங்கி நூறு கன்னிமார்கள் ஔரங்க பாதத்துக்குச் செல்லுமுன் விரைந்து சென்று அங்கோரிடத்திற்றங்கி வயோதிகராளித்த முடிப்பை மெல்லெனை அவிழ்க்க, அதிலொரு

மோதிரமும் ஒரு கடிதமுமிருக்கக் கண்டனர். அக் கடிதத்தைப் பிரித்துப்பார்க்க அடியில் வருவன மாயத் தலை கூறும் பாவனையாக எழுதியிருந்தது " ஓ பெருமை தங்கிய நங்காய்! காகிதத்தில் குறித்தவாறு நீ நடந்து கொள்வாயென நம்புகிறேன். நீ செய்ய வேண்டிய முதற்றொழில் யாதெனில், மனோரஞ்சிதத்தை அக்கன்னி மார்களினின்றும் நீக்குதல் வேண்டும். நீ அவளைக் கண்டு உன்னுடுப்புக்களை யவளுக்குக் கொடுத்து அவளுடுப் புக்களை நீ உடுத்திக் கொள்வாய். ஜாக்கிரதை! பின்பு அந்நூற்றுவருடன் நீ சென்று ஐதராபாத்தைச் சேர்ந் ததும் ஒரு சபை கூட்டும்படி அரசனை வேண்டிக் கொள். அவன் அங்ஙனஞ் செய்தவுடன் நீ அவனை வணங்கி இம் மோதிரத்தை அவனிடங் காட்டுவையேல், அவனுன்னைத் தன் சகோதரி போல் நேசித்து முகமன் கூறி விஷயங் களெல்லாம் விசாரிப்பன். ஸ்ரீபிரான் கோட்டையில் நிகழ்ந்த விஷயங்கள் யாவற்றையும் அவனுக்கு விளக்கு வாய்" என்றிருக்க, அவ்வாறே செய்வது உசிதமெனக் கொண்டு, நூறு கன்னியர்களைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினர். நாளை-பண்டிகைத் தினமாதலால், பிர யாணஞ் செய்யமாட்டா ரென்றும், கன்னிகோயிலுக்குச் செல்வ ரென்றும், மறு திங்கட்கிழமைவரையில் இங்கிருப்பரென்றும் பலர் பகரக் கேட்டுத் தங்களை றைக்குட் சென்று, அக்கடிதத்தில் குறித்தன எவ்வாறு முற்றுப் பெறுமென நினைக்கலுற்றனர்.

பொழுது புலர்தலும் நூறு கன்னியர்கள் கன்னி கோயிலுக்குப் போகிறா ரென்று கேள்வியுற்று, அங்கு

அநேக ஸ்திரீகளும் புருடர்களும் அக்கோயிலுக் கருகில் வந்து கூடினர். நூறு கன்னியர்களும் மெல்லெலன நடந்து கோயிலுக்குட் சென்றனர். அப்போது ஜனச் செறிவால் ஆரவாரம் அபரிமிதமாயிருக்க, வீரலக்ஷ்மி அக்கன்னியர் கூட்டத்தினுடனுழைந்தாள். மனோரஞ்சிதம் கோயிலுக்குட் சென்றதும், "ஓ தெய்வமே! உவமையில்லாய்! நின்னடி சேர்ந்த என்னை மனக்கவலையினின்றும் மாற்றுதலென்னே! ஸ்ரீபிரான் மாளிகையில் ஒரு வயோதிகர் என்னை மீட்க முயல்கிறேனென்று கூறினரே! பெரியோர் செயற்கரிய செய்வரே! இதுகாறும் செய்த தொன்றுமில்லையே! ஐதராபாத் மிகவும் சமீபித்ததே, என தன்பிற்குரிய காதலன் என்னைக் காணாது மதிமயங்கினனோ? என்னைத் தப்புவிக்க முயன்றும் பயன் படாதொழிந்ததோ? அவரை நிந்திப்பதில் பயனென்ன? எல்லாம் விதியின்படியேவிளையும்'' என்று துக்கித்திருப்ப, மற்றக் கன்னியர்கள் கடவுளைத் தொழுது நின்றனர். அவளருகிருந்த வீரலக்ஷ்மி, இதுதான் சமயமெனக் கொண்டு கையிலுள்ள மோதிரத்தை யவளுக்குக் காட்டுதலும், "சரி, நற்சமயம் வாய்த்தது. நம்மை இரக்ஷிக்க இதோ வந்திருக்கிறாள் ஒருமாது'' என நினைத்து, அவளை நோக்க, வீரலக்ஷ்மி அவளருகிற் சென்று "நீங்கள் இந்நாட்டின் மகமதிய சக்ரவர்த்தி அரண்மனையிலிருப்பது எனக்குத் தெரியும். இன்றிரவு சமயம் வாய்த்தபோது நீ மேன்மாடத்திருந்து இந்நூல் கயிற்றைத் தொங்க விடு. அக்கயிற்றின் நுனி பூமியில் வந்து படிந்திருத்தல் வேண்டும். நான் அந்த

நூற் கயிற்றை யசைத்தவுடன் நீ இழுத்துக் கொள் இந்நூற் கயிற்றின் நுனியில் கட்டிய பருத்த தோர் கயிறு உன்கைக்குப் பட்டதும், அப்பருத்த கயிற்றின் நுனியை மேன் மாடத்திலுள்ள ஒரு ஸ்தம்பத்தில் வலிந்து கட்டுவாய். எல்லாம் வல்ல இறைவன் செயல் போல் யாவும் முடியும்" என்று இனிய குரலுடன் கூறித் தான் கொண்டு சென்ற மெல்லிய இழையாய அந் நூற் கயிற்றை அவளிடமளித்தாள். கடவுளைத் தொழுத பின் கன்னியர்கள் தமதிடஞ் சேர்ந்தனர். வீரலக்ஷ்மி தன்னறை சார்ந்து தன் காதலனுக்கு நிகழ்ந்த விஷயத்தை விளம்பினள்.

மன்மத சொரூபனும் வீரலக்ஷ்மியும் 'நமது காரியம் எது போது சித்திபெறுமோ' என்றிருக்கும் போது சூரியனுங் குடதிசை யடைந்தான். இருளுங் கம்யது. இவர்கள் குறித்தவிடஞ்சென்று தாங்கள் கொண்டுசென்ற பருத்த கயிற்றின் நுனியை, மனோரஞ்சிதம் தொங்கவிட்ட அந்நூற் கயிற்றினுனியில் முடிந்து அக் கயிற்றை யசைக்கவே, மாடமேலிருந்த மனோரஞ்சிதம் வீரலக்ஷ்மி விதித்தபடி செய்தனள். வீரலக்ஷ்மி சிறிது நேரம் தன் காதலனுடன் இனிய வசனங்கூறி, அக் கயிற்றின்வழியாய் ஏறிச் சென்றாள். சென்றதும் மனோரஞ்சிதம் "என்னரிய, நேசி! நீ என்னைச் செய்யச் சொல்வது யாது? அதை எனக்கு உரை" என, அவள் "ஓ மாதே! உன்னைத் தப்புவிக்க அவ்வயோதிகர் எனக்கு உத்தரவளித்திருக்கிறார். உனக்குப் பிரதியாய் நான் ஐதராபாத்துக்குச் செல்கிறேன். என் காதலன்

மன்மத சொரூபன் உனக்காகக் கீழே காத்துக் கொண்டிருக்கிறார். அவருன்னைத் தன் தங்கைபோலெண்ணுவர். அவர் விஷயத்தில் நீ வேறொன்றும் நினையாதே. அணிந்திருக்கும் உடுப்பை நாம் மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்'' என்றாள். இதைக் கேட்டு "ஆ! இம்மாதை யான் என்ன வென்று கூறிப் புகழ்வேன்! என்னிமித்தம் இவள் செல்கிறே னென்றனளே! தனக்கு மிஞ்சிய தன்றோ தருமம்" எனப் பலவாறு நினைத்து அவள் விஷயத்தில் துக்கித்து, அங்ஙனே செய்வனெனச் செப்பித் தானுடுத்திருந்த உடையை யவளுக்குக் கொடுத்து அவளணிந்திருந்த ஆடையைத் தானணிந்தாள். வீதியில் எவரேனும் வந்து விடுவார் என்று நினைத்து மன்மத சொரூபன் அருகிலுள்ள ஒரு புதரில் ஒளித்திருந்தான். இவர்களிருவரும் சிறிது நேரம் வார்த்தையாடிய பின், மனோரஞ்சிதம் அக்கயிற்றின் வழியாய் இறங்கினாள். உடனே புதரிலிருந்த மன்மத சொரூபன் வெளிப் போந்து அவளுக்கு உதவி புரிந்தான். சிறிது நிமிஷங்களுக்கெல்லாம் வீரலக்ஷ்மி பருத்த கயிற்றின் நுனியை ஸ்தம்பத்தினின்றவிழ்க்க, அக்கயிறு கீழே விழுந்தது.

அத்தியாயம். VIII.

—:o:—

மன்மத சொரூபன் மனோரஞ்சிதம்
காமியப்ப குரு ஏவலால்
ஆமடா பாத்துக்குச் செல்லல்:
வீரலக்ஷுமி சிறைப்படுதல்.

மனோரஞ்சிதம் மாளிகையி லிருந்திறங்கினவுடனே, மன்மதசொரூபன் அவளுக்கு முகமன் கூறிக் கீழ்விழுந்த கயிறு அங்கிருப்பின் மோசம் வருமென வெண்ணி, அக்கயிற்றை யெடுத்துக்கொண்டு தன்னறைக்குள் அவளை யழைத்துச் செல்லும்போது, "உன் காதலி எனக்கு மிகவும் உதவி புரிந்தனள். அவளுக்கு யான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். தன்னுயிரைப் பொன்னுயிரென மதியாத்திறத்தினள்" என்று கூற, வழியில் யாரேனும் இச்செய்தி யுணர்வர் என்ற எண்ணங் கொண்ட மன்மத சொரூபன் "ஓ அம்மணீ! இங்கே யாது மியம்புதல்வேண்டாம். நம்மறைக்குட் சென்றதும் நாம் பேசிக்கொள்வோம்" என்று சொல்லி அவளுடன் சென்று தன்னறை சார்ந்து ஸ்ரீபிரான் மாளிகையிலிருந்து கொணர்ந்த முடிப்பின் விருத்தாந்தங்கள் யாவும் விளம்பி, "நீ உன் நாட்டுக்குச் செல்ல ஒண்ணாது: அப்பூராமன் செல்வச் சிறுவன் என் காதலியை விடுத்தானெனுஞ் செய்தி நமது செவிப்பட்டதும் நீ செல்லலாம். இப்போது செல்வையாயின் உனக்குக் கெடுதியே விளையும்" என, மனோரஞ்சிதம் "உன் காத

வியை அவ்வரசன் விடுதலைச் செய்யானாயின் என் கதி என்னவாம்?'' என்று வினவினாள். அதற்கு மன்மதசொரூபன் 'மாதே! நாம் " ஐதராபாத்துக்குச் செல்வோம். என் காதலியைப் பற்றிய சங்கதிகளைக் கவனமுடன் விசாரிப்போம். அம்மாதுக்குக் கெடுதிவிளையின் உன்னை மறைத்து வைத்துக் காத்தல் செய்கிறேன். சின்னாட் சென்றதன்பின் நீ உன் காதலனிடஞ் சென்று சுகித்திருக்கலாம்'' என்று கூறலும், அவள் மனமகிழ்வடைந்து மன்மதசொரூபனிருக்கும் அறையை யடுத்துள்ளதோர் அறைக்குட் சென்று தன் காதலனை நினைத்து நினைத்து வருந்திக் கண்வளர்ந்தாள். மன்மதசொரூபனும் அங்ஙனே தன் காதலியை நினைத்துருகி நித்திரை செய்தான். பொழுது புலர்தலும் அவர்கள் பிரயாணமாகிச் செல்லுங்கால் வெய்யோன் வெப்பத்தைச் சகிக்கவாற்றாது அங்குள்ளதோர் சத்திரஞ் சென்று தாகந் தணிப்பாராயினர். அப்போது ஒரு மகம்மதியன் விரைந்து சத்திரத்துட் புகுந்து அவ்விருவரையும் நோக்கித் தன்னிடமுள்ள கடிதத்தை எடுத்துப் பார்க்கும்போது அதிற் குறித்துள்ள அறிகுறிகள் இவர்களிடங் காணுதலும் உடனே அதனைவிட்டு வெளியே வந்தான். பின்பு இருவரும் சிறிது நேரமிருந்து நந்தயபுரம் நடக்கலாயினர். சில காவதங் கடந்து ஒரு கானகத்திடை செல்லுங்கால் முன்னந் தோன்றிய அம்மகம்மதியன் அங்குக் காணப்பட்டனன். அவனைக் கண்டதும் "என்ன! நமக்கு ஏதோ கெடுதி விளையும்போலும் இவன் நம்மை நோக்கும் நோக்கம்'' என்று இருவரும் நடுநடுங்கினர். அப்

போது அவன் ஒரு பறையறைந்தனன் : புதரில் பதுங்கியிருந்த மகம்மதியர் பதின்மர் விரைந்துவந்து போதல் கூடாதென்று தடுத்தனர். இருவரும் மதிமயங்கித் தியங்கினர். அவ்விருவரையும் பற்றிக் கொடுபோய், காராஆலி முன்னிலையில் விடுதலும், அவன் சோமதத்தன் எழுதிக்கொடுத்த வண்ணம் அவர்களுடையிருப்பதை யறிந்து தன் தோழனையழைத்து "ஓ மூராட்! இவர்களை மாளவ நாட்டெல்லைக்குள் கொண்டு செல்: இவர்களைச் சிறைப்படுத்தக் காத்திருப்பன் சோமதத்தன், அவன்வசம் ஒப்புவித்துக் கொடுக்கவேண்டிய மற்றைய ஐந்நூறு வராகனையுங் கைக்கொண்டு வருதி" என, இருவரையு மழைத்துக்கொண் டேகினன் அது காலையில் மன்மதசொரூபன் முன்னந் தனக்குந் தன் காதலிக்குஞ் சம்பவித்த இடுக்கண் முற்று முணர்ந்துள்ளானாதலால், அவனுள்ளம் எவ்வாறிருக்கு மென்பது ஊக்கமுடன் வாசிப்போருணராதிரார்.

நூறு கன்னியர்கள் செல்லும் போது காராஆலி கூட்டத்தார் அவர்களை யெதிர்த்து மயன் கொடுத்த அடையாளத்தைக் கொண்டு வீரலக்ஷ்மியை மயன் காதலியென நினைத்து, அவளைப் பிடித்தேகினர். கன்னிமார்களுடன் செல்லும் வீரர் தங்களாலியன்றளவு அவளை மீட்க முயன்றும் பயன்படா தொழிந்தது. பின்பு அவளை அக்காட்டின்கண்ணுள்ள வீட்டுக்குள்ளடைத்து, ஒருவன் காவல் காத்திருந்தான். அப்போது அவள் பலவாறாக நினைப்பாளாயினள். "ஐயோ! என் கதி என்னவா முடிவுபெறுமோ யானறிகிலேன். நம்

மை யிங்ஙனஞ் சிறைப்படுத்தியது நங்காதலரேவலோ? அவர் இவர்களை இங்ஙனஞ் செய்யத் தூண்டினரோ? அங்ஙனமாயின் அவர் காதலை என்னவென்றியம்புவேன் ....(சிறிது நேரம் யோசித்து) ஸ்ரீபிரான் மாளிகையில் நடந்த விஷயங்கள் முற்று முணர்ந்தும், நான் தப்பி யுய்யும் மார்க்கமறிந்தும் இவர் காதலின் காரணமா யிங்ஙனஞ் செய்தல் நலமோ? அவ்வயோதிகருக்குக் கூறிய வாக்குறுதி தவறுமே! ஆகவே இவரெனக்கு இழிவையே விளைத்தனர்............(சற்றுநேரம் ஆலோசித்து) சீ! அவரிங்ஙனஞ் செய்யத் துணியார். கல்வி கேள்விகளிற் சிறந்த நங்காதலர் இங்ஙனஞ் செய்வரோ? செய்யார்...........(பின்னுஞ் சிறிது நேரம் சிந்தித்து) பின்னர் நம்மைச் சிறை செய்த காரணமியாது? ஒன்றுந் தோன்றிற்றில்லையே'' என்று பலவாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போது, மேகநாயகி என்ற ஒருமாது அங்குவந்து அவளடி பணிந்து "ஓ அம்மா! என் எஜமா உனக்கு வேலை செய்ய அனுப்பினாங்க. நீ ரொம்ப அழகாயிருக்கிறு. உன் ஊட்டுக்காரன் உன்னெ பத்தி தூக்கி தூக்கி பேசுராங்க'' என்றுகூற, "ஓ பெண்ணே! நீ விவரிக்காது இங்ஙனங் கூறுதல் சரியன்று. என் காதலன் யார்? அவரை யுன் எஜமான் சிறை செய்தனனோ? அவருடன் ஒரு பெண்ணில்லையா? அவளையும் சிறை செய்தனனோ? எனக்குத் தெளிவாய்க் கூறுவாய்'' என்று வீரலக்ஷ்மீ கேட்குங்கால் காராஆலியும் அவன் கூட்டமும் அங்கு வந்து வீரலக்ஷ்மியை யழைத்துச் சென்றனர், மேகநாயகியும் அவளுடன் சென்றாள்.

இங்ஙனம் புறப்பட்டுப் பல காவதங் கடந்து ஒரு காட்டில் தங்கி மேகநாயகியை அவளுக்குக் காவல் வைத்து விட்டுக் கொள்ளைக்காரர் சென்றனர். அதுகாலை வீரலக்ஷுமி அவளை நோக்கி "பெண்ணே! நீ எத்தனை வருடமாய் இவர்கள் ஆளுகைக்கு ளிருக்கிறாய்? நீ சிறைப் பட்ட காரணம் யாது?" என, அவள் கண்ணீர் விட்டழுது "உன்னாலே என்ன செய்யமுடியு. நானு அகப் பட்டுகினு ரெண்டு வருசமாவுது. ஐதராபாத்திலிருந்த ஒரு பணக்கார் பெண்டாட்டியோடு இந்த வயியே போனார். அவர் பீடார், இண்டோர் என்னு ஊருக்கு நடுப்புற போகச்சே காரா ஆலி ஜனங்க எங்களை யடித் தாங்க. நானும் அவர் பெண்டாட்டியும் அவங்ககையிலே ஆபட்டுக்கினோம். அந்த பெரபு தன் பெண்டாட்டிக்கு மாத்திரம் ரூபா கட்டி தன் பெண்டாட்டியை இட்டு கினு பூட்டார். எனக்குக் கட்டலே. நானிங்கே தானே யிக்கிறேன். காரா ஆலி எனக்கு வவுறு ரொம்ப சோறு போர்ரார். சோத்துக்குப் பயப்படலே. இவங்க கிட்ட ஆம்டாத்துக்கு முன்னே நான் ஒருத்தர் மேலே ஆசப் பட்டேன். அவருக்கு என்மேலே ஆசெ. நானெப்போ அவரண்டே போவனோ தெரிலே. அவருக்கு ரொம்ப அழகு, நல்ல கொணம். அவரு பேரு மேகநாதன். அவருக்கிட்டபோக எனக்கு ஆசை யிருக்குது" என்றாள். இதைக் கேட்டதும் அவள் பேசும் கொச்சைப் பேச்சுக்குப் புன் சிரிப்புக்கொண்டு "நீ வருந்த வேண்டாம். உன்னை எவ்வாறாயினும் மீட்க முயல்கிறேன். நான் சொல்வது உனக்குத் தெரிகிறதா? உன் போல்

பேச எனக்கு வரவில்லை'' என்றாள். அதற்கவள் "நீ அப்படி செய்யணுமானா எனக்காக ரொம்ப பணம் கொடுக்குணும் இல்லாகட்டி நீ என் எஜமானிடத்தே என்னைப் பத்தி பேசுற பேச்சாலே அவருக்கு சந்தோசம் வந்து என்னை உட்டுடுவார். அவருக்குப் பலம் ரொம்ப'' என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது காரா ஆலிக்கு நண்பனும் ஜபபுர தேயத்தானுமாகிய ஒருவன் அவ்வழியாய்ப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தான். இவன் வீரலக்ஷ்மியை நோக்கி "ஓமாதே! இங்கு நிற்பதின் காரணம்யாது?'' என, வீரலக்ஷ்மி தனக்கு நேர்ந்த கெடுதியை அவன்பாலியம்பி, "ஐயா! காராஆலி உமக்குத் தெரியுமா? நீர் எவ்வாறு மகம்மதியரிடம் அகப்படாது வருகிறீர்?'' என, அவன் "மாதே! காராஆலி நண்பன் நான். மாத மிருமுறை இம்மார்க்கஞ் செல்வேன். காரா ஆலி கூட்டத்தார் என்னை யொன்றுஞ் செய்யார்'' என, வீரலக்ஷ்மி "காரா ஆலி எத்தகையன்? அவனைப் பற்றி விவரமாய்க் கூறுதிர்.'' என்று விநயமுடன் வினவவே, அவன் "காரா ஆலி காருண்யமுள்ளவன்: மிகவும் பலசாலி: நற்குணங்களால் நிரம்பியுள்ளவன்: இவன் வருவாய்க்கு மேல் செலவு செய்யுமியல்பினன்: ஆதலால் இக்கொடிய செயலுக்குடன்பட்டான். இவனோடு சமமாக எண்ணப் பட்டவன் வீரமார்த்தாண்டன். இவன் வீரமார்த்தாண்டனைப் போல் நியாயப் பிரமாணப் பலனை யிழந்தவன். இவன் அப்பலனை யிழத்தற்குக் காரணம் அதிக செலவு செய்த தினாலேயாம்.

'ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து, மதிகெட்டுப், - போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய், எழ் பிறப்புந் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனா நாடு'

(நல்வழி)

என்ற ஆன்றோர் வாக்கை யறிந்திலன்: இவன்" என்று கூறித் தன்வழியேகினன். சிறிது நிமிஷத்திற்கெல்லாம் காராஆலி கூட்டத்தார் இவ்விருவரையும் உடன் கொண்டு, ஔரங்கபாத்துக்குச் சென்று, அங்குத் தங்கி மீண்டும் புறப்பட்டு அசேய் நாட்டுக்குச் சென்றனர். அங்குச் சென்றவுடன் காராஆலி வீரலக்ஷ்மியை நோக்கி "பாவாய்! நீ நின்காதலனைக் கண்டு களிப்புறுவாய்" எனலும், மனந்திடுக்கிட்டு நம்மை யிவர்கள் சிறைப்படுத்தியது நங்காதலர் நிமித்தமே யாகும். நாம் என்னென்னவோ நினைத்தோம். காதலின் காரணமாய் அவமானமும், வாக்குறுதியுங் கவனியாது இங்ஙனஞ் செய்தனரே" என்று பலவாறு யோசித்து வருந்திய பின், காராஆலியை நோக்கி "ஐய! உமக்கு மிகுதியும் பொருள் தருகிறேன். மேக நாயகியை என்னுடனனுப்பும்" என, அதற்கு யாதொரு உத்தரமு மளிக்காது அவளை யழைத்துக்கொண்டு மயனிருக்கும் அறைக்குட் சென்றான். மயன் தன் காதலியென நினைத்துத் தழுவத்தொடங்கவே, தன் காதலனல்லனென உணர்ந்த வீரலக்ஷ்மி மிகுந்த கோபாவேசத்தோடும் அச்சத்தோடும் கதறினாள்.

அத்தியாயம் IX

:o:

வீரலக்ஷ்மீ மேகநாதனால் சிறையினின்றுந் தப்புதல்.

மயன் உடனே சினங்கொண்டு காராஆலியை நோக்கி 'என்ன ! இங்ஙனஞ்செய்தாய் ! நான் காதலித்த மாது இவளல்லள்' என, அவன் அதிசயமெய்தி அசைவற்று நின்றான். மயன் வீரலக்ஷ்மியை நோக்கி "நாமிருவரும் முன்னம் நட்புப் பூண்டவரன்றோ ! என் காதலி மனோரஞ்சிதத்திற்குப் பதிலாகஅவர்களுன்னைக் கொணர்ந்தார்போலும்" என்று சொல்லுகையில் காராஆலி மயனைநோக்கி "இவள் உன் காதலியல்லவோ? இம்மாது யார்? முன்னம் எனக்குக்கொடுத்த விவரப் பிரகாரம் இவளிருக்க, நானிவளைக் கொணர்ந்தேன்" என்றான். மயன் அவளை நோக்கி, "உன்னுடன்வந்த உன் கணவனெங்கே? நீ என் காதலிக்குப்பதிலாக நூறு கன்னிமார்களுடன் சென்றதின் காரணம்யாது? அவள் யாண்டுற்றாள்"? என, வீரலக்ஷ்மி, "நான் அவளை மீட்க இங்ஙனஞ் செய்தேன். உன் காதலியை என் காதலனிடம் அடக்கஞ் செய்திருக்கின்றேன்" எனலும், காராஆலி அவளை நோக்கி 'நீ வீரலக்ஷ்மி என்னும் பெயரினளோ?' என்று கேட்க, 'ஆம்' எனக்கூறினள். இதைக் கேட்டதும் காரா ஆலி கூறுவான் 'ஐயா ! சங்கதி முற்று முணர்ந்தேன். நான் இரண்டு காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. உன காதலியை உன்னிடம் ஒப்புவித்தல் ஒன்று: மன்மத சொரூபனையும் வீரலக்ஷ்மியையும் கொண்டுசெல்லல் இரண்டாவது. மனோரஞ்சிதம் மன்மதசொருப

னுடன் ஆமட்பாத்துக்குச் சென்றுகொண் டிருக்கிருள்' என்றான். இதைக்கேட்டதும் வீரலக்ஷ்மி "நங்காதலர் மீண்டும் காமியப்ப குருவின் வசப் பட்டனரோ! 'பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்பதுபோலா யிற்றே" என்றழத் தொடங்கினாள். காராஆலி மயனை நோக்கி 'ஐயா! என் கூட்டத்திற் சேர்ந்த இருவரை அனுப்புகிறேன். இவர்கள் வழியில் அவர்களைக் காணி னுங் காணுதல்கூடும். கண்டாராயின் உன் காதலியுனக்கு எளிதில் கிடைப்பள்' எனவே "நானும் அவர்களோடு செல்கிறேன்" என்று மயன் கூறலும், "பொருள்தராது போதல் கூடாது" என்று காராஆலி கூறிக் கதவைத் தாளிட்டு வெளியே சென்றான். மயன் வீரலக்ஷ்மியை நோக்கி, "பெண்ணே! நீ அவளுக்கு அவ்வுதவி புரிந்த தன் காரணம் யாது?" என்று கேட்க அவள் "நான் உனக்கு நடந்த விருத்தாந்தங்களை விவரிக்கின்றேன். மனோரஞ்சிதம் உன் காதலி யென்று கூறினுயாதலால், நின் பெயர் சுந்தரானந்தன்?" என, அதற் கவன் 'என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்'? என்று வினவ, அவள் ஸ்ரீ பிரான் மாளிகையில் நடந்த சங்கதி முதல் அவளை மீட்ட சங்கதிவரையில் சாங் கோபாங்கமாகக் கூறினாள். "அம்மாளிகையில் ஒரு வயோதிகரிருக்கிறார் என்று கூறினை அவர் யார்?" என்று வினவ "அவரின்னாரென்று எனக்குத் தெரியாது. யான் ஒருவயோதிக ரிருக்கிறாரென் றும், அவ்விடத்தில் நடந்த தாகக் கூறிய சங்கதியாவும் நீர் ஒருவரிடமு முரை யாதிருப்பீராக" என, மயன் "அங்கு மூலையில் நிற்கும்

பெண்யார் ?'' எனலும், வீரலக்ஷ்மி "நாம் பேசியதை அவள் கேட்டிலள். அவள் நம்மைப் போன்றவளே'' என்று சொல்லி அவளை நோக்கி "ஓ பெண்ணே! நான் கூறுவதைச் செவிகொடுத்துக் கேட்பாய். நீ சமயம் வாய்க்குந்தறுவாயில் தப்பியோட முயல்வாய். இல்லையேல் நீயும் சிறைக்கண் வருந்த நேரிடும்'' என்று கூறினள். அதற்கு மேகநாயகி "இந்தக் காடெல்லா சுத்தி சுத்திவரேன். நானு தப்பிப்போக முடியலே, கெட்ட ஜந்துக்க கொண்ணுபோடும். ஓடிபோக பயமாயிருக்குது'' என, கதாநாயகி "உனக்கு நல்ல தருணம் வாய்க்கும்போது தப்பிப் பிழைத்தல் நலம். காராஆலி என்னைக் குருவினிடஞ் சேர்க்க முயல்வன். அக்காலையில் நீ மாளவ நாட்டுக்குச் சென்று நாம் முன் குறித்துப் பேசிய வீரமார்த்தாண்டனிடம் நடந்த சங்கதிகளைக் கூறுவாய்'' எனலும், "உயிர் போனு போவட்டும், அப்படியே செய்றேன்'' என்றாள். வீரலக்ஷ்மி மயனை நோக்கி "நீர் பயப்படவேண்டுவதில்லை. பொருள் கொடுத்துப் புறஞ்செல்லலாம்'' என, அதற்கு "நீ சொல்வது சரி. நான் மனோரஞ்சிதத்தின் தந்தைக்கும் எனது தந்தைக்கும் நிருபமெழுதி யிருக்கிறேன். அவர்களதிக திரவியம் அனுப்புவர்'' என்றான். கதா நாயகி "நீர் கூறுவது உண்மையே. என் நண்பினள் மேகநாயகி வீரமார்த்தாண்டனிடஞ் சென்று விஷய முரைப்பின், அவன் தன் கூட்டமுடன் வந்து காராஆலியைத் துரத்துவன்'' என்று கூறக்கேட்டு மயன் சந்தோஷத்தால் பாவசமாயினன். பின்பு கதாநாயகி மேக நாயகி

யை நோக்கி "நான் கூறியது உனக்கு நன்ருய்த் தெரிந்ததா? அங்ஙனமே செய்வாயா?" எனலும், "ஆவட்டு அம்மா" என்று உறுதிமொழி யுரைத்தாள்.

இவர்களிங்ஙன மிருப்ப, காராஆலி கதவைத் திறந்து உள்ளே நுழைந்து மயனை நோக்கி "நான் ஏவலா ளிருவரைப் போக்கினேன். அவர் அதிக விரைவுடன் சென்று உன் காதலியைக் கொணர்வர். நீ மனம் வருந்துதல் வேண்டாம்" என்று கூறி, வீரலக்ஷ்மியை நோக்கி "நீ என்னுடன் வருவாய்" என்றழைத்தான். "ஏனழைக்கிருய்?" என்று மயன் கேட்ப, "அதை நின்னிடம் இயம்புதல் ஏன்? உனக்குச் சம்பந்த மில்லாததைக் குறித்து நீ பேசவேண்டுவதில்லை" எனலும், மயன் "ஓ காராஆலி! நீ இம்மாதுக்காக என்ன கேட்கிருய்? உடனே தருகிறேன். இல்லையேல் என்பிராணனே யதற்குப் பதிலாகும். நீகொடியனுன அக்குருவினிடம் இவளை யனுப்புதல் வேண்டாம். நான் உஜ்ஜயின் மாளிகைப் பிரபுவின் ஏகபுத்திரன். வேண்டும் பொருள் நினக்குக் கொடுக்க வல்லவன்," என்று கூறுதலும், "இதை முன்னரே யுணரின் உன்னை ஐயாயிரம் பொன் கேட்டிருப்பேன். இருக்கட்டும்" என்று கூறி, வீரலக்ஷ்மியை நோக்கி மிகுந்த கோபத்துடன் "உடனே எழுந்திரு என்னோடு வருதிற்கு" என்ருன். "அதற்கு யானுடன்படேன்" என்று மிக்க கோபமுடன் மயன் கூறவே, உடனே காராஆலி கூட்டத்தார் மயனுக்குக் கெடுதிபுரிய ஓடிவந்தனர். இதற்குள் கதாநாயகி "ஐயா! நீங்கள் இவருக்கு யாதொரு கெடுதியுஞ் செய்ய வேண்

டாம். இடம் பொருள் ஏவல் ஆகிய இம்மூன்றும் கருதாது கூறினீர்'' என்று கூறி அவனுடன் நடக்கலுற்றாள். மேகநாயகி அவள் பின் தொடர்ந்தனள். முன்போல் மயன் தன்னந்தனியனாய் அவ்வறைக்குளிருந்தான்.

காராஆலி வீரலக்ஷ்மி மேகநாயகி இம்மூவரும் பரான் புரஞ் சென்றனர். அங்கு இரவு தங்கி மாளவ நாட்டெல்லைக்குள் செல்லுமுன், அங்கோரிடத்தில் காராஆலிக்குச் சுதந்திரமான ஒரு நிலவறையின் முகப்பில் தன் நண்பன் மூராட் இருக்கக் கண்டு ''நண்ப! மன்மத சொரூபனுடன் அனுப்பியமாது வேறு. சோமதத்தனுக்கு வேண்டியவள் அவளல்ல. இதோ வருகின்றாள். என் நண்பர்களாகிய சாட், பெட்ரிட்டன் என்பவரை உன்னிடமனுப்பினேன்: அவர்கள் வந்தார்களா?'' என்று கேட்க, ''அவர்கள் வந்தனர். சிறிது நேரத்திற்கு முன் நான் உமது கட்டளைப்படி அவ்விருவரையும் சோமதத்தன் வசம் ஒப்புவித்தேன். அவன் அவர்களைக் கொண்டு சென்றனன். நீ யனுப்பிய இருவர் அவர்களை வழியில் கண்டு பிடிக்கக் கூடும்'' என்றான். இதைக் கேட்டு உவகை கூர்ந்தான் காராஆலி. உடனே தன்னுடன் வந்த மாதர்களை நிலவறைக்குளழைத்துச் சென்று அவர்களைவிட்டு மீண்டுவருந் தறுவாயில் ஒருகூட்டத்தார் ஆரவாரத்துடன் வருவதை மறைந்திருந்து பார்த்த போது தன்நண்பன் மேகநாதனென்றுணர்ந்துசந்தோஷித்தான். அவ்வறைக்குட் சென்ற இருவரும் தப்பி யுய்யும் வகையில்லையே யென்றேங்கியிருப்ப, மேகநாதாவென்று காரா ஆலி விளித்த சத்தங்கேட்டு இருவரும் தப்பியுய்ந்

தோமென ஆனந்தத்திலாழ்ந்தனர். காராஆலி மேக நாயகியின் காதலன் தன் நண்பனென்றுணராததலால், "நண்டைச் சுட்டு நரியைக் காவல்வைப்பதுபோல" அவனை அந்நிலவறைக்குக் காவல்வைத்துத் தன்னிடஞ் சார்ந்தான். அவன் மீண்டதும், மேகநாயகி கதவினருகிற்சென்று "எனது ஆசையா இங்கு வந்திருக்குது" என, இவள்குரலைக் கேட்ட மேகநாதன் அவ்வறைக் கதவைத்திறந்து "கண்ணே! உன்னாலே ரொம்ப கஷ்டப்பட்டேன். தப்பியோடிப்போலாம்" என்றான் மேகநாயகி தன் காதலனுக்கு வீரலக்ஷ்மியின் விருத்தாந்தங்களைக்கூறி அவள்மேல் அவனுக்குப்பக்ஷம் ஊட்டினாள். பின்பு வீரலக்ஷ்மி மேகநாதனிடம் வந்து, 'வழுக்கி விழுகையில் ஊன்றுகோல்போல் உயிரைக் காக்கவந்த உத்தம ஐய! 'தப்பிப் பிழைக்கலாம் என்று கூறினாய்; எங்ஙனம் முடியும்' என, "இந்த நெலவறையிலிருந்து போக பின்னேரெண்டு வழி இருக்குது. ஒரு வழி குதரை கட்ற இடத்துக்குப்போகுது. அங்கே யாராவது இருப்பாங்க. ஒருவழி மலைக்கு பக்கம் போகுது. அது இருட்டுவழி அப்படித் தான் நாம்ப போவோணும்" என்று கூறலும் மூவரும் அவ்வழியே சென்று மலையருகே குறுகி மெல்லெனெ நடந்து ஒரு மணிக்குள்ளாகப் பராங்புரஞ் சத்திரத்துட்சென்று உண்டியருந்தி மீண்டும் மாளவ நாட்டுக்குச் செல்லப் பயண மாயினர். அவ்வூரினையடைந்து ஆண்டுள்ள சத்திரத்தில் போஜனமருந்துங்கால் மனிதர்கள் ஓடி வரும் ஓசை கேட்டு மூவரும் நடுங்கினர். வீரலக்ஷ்மி ஆபத்துக்

காலத்தும் மனநிலை தளராதவளாதலால் சத்திரத்தின் பின்புறஞ் செல்வோமென்று சொல்லிக்கொண்டே யோட இருவரும் அவள்பின் தொடர்ந்தனர். அங்கு முன் நட்புப்பூண்ட சுப்புசெட்டியை வீரலக்ஷ்மி கண்டு அவரிடமோட, மற்றிருவரும் பின் தொடர்ந்தோடினார். உடனே சுப்புசெட்டி "கதவைச்சாத்து: திறவாதே" என்று உரத்துக்கத்தவே சத்திரக்காரனும் அங்ஙனே செய்தனன். சுப்புசெட்டி "வாருங்கள்: உங்களைப்பின் பற்றி வந்தோர் கொடியவர்போல் தோன்றுகின்றனர். அவர்கள் கதவையுடைத்து உள்ளே வருவார்போலும்! நாம் இங்குள்ள நிலவறை வழியாச்செல்வோம் என்று கூறி ஒருவிளக்கைக் கையிற்கொண்டு அம் மூவருடன் சென்றபோது,மூவரும் முன்னர் அவ்வழியுணர்ந்திராமை யால் படிதவறி விழுந்தனர். மேகநாயகி பயத்தால் நடுங் கினள். அதுபோது கொள்ளைக்காரர் கதவை யுடைத்து உட்சென்று எங்குச் சுற்றியும் அவர்களைக்காணாராகி, சத்திரத் தலைவனை நிந்தித்துத் தம்மிடஞ் சென்றனர்.

மிகுந்த வைபவத்துடன் பணிசெய்வார் பலர் தன்னைப் புடைசூழச் சிறந்ததோர் மாளிகையில் வீற்றி ருக்கும் காமியப்ப குருவினிடம் சோமதத்தனும் குபேர னும் சென்று "சுவாமி! தங்களபிப்பிராயத்தை முடித்து வந்தோம், அவர்களைச் சிறையிலடைத்து வந்திருக்கி றோம்" என, "என் பிள்ளைகாள்! நீர் ஆலயத்தினிமித் தம் மிகுந்த நன்மை புரிந்தீர்: இருக்கட்டும்" என்று சொல்லித் தான் அவள்விஷயமாய் முன் நடந்த சங்கதி யை இவர்களுக்குரைத்தனளோ இல்லையோ என்று

தெரிந்துகொள்ளுமாறு, "வரும்வழியில் வீரலக்ஷ்மி உங்களுக்கு யாதாயினுஞ் சொல்லினளா?" என்று கேட்ப, "ஒன்றுஞ் சொல்லவில்லை. அவர்களைக் காரா ஆலியின் உதவிகொண்டு மிகுந்த ஜாக்கிரதையுடன் பிடித்துக் கொணர்ந்தோம். காராஆலிக்கு ஆயிரம்வராகன் கொடுத்தோம்." என்றனர். உடனே குருபெருங்களிப்புடன் மூன்று சீட்டெழுதி ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பொன் அளிக்கும்படித் தன்பொக்கிஷதாரனுக்கு இரண்டு சீட்டும், ஆறு குதிரைகள் கொடுக்கும்படி தன் குதிரைச்சாலைத் தலைவனுக்கு ஒரு சீட்டும் எழுதி அவர்களையனுப்பிவிட்டு, சிறையிலிருந்த இருவரையும் அழைப்பித்துத் தன்முன்னிலையில் நிற்கவைத்துத் தன் ஆட்களைப் போம்படிக் கட்டளையிட்டான். அவர்களு மங்ஙனே போயினர். குரு மன்மதசொரூபனை நோக்கி "நீ ஆலய ஏற்பாட்டைக் கடந்து நடந்தனையல்லவா? நீ குருவென்று பெயர்வகித்து விவாகஞ் செய்துகொள்ள முயன்றுயன்றோ?" என, "நீர் நாட்டுக்கு வெளியே சென்ற என்னைக் கொள்ளைக்காரர் உதவிகொண்டு மீண்டுங் கொண்டுவந்தீரன்றோ? நாட்டுக்குக் கேட்டைச் செய்பவர் உதவிகொண்டு நாட்டைச் சீருறச் செய்தீர்போலும். உமது கௌரவம் நன்றாயிருக்கிறது! நீர் தானே பெருமைவாய்ந்த பிரதமகுரு." என்றான். குரு தன்னருகிலுள்ள மனோரஞ்சிதத்தை வீரலக்ஷ்மி என நினைத்து "மாதே! முகத்தை மூடியிருப்பதென்னே? வெட்கங்கெட்டு வெளிப்பட்ட உனக்கு முக்காடும் வேண்டுமோ!" என்று கூற, மனோரஞ்சிதம் அவன் கூறியசொற்களைச்

சகியாளாகி நடுநடுங்கி அச்சத்தால் முகத்தை மூடியிருக்கும் முக்காட்டையகற்றினள். குரு வீரலக்ஷ்மி அல்லவெனவுணர்ந்து, சோமதத்தன் தன்னை மோசஞ் செய்தானெனக் கருதி, தன்னாட்களை வரித்து "அவனையுடனே கொணர்மின்" என்றான். அவர்களும் அம்மாளிகைவிட்டு விரைந் தோடினர்.

காமியப்பகுரு அனுப்பிய ஆட்கள் சோமதத்தனையும் குபேரனையும் பிடித்துவந்து அவர்முன்னிலையில் விட்டவுடனே, இருவரும் மன்மதசொரூப னருகிலுள்ள மாதை நோக்கி, வீரலக்ஷ்மி அல்லவென்றுணர்ந்து நடுங்கினர். இதைக்கண்ணுற்ற அக்குரு "பிள்ளைகாள்! எனக்கே நீர் மோசஞ்செய்யத் துணிந்தீர். 'பெற்ற தாயிடத்தர் கற்ற வித்தையைக் காட்டுவது'? அம்மோசத்தைத் தெரிவிக்க வேண்டி யும்மை யழைப்பித்தேன். நான்சொல்லாமுன்னரே நீர் உணர்ந்தீர். இதன் காரணத்தை எனக்கு விளங்க விளக்குவீர்" என்றான். அதற்கு அவர்கள் "அது எங்கள் பிழையன்று.? அக்குற்றம் அக்கொள்ளைக்கார ருடையதே" என, குரு மனோரஞ்சிதத்தை நோக்கி "நீயார்? வீரலக்ஷ்மியின் உடையைத் தரித்ததின் காரணம்யாது?" என்று வினவ, அவளுத்தரங் கூறாது வாளாநின்றாள். இவர்களிப்படியிருக்க, காராஆலி யனுப்பிய சர்ட், பெட்ரிட்டன் ஆகிய இருவர் வந்திருக்கிறாரென்று காவலராலுணர்ந்த குரு அவ்விடத்தைவிட்டு "அவரிடம்சென்றனர். அவர்கள் இவரைநோக்கி "குருவே! நாங்கள் காராஆலியின் கூட்டத்தவர். அவர் முன்னம் மன்மதசொரூபனோடு

அனுப்பிய மாது வீரலக்ஷ்மி யல்லவாம். வீரலக்ஷ்மி பின்னரகப்பட்டாள். எங்களையனுப்பி அவளுக்குப் பிரதியாகவந்த மாதை யழைத்துவரச் சொல்லினர்" என்றார். இதை முற்றுங்கேட்ட குரு "உங்கள் மேல் எனக்கு என்ன நம்பிக்கை?" என, அதற்கு சாட், கதா நாயகி தப்பிச்சென்றதை யுணராததலால், "ஐயா! நான் வீரலக்ஷ்மியை உம்மிடம் ஒப்புவிக்கும் வரையில் நான் உமது ஆக்கினைக் குளிருக்கிறேன். என் தோழனோடு மனோரஞ்சிதத்தை யனுப்பிவையும்" என, குரு சிறிது நேரம்யோசித்துப் பின் அவனது ஏற்பாட்டுக்குடன்பட்டு 'இம்மாது வழிப்பிரயாணத்தால் அயர்ந்திருக்கிறாள். நாளையழைத் தேகுதி' என்று பெட்ரீட்டனுக்குக் கட்டளை யிட்டு, சாட் என்பவனைச் சிறைப்படுத்தித் தன் மாளிகைக்குட் சென்று மன்மத சொரூபனைச் சிறையிலடைக்க உத்தரவளித்தான்.

அக்குரு தன்னாட்களை அவ்வறையை விட்டுப் புறம் போகக் கட்டளையிட்டு, மனோரஞ்சிதத்திடஞ் சென்று, "ஓ ஒப்பிலா மாணிக்கமே! கற்பனை கடந்த கட்டழகி! கொடியளான வீரலக்ஷ்மியென் றெண்ணி உன்னை யானிகழ்ந்தேன். உனக்கு யான் யாதொரு தீமையுஞ் செய்யாதிருக்க ஏன் என்னிடம் பேசமயங்குகின்றாய். நீயோ அதிகரூபலாவண்யமுடையை" எனப் புகழ்ந்து கூற, குருவின் உட்கருத்துணராது "சுவாமி! யான் இவ்வறை விட்டகல உத்தரவளிப்பீர். நான் உம்மோடு பேசவிருப்பமிருப்பின் மன்மதசொரூபனைச் சிறையினின்றும் விடுதலைச் செய்க." என்று

கூறவே, அக்குரு அருவருப்புக் கொண்டவனாய் " ஆ ! மாதர்களெல்லாம் மன்மதசொரூபனை மிகவுங் காதலிக்கின்றனர் : அவன்விஷயத்தில் கண்ணீர் விடுகின்றனர்: அவன் இவர்களை எவ்வாறு வசப்படுத்துகின்றனனோ?" என " ஓ சுவாமி ! அவர் எனக்கு அண்ணன் முறையாகும். நீர் துர்எண்ணங் கொள்ளற்க. சுவாமி ! என்னண்ணனைச் சிறையினின்றும் மீட்டருளல் வேண்டும். அவர் எக்குற்றஞ் செய்தார்? அவருக்கு விதித்திருக்குந் தண்டனையாது?" என "மன்மதசொரூபன் குருவெனப் பெயர்பூண்டு விவாகஞ் செய்துகொள்ள எத்தனித்தனன். அது விதிப்படி குற்றமேயாகும். ஆகையால் அவனை யுயிருடன் அக்கினிக் கிரையாக்குதல் விதித்த தண்டனையாகும். அவன் விஷயத்தில் உனக்கருள் சுரப்பின், அவன் குற்றத்தினின்றும் நீங்குவன்" என்றான். இதைக் கேட்டதும் ஒன்று மறியாப் பேதையாகிய மனோரஞ்சிதம் "பெரியீர்! என்னருள் சுரந்து பயனென்ன? தங்களருள் சுரப்பின் அவர் உயிர் நிலைக்கும். அவர் தப்பியுய்வதற்கு ஏதுவான வழியை எனக்குக் காட்டுவீர்" என்றிரந்து கேட்க, "சரி: 'கும்பிடப் போன தெய்வங் குறுக்காக வந்தது' நமதெண்ணத்தை யிவளிடங் கூறின், மன்மதசொரூபன் காரணமாய் உடன்படுவள் என நினைத்து 'நீ என்னைக் காதலிப்பதே' என்று சொல்லிக்கொண்டே யெழுந்து அவளருகு சென்றனன். அவள் கற்பெனுங் கவசம் பூண்டாளாதலால், நடுநடுங்கிப் பின் ஒருவாறு தேர்ந்து "ஓ துராத்மா! உன் செய்கையினும் மன்மதசொரூபன் செய்கை

யிழிவோ? 'சொன்னபடி கேட்டால் மாப்படைப்பேன்; கேளாவிட்டால் மண் படைப்பேன்' என்று கூறுவது நியாயமோ? உனக் குடன்படாமையாலோ நீ வீரலக்ஷ்மியைக் கொடியவ ளென்றனை. கூரை யேறிக் கோணற் சுரைக்காய் அறுக்காத குருவா, வானேக் கிறி வைகுந்தம் காட்டப் போகிறாய்! மனத் தூய்மையில்லா நீயா எங்கள் மனக்குற்றம்நீக்கிமாதவன் மலரடிசேர்ப்பது? 'பொறுமை கடலினும் பெரிது' 'ஒறுத்தார்க் கொரு நாளையின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்' ஆதலால் உன் குற்றத்தைப் பொறுத்தேன்" என்று அவனைப் பலவாறிகழ்ந்து கூற, "ஓ பெண்ணே! நீ என் சொற்படி கேட்கின் இன்புறுவாய், இல்லையேல் துன்புறுவாய்: நானுன்னை மீண்டும் காராளுலிவசம் ஒப்புவிப்பேன். அவனுன்னை எத்தொழில் புரியினும் புரியலாம். நீ என் சொல்லைக் கேட்டையாயின் உன்னண்ணனை விடுதலைச் செய்வதன்றிக் கொள்ளைக் காரரிருவரையும் உன் கண்முன் தீக்கிரையாக்குவேன்" எனவும், 'பேதைக் குரைத்தாலும் தோன்றாதுணர்வு' என்பதை மனதிற் கொண்டு "காராளுலி கொடியனாயினும் இத்தகையகொடுமை புரியான், நீயோ அவனினுங் கொடியன். கொடியோன் கொடுமை செய்தல் இழிவன்று. 'ஆவினற்றோல்போதிந் தடுபுலித் தொழில் செய்தல், அழகிதோ? இழிவேயாகும்" என்று கூறி அவ்வறை விட்டு வெளிப் போந்தாள். சிறிது நிமிஷத்திற்கெல்லாம் ஒருமாது இவளை யழைத்துச்சென்று அன்னங் கொடுத்து உறைவிடமளித்தாள். மன்மத சொரூபனும் உண்டியருந்தித் தன்னறையிலுறங்கினான்.

அத்தியாயம் X

காராஆலி மயனைக் கொல்ல முயல, வீரமார்த்தாண்டன் கூட்டத்தார் தப்புவித்தல்.

இவர்கள் நிலைமை ஆமடா பாத்தி யிங்ஙனமிருப்ப, வீரலக்ஷ்மி, மேகநாதன், மேகநாயகி, சுப்புசெட்டி ஆகிய இந்நால்வரும் வீரமார்த்தாண்டன் வதியும் விந்தியமலை செல்வாராயினர். செல்லும் போது மேகநாதனும் மேகநாயகியும் பின்னே பேசிவர, சுப்புசெட்டி வீரலக்ஷ்மி,முன்னே பேசிக்கொண்டே நடக்கலுற்ருர். "மேகநாயகிக்கு உன் விஷயத்தில் நம்பிக்கை யில்லாததால் மிகவும் பயந்திருக்கின்றனள்" என்று வீரலக்ஷ்மி சொல்ல, செட்டி "மாதே! நீயும் சத்திரத்தில் என் விஷயத்தில் நம்பிக்கை யற்றிருந்தாயல்லவோ?" என, 'ஆம்; பின்னர் விஷயம் விளங்கலும் சமுசயம் விண்டேன்' என்றுள் வீரலக்ஷ்மி. "நான் சாமான்களை விற்பதுபோல் வேடம் பூண்டு பிரஜைகளுக்கு வீரமார்த்தாண்டன் விஷயத்தில் பிரியம் வரச்செய்வது எனது தொழில். இதன் காரணமாய் அநேகர் அவனுடன் சேர்கின்றனர். முன் பர்வாணியில் உன் விஷயமாய் அவன் கீர்த்தி எங்கும் வியாபித்தது. அவனுக்கு இரண்டெண்ணங்களுண்டு. மாளவநாட்டு ஜனங்களைக் குணப்படுத்துதல் ஒன்று. மாளவநாட்டினின்றும் மகம் மதியரைத்துரத்தல் இரண்டாவது. முன்னர் ஜயவீரனைத்

தப்பிப் பிழைக்கச் செய்தது அவனேயாகும். அவன் வெவ்வேறு வேடந்தரிப்பன்: அது போது வீரமார்த்தாண்டனென்று தேர்தல் கடினமேயாகும். அவன் ஒரு வீட்டுக்கு வழிப் போக்கன் வேடம் பூண்டு செல்வன்: மறு தெருவிலுள்ள வீட்டுக்குப் போவதற்குள் குருவேடந் தரிப்பன்: வியாபாரி வேடம் பூண்டு ஒரு பட்டினத்திற்குள் நுழைவான்: அதிதிவேடம் பூண்டு அப்பட்டினம் விட்டகல்வன்: எங்ஙனஞ் செய்யினும் இன்னானெனவறிதலரிது.'' என்று சொல்லிக் கொண்டேபோய் வீரமார்த்தாண்டனிருக்கும் மலையைக் குறுகினர். சுப்புசெட்டியைக் கண்டதும் வீரமார்த்தாண்டன் கூட்டம் அதிக மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தது. அதுபோது அவ்வீரன் குருவேடம் பூண்டிருந்தான். செட்டியின் வேண்டுகோளால் அவன் தன்னுருவத்தைக் காட்ட அவனைக் கண்டு யாவரும் ஆனந்தங்கொண்டனர்.

மயன் காராஆலியின் சிறையிலிருந்து மனோரஞ்சிதத்தைப்பற்றியும் பொருளின் பொருட்டுப் பூபாளத்திற்கு அனுப்பிய ஏவலாளனைப்பற்றியும் ஒன்றுந்தெரிந்ததில்லையென்று நினைத்துக்கொண் டிருந்தான். காராஆலி தப்பிப்பிழைத்த மூவரையுங் காணாதுகித் தன்னில்லஞ் சேர்ந்து மயனிடம் புகல அவன் அதைச் செவியுற்று ஆனந்தக் கூத்தாடினான். காராஆலிக்குக்கோபமூண்டது. ஒருமணிநேரஞ் சென்றபின் பெட்ரிட்டன் மனோரஞ்சிதத்துடன் அங்கு வந்து ஆமடாபாத்தில் நடந்த விஷயங்கள் யாவும் தன் தலைவனுக் குரைத்தான்.

அதுகேட்டு நல்லது! "நமது நண்பன் சாட்வருகிற பரியந்தம் இவளைச் சிறைப்படுத்திவைப்போம்" என்று கூற, மயன் காராஆலியை யிகழ்ந்து "என் காதலி என் செய்வாள்: வீரலக்ஷ்மி தப்பிப்பிழைத்ததற்கு என் காதலி காரண மாவளோ?" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது வெளியே யிருந்து ஒருவன் காரா ஆலியை அழைக்க, "யார்?" என்றுவினவினான். "பூபாளத்திலிருந்து வந்தவன்" எனவிடை பகர்ந்தான். இதுகேட்டதும் மயன் "எனதெண்ணம் முடிந்தது. நானும் என் காதலியும் பிழைத்தோம்," என்றனன். காராஆலி வந்தவனை நோக்கி "பொருள் கொண்டுவந்தாயா?" என, இல்லையென மறுமொழி புகன்றான். இதைக் கேட்டதும் மயன் மிகவுங் கோபங் கொண்டு "இவன் திருடன்: கொடுத்த பணத்தை யபகரித்தனன்" என, அவனுஞ் சினங்கொண்டு பின்வருமாறு கூறலுற்றான்.

"நான் பூபாளத்திற்குச் சென்றதும் நின்காதலியின் தந்தை எங்குளாரென்று விசாரிக்க, உதயபுரத்திலாவது பூபாளத்திலாவது இருப்பர் எனக் கூறினர். பின்பு அவர் பூபாளத்திலிருப்பதாக வுணர்ந்து அவ்விடஞ் சேர்ந்து அவரைக் கண்ணுற்று நடந்தவைகளை எடுத்தியம்பினேன். நீ கொடுத்த கடிதமுங் கொடுத்தேன். அதைப் படித்துப்பார்த்து 'என் மகள் ஐதராபாத் இராஜமாளிகையில் சுகித்திருப்பாளென எண்ணினேன். அவள் தனக்கே கெடுதி விளைத்துக் கொண்டனள், 'யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப்

போட்டுக்கொண்டதுபோல், ஆயது' என்றுகூற, இங்ஙனம் எண்ணுதல் தகுதியன்று, என்று யான் கூறினன். "நான் வயோதிகன், இவ்வயதில் சுகமா வசிக்க நினைத்தேன்: நான் அல்லல்பட நேரிட்டது." என்று சொல்லித் தன் மார்பின் மேல் பன்முறை யடித்துக்கொண்டு பித்தன்போல் அங்குமிங்கும் பிதற்றிக் கொண்டிருந்தார். அவர்களை மீட்க இரண்டாயிரம் பொன் வேண்டும் என்று யான் கூறியபோது அவர் கோபத்தால் கூக்குர விட்டனர். "தான் கஷ்டப்பட்ட பொருளைக் கொள்ளை கொள்ளவந்தாள் அவள் என்றும், தன்னை ஏழையாக்க முயல்கிருள்" என்றுங் கூறினர். நாளைப் பேசிக் கொள்வோமென நினைத்து மீண்டேன். மறுநாட் காலையிற் சென்று பார்த்தும் பயன்படவில்லை. அக்கிழவர் எனக்குத் தாகந்தணிக்கத் தண்ணீர்தானுந் தரவில்லை. பெற்ற பெண்ணைப்பற்றி வருந்திலர்: பொருளின் மேல் அதிகப் பற்றுடையா ரக்கிழவர். இவருக்குள்ள பொருளாசையை நோக்கி 'ஐயா! உம்மைப் பொருட்பேய் பிடித்ததோ? பெற்ற மகளினும் பொருள் விசேடமோ? விசேடமெனக் கூறினும் அப்பொருள் ஒருவரிடமும் நிலைத்திருப்பதில்லையே! 'ஆறிடுமேடும் மடுவும் போலாஞ் செல்வம்' அன்றோ? நிலைத்திராத பொருளின்மேல் நினைவுவைப்பது நேர்மையோ? பொருள்,—

'பொருவறு பந்தமெல்லாம் புணர்த்திடும்: தெய்வ சிந்தை
யொருவமே விட்டு நிற்கும்: உறக்கமு மிறக்கச் செய்யும்:
கருவினுட் புகுத்தும்' * * * * .

(குசேலோபாக்கியானம்)

மேலும்,

ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம் : காத்தல்
குறைபடிற் றுன்பம் : கெடிற்றுன்பம் : துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.'

(நாலடியார்)

ஆதலால் உம்மைப்போன்ற புத்தியிற் சிறந்தோர் பொருளின்மேல் பற்று வைப்பரோ?' என்று யான் கூறலும், அவர் "அடே பேதாய்! 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றினுள் நடுவணதெய்த இருதலையு மெய்தும்? வருந்தியழைத்தாலும் வாராததன்றோ அப்பொருள். பொருளின் சிறப்பை யாதென நினைக்கிறாய்: எல்லாச் சிறப்பினும் பொருள் சிறப்புடையதே. 'அருளிலார்க் கவ்வுலக மில்லை: பொருளிலார்க் கிவ்வுலகமில்லை' என்பதை அறியாயோ?" என்று கூறி என்னை வெருட்டித் துரத்தினர்.

நான் பின்னர் ஸ்ரீபிரான் பிரபுவினிடஞ் சென்றேன்: பயன்படவில்லை என்றான். இதைக்கேட்டு, 'தந்தையிடஞ் சென்றுங் கொடாது போயினரா?' என்று வினவ, ஐயா! நான் உமது தந்தையிடஞ் சென்றபோது விந்திய மலையருகிலுள்ள மாளிகைக்குப் போகப் பயணப்பட்டிருந்தார். அவரைச் சமயம் பார்த்துக்கண்டு நிகழ்ந்தனவுரைத்தனன். 'நீர் தாழ்ந்த குலமும் உலோப குணமுமுள்ளவன் பெண்ணைக் காதலித்தீராம், அது அவருக்கு உடன்பாடில்லை. உம் விஷயத்தைப்பற்றி யான் அவரை மனமுருகச் செய்தும் அதை ஒரு பொருட்படுத்த

வில்லை. 'வீட்டிலடங்காப் பிள்ளையை நாட்டிலடக்குவர்' என்று கூறி நின் மரணத்தையே கோரினர், என, மயன் பெருமூச்செறிந்து தலை குனிந்து நின்றான். காராஆலி "இனி உன்னைக் கொல்வதே கருமம்" எனலும், மயன் மனம் வருந்தி "ஐயா! என் பொருட்டு என்னுயிரைப் போற்றுகின்றேனல்லன். என்மேல் தயை கூர்ந்து என் காதலியின் காரணமாய்க் காருண்யம் வைப்பீராக" என்று விநயமுடனிரக்கும் இம்மியளவும் மனமிளகாது அவனை அரணியத்துக் கிழுத்துச் சென்றனர். மயனைக்கொண்டு சென்று கயிற்றை யொருமரக்கிளையில் மாட்டி ஒரு முனையை அவன் கழுத்திற்பூட்டி, மறுமுனையை இருவரிழுக்க எத்தனித்தனர்.

இங்ஙனம் நிகழாநிற்புழி, ஒரு பெருங்கூட்டம் ஜயவீரனைத் தலைவனாகக்கொண்டு அங்கு வந்து மயன் துக்கத்தை நீக்கியது. உடனே இருதிறத்தாருக்கும் பெரும்போர் விளைந்தது. மயன் காராஆலிமேல் கடும்பகை கொண்டுளானாதலால், அவனைக் கொலைபுரிய எத்தனித்து அவனுடன் பெரும்போர் விளைத்தான். முடிவில் காராஆலி சேனை தோல்வியடையவே, காராஆலி ஓட்டெடுத்தான். மயன் ஜயவீரனைத் துணைகொண்டு காராஆலியி னரண்மனை புகுந்து அநீதியாகக் கவர்ந்த பொருளைக் கைக்கொள்ளல் அடாதென நினைந்து, உணவுப்பொருள்களுள் வழிப்பிரயாணத்திற்கு வேண்டுவன மாத்திரம் ஆண்டெடுத்துக்கொண்டு, அங்குமிங்குஞ் சுற்றித் தேடித் தன் காதலியைக் கண்டு கைக்கொண்டு வெளிப்பட்டுப், போரில் மாண்டோரைக் கிரமப்படி

அடக்கஞ் செய்துவிட்டு ஆண்டு நின்று மீண்டு தன்னகரஞ்செல்லும்போது இடைவழியில் ஜயவீரன் மயனை நோக்கி, வீரலக்ஷ்மி சுகித்திருப்பதாகவும், சில வீரருடன் வீரமார்த்தாண்டன் மன்மதசொரூபனை மீட்க ஆமடாபாத்துக்குச் சென்றதாகவும், தான் அவனை மீட்கக் கொஞ்சஞ் சேனைகளுடன் இங்கே வந்ததாகவுங் கூறினன், மயனும் மனோரஞ்சிதமும் அதைக்கேட்டதும் ஆனந்த பரவசமாயினர்.

அத்தியாயம் XI

—:o:—

கன்னியர்கள் ஐதராபாக்கம் சென்று வீரலக்ஷ்மி விஷய முரைத்தல்.

ஐதராபாக்கம் சிறந்த நாடுகளிலொன்று. கோதாவரி கிருஷ்ணை ஆகிய இவ்விரு நதிகளும் இந்நாட்டைச் செழிப்பிக்கின்றன. இந்நாடு நீர்மட்டத்திற்கு 1,250 அடி யுயரமுள்ளது. இது மாத மும்மாரி பொழியும் வளநாடு. அருளோடறம்புரியும் அருமைத்திருநாடு. தண் மலர் வாவிகளும், கமுகமரச் சாலைகளும், பன்மலர்ப் பூஞ்சோலைகளும் வாய்ந்துள்ளது அந்நாடு. தெருக்களி னழகும், சிறந்த மாடங்களும், வாணிப விருத்தியும் ஒருங்கே யமையப்பெற் றுள்ளதால் இந்நாடு எந்நாட்டினும் முன்னோட்டும் நன்னாடென எவரும் இயம்பாதிரார். இத்தகையாய அந்நாட்டின் சிறப்பைப் பலபடப் பகரக் காலமுமிடனுஞ் சாலவும் வேண்டும்.

இந்நாட்டை யாட்சி புரியும் அரசனது வயது முப்பானேழ். அழகில் மன்மதனை யொப்பான். கூரிய புத்தியும், கைத்தொழில் வன்மையும், போரில் வீரமு முடையான். நீதியில் தருமனை யொப்பான். இவனெந்தக் காரியமும் யோசித்துச் செய்யுமியல்பினன். அரசர்க் குரிய சிறந்தவற்றுளொன்றாகிய அவனது அந்தப் புரம் அழகுவாய்ந்த மாதரால் நிரம்பப்பட்டிருந்தது. மாளவ நாட்டார் அனுப்பிய மாதர்கள் யாவரையும் அவனனு

பவிப்பதில்லை. அவனிடமுள்ள சிறந்த உத்தியோகஸ் தரும், தனவந்தரும், அவர்களைப் பகிர்ந்துகொள்வது வழக்கம். வருடந்தோறும் இருபது மாதர்களைமாத்திரங் கைக்கொள்வானிறைவன். அவன் சோதிடத்தில் நம்பிக்கை யுள்ளவன்: ஆகவே அவன் நேயர்கள் அவன் மனம் மகிழும்படி சோதிடஞ் சொல்லி வருவர். இத் தகைய அரசன்,

'கோல்நிலை திரிந்திடிற், கோள்நிலை திரியும்:
கோள்நிலை திரிந்திடின், மாரிவாறங்கூரும்:
மாரிவறங் கூரின், மன்னுயி ரில்லை:
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின்றாம்'

(மணிமேகலை)

என்பதையே உறுதியாகக் கொண்டவன். அக்கன்னியர்கள் இராஜதானிக்கு வடபுறமுள்ள வழியாகச் சென்று கோட்டை யருகே நின்றனர். சில மாதர்கள் அவர்களிடஞ்சென்று முகமன் கூறி உபசரித்தபின், அவர்கள் உடுத்திருந்த உடைகளைக் களைந்து, ஸ்நானஞ்செய்து, அந்நாட்டுக்குரிய ஆடைகளை யணிந்து போஜன மருந்தினர். அவ்வரசன் பிரதம வேலைக்காரி அவர்களை எண்ணிக் கணக்கிடும்போது தொண்ணூற்றொன்பதின்மரிருக்கக் கண்டு மற்றொருத்தியைப் பற்றிய விஷயங்கள் யாவும் கன்னியர்களாலுணர்ந்து அதனை யறிக்கைசெய்ய அக்கன்னியர்களுடன் அரசன் முன்னிலையிற் சென்றனள். அரசன் வரிசையாய் நிற்கும் மாதர்களையுற்று

நோக்கும்போது பிரதம வேலைக்காரியாகிய வேதவல்லித் தாயார் வேந்தனை வணங்கி "இவ்வருடம் தொண்ணூற்றொன்பது மாதர்களே இங்கு வந்தனர். ஒருத்தி தப்பினள்" என, "அவள் வழியில் இறந்து போயினளோ?' என்று வினவ "இல்லை; கொள்ளைக்காரர் வழியில் கொள்ளை கொண்டனராம்" என்றாள். "அங்ஙனஞ் செய்தார் யார்?" என்று வினவலும் "தங்கள் தேசத்திற்கு வடபுறம் வசிப்போர்: அவளைக் கொள்ளை கொண்டது இப்பட்டணத்திற்கும் ஔரங்கபாத்துக்கும் நடுவண்" என்றாள். உடனே அரசன் சோதிட சாத்திரத்தில் வல்ல வயோதிகனை வரித்து "மிகவுங் கல்வியில் தேர்ந்த அலெஸ் நாம்! நக்ஷத்திரங்கள் உனக்கு இரகசியத்தை வெளியிடுகின்றன. காணக்கூடாத பிசாசங்களைக் கண்டு அவற்றுடன் வசனிக்கின்றாய். எனக்கொரு ஆரூடம் சொல்வாய்" எனலும், அவன் 'கண்ணுமுண்டு மூக்குமுண்டு கண்ணே போமோ மூக்கே போமோ' என்று சொல்லுஞ் சோதிடனை யொப்பானாதலால் யாதோ வொரு கெடுதி விளைந்திருக்க வேண்டுமென்று நினைத்து 'ஒரு கெடுதியைக் குறித்து யோசிக்கிறீர், அரசே!' என, அரசன் மகிழ்ந்து "நீ கூறியது சரி, மாளவ நாட்டிலிருந்து வரும் ஒரு கன்னிகையை ஒருவன் கொள்ளை கொண்டனனாம். அங்ஙனங்கொண்டவன் காராஆலி என்கின்றனர். அதிலெனக்கு நம்பிக்கையில்லை. இதை நன்கு யோசித்துச் சொல்வாயாக" என்றரசன் கூறலும் இடிவிழுந்தாற்போல் மதிமருண்டு 'கர்த்தனே! அநேககாலமாய் அரசனுக்குச் சந்தோஷம் வரும்படி

சந்தர்ப்பத்தை யனுசரித்தும் சுரங்க வழியாய்ச் சென்று அந்தப் புரத்து மாதர்கள் உதவிகொண்டும் சோதிடஞ் சொல்லி வாழ்ந்திருந்தோம். இப்போது நமக்குத் துன்பம் வந்தது போலும்' எனத் தன்னில் தானே நினைத்துக் கொண்டு அங்கு மிங்கும் யோசிப்பவன்போல் சுற்றிப் பார்க்குங்கால் அக்கன்னியர்களில் ஒருத்தியும், மனோ ரஞ்சிதத் திற்கு நண்பினளும், அவள் தப்பிய பின் நடந்த விஷயங்களை வீரலக்ஷ்மி மூலமா யுணர்ந்தவளுமான கமலாவதி என்பவள் கிழவனைமேன்மேலும்நோக்கினள். அச்சோதிடன் இவளிடம் சங்கதி புணரவேண்டு மென்னும் எண்ணங்கொண்டு அரசனை நோக்கி "நாளை யதினம் உமக்குச் சொல்கிறேன்" என்று சொல்லி விடைதரப் பெற்றான். கன்னியர்கள் அரசனை வணங்கித் தத்தம் அறையினை யடையுங்கால் சோதிடன் அக்கமலாவதியி னருகிற் சென்று 'அருணாஸ்தமனமானபின் தோட் டத்தின் தென்முனை வருகெனக்' கூறிச்சென்றான்.

சோதிடன் குறித்தவிடம் மிகவும் உன்னதமானது. பழ விருக்ஷங்களாலும், பலவித பூஞ்செடிகளாலும் பற்பல பரிமளம் வீசும் பான்மையது. அன்றிரவு முன் ஜாமத்தில் கன்னியர்கள் யாவரும் போஜன மருந்திப் பள்ளிகொண் டிருக்கும்போது, கமலாவதி குறித்த விடஞ் சென்றாள். சோதிடக் கிழவனும் அங்குச் சென் றனன். கிழவன் அவளை நோக்கி "மாதே! முன் இராஜ சபையில் அரசன் வினவியவினவுக்கு உத்தரந் தெரிந்தவள்போ லிருந்தாயல்லவோ? அதை எனக்கு விவரமாக வுரைக்க; உரைத்தால் நான் சுகமுறுவேன்.

அரசனும் எனக்கு வேண்டிய வெகுமதியளிப்பன்: இல்லையேல், நான் மரணமடைவது திண்ணம்'' என்றான். அதற்கவள் ''ஓ பெரியீர்! நான் தப்பிப் பிழைக்கும் மார்க்கத்தை நீர் தேடுவீரேல், உமக்கு அந்த அந்தரங்கம் வெளிப்படுத்துகிறேன்'' எனலும், அங்ஙனே தேடுகின்றேனென்றான். அதன்மேல் கமலாவதி வீரலக்ஷ்மி மூலமாய், உணர்ந்த விஷயம்யாவும் விளம்பினள். இவர்களிப்படி வார்த்தையாடிக் கொண்டிருக்குங்கால் அந்தப் புரத்துத் தலைவியான அயிஷா என்பாள் அரசனோடு பேசிக்கொண்டு வரும் அரவங்கேட்டு எங்கும் ஓட இயலாது இருவரும் நடுநடுங்கினர். அரசன் கிழவனைக் கண்டு ஆச்சரியங்கொண்டு ''அலாஸ் நாம்! அந்தப் புரத்திற்கு ஒருவரும் வரக்கூடாதென்றிருக்க, எங்ஙனம் வந்தனை?'' என்று கடுஞ்சினத்துடன் கேட்க, அக்கிழவன் அச்சத்தால் அடியற்ற பனைபோல் கீழே விழுந்தான். உடனே கமலாவதி அரசனிடமணுகி நமஸ்கரித்து ''இறைவ! நான் நடந்தனயாவும் நவில்கின்றேன். அவரைத் தண்டித்தல் வேண்டாம். அவரொருகெட்ட எண்ணங்கொண்டு இங்கு வந்தவரன்று: யானுமங்ஙனே:'' என்று சொல்ல, ''பெண்ணே! அந்நடந்தன என்ன? விளங்கவிளக்குவை'' எனலும், அக்கிழவனோடு பேசிய சங்கதி முழுதும், வீரலக்ஷ்மி விளம்பியனவும்; தான் தப்பிப் பிழைக்க வழிதேடியதுமாகிய எல்லா விஷயங்களையும் உண்மைக் குத்தாரமாயுரைப்ப, அரசன் முற்றுஞ் செவியேற்று, கிழவனை நோக்கி ''நீஎவ்வண்ணம் இங்கு வந்தனை'' என, அக்கிழவன் ''என்னறைக்கும்

இத்தோட்டத்திற்கும் ஒரு சுரங்கமுளது. அதை நான் தற்செயலாகக் கண்டேன். இதுகாறு மிங்கு வந்திலன்'' என்றான். அரசன் கமலாவதியை நோக்கி "நீ கூறியது எனக் காச்சரியந் தருகின்றது. மனோரஞ்சிதத்திற்குப் பதிலாக உங்கள் கூட்டத்தில் சேர்ந்தாள் பெயர் என்ன?'' என்று கேட்க, "ஐயனே! அவள்பெய ரெனக்குத் தெரியாது.....,.......முக்கியமானதோர் சங்கதி உம்மிடம் புகல மறந்தேன். அவள் தன் கையில் ஒரு மோதிரம் வைத்திருக்கின்றாள். அதில் ஒரு மாணிக்கம் பதிக்கப் பட்டுள்ளது. அம்மாணிக்கத்தினருகு தங்கள் ராஜ முத்திரை முத்திரிக்கப்பட்டிருக்கிறது. அவள் தங்களுக்கு அதைக் காண்பித்துத் தன் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள நினைத்திருக்கிறாள்'' என்றாள். இதைக் கேட்டதும் அரசன் ஆச்சரிய பரவசமாகி "ஆம்: மோதிரம்: அவன் இன்னும் உயிரோடிருக்கின்றனனோ? கடவுளின் அற்புதச் செயல்கள் வியக்கத் தக்கனவே!'' என நினைத்து, கமலாவதியை நோக்கி "மாதே!

'இம்மை நலனழிக்கும்: எச்சந் துறைபடுக்கும்:
அம்மை யருநரகத் தாழ்விக்கும்: மெய்ம்மை
யறந்தேயும்: பின்னு மலர்மகளை நீக்கும்:
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய்'

(சிறுபஞ்சமூலம்)

என்னும் பெரியார் வாக்கை யறிவாய் போலும்: பொய் யுரையாது மெய்யே யுரைத்தனை. இதுபற்றி உன்னைச் சாலப் புகழ்கின்றேன். இது இருக்கட்டும்: 'எந்த மாதாவது இந்த அந்தப் புரத்தில் ஒருவனைச் சந்தித்

தால் மரணதண்டனை யடைவள்' என்று சட்டமேற் படுத்தியுளது. ஆனால் அத்தண்டனையை உன்மேல் சுமத்தற்குக் கூடாதகாரணம் 'முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு, இறையென்று வைக்கப்படும்' என்பது விதியாதலால், என் ஏற்பாட்டைக் கேள், ஒரு மாதமான பின் இத்தேசத்தில் ஒரு சிறந்த சிலம்பவித்தை நடைபெறும். அக்காலையில் எல்லா வீரர்களும் இங்கு வருவர் அது நடந்தேறும் வரையில் நீ அந்த அந்தப்புரத்தை விட்டகலவெண்ணாது. யாவரினும் உன்னை வேறு பிரித்தற்காக நீ முன்னந் தரித்திருந்த உடையையுடுத்திக்கொள். உன் காரணமாய் வரும் வீரன் நானனுப்பிய வீரனை வெற்றி புரியின், உன்னை விடுதலைச் செய்வதோடு உனக்கு மிகுந்த வெகுமதியு மளிக்கின்றேன். அவன் தோல்வியடைவானாயின் நீ இந்த அந்தப் புரத்திலேயே யிருக்கவேண்டும்'' என்று கூறிப் பின்பு கிழவனை நோக்கி, ''நீ இங்குவரக்கூடாதென்றுணர்ந்தும் வந்தனை. உன்னைக் கொல்வதே கருமமாயினும் அங்ஙனஞ்செய்ய எனக்கு விருப்பமில்லை. மனோரஞ்சிதத்திற்குப் பதிலாக வந்த பெண் ஒரு மாதத்திற்கு ளிங்குவருவாளாயின் உன்னை மன்னிக்கின்றேன். இல்லையேல் அச்சிலம்பம் நடைபெறு மிடத்திலேயே யாவருங் காணுமாறு உன்னைக் கொல்வேன். அது காறும் உனதகத்தினிருக்க'' என்றான். அக்கிழவன் வந்தவழிச் சென்று தன்னகஞ் சார்ந்தான். அயிஷா கமலாவதியை யழைத்துச் சென்றனள். அப்துராமன் II கமலாவதி கூறியதைக் குறித்துப் பலவாறாகச் சிந்திக்கலாயினான்.

அத்தியாயம் XII

—:o:—

ஆமடாபாத் முற்றுகை: காமியப்பகுரு மரணம்.

மேற்கூறிய சங்கதி ஐதராபாத்தில் நடந்த அன்று மாலை ஆமடாபாத் தேசத்திலுள்ள காமியப்பகுரு வீர லக்ஷ்மியினிமித்தம் சிறையிலிருந்த சாட் என்பவனருகில் வந்து "அடே! அவள் தப்பியுய்ந்தனளாம். ஆகவே நீயவளுக்குப் பதிலாக மரணமடைதல் வேண்டும்" எனலும், சாட் மிகவுஞ் சினங்கொண்டு "நீ அங்ஙனங் கூறுதல் தகுதியன்று: என்தலைவன் காராஆலி இச்சேதியுணரின் உனக்குக் கெடுதியே விளையும்" என்று கூறியும் கேளாளுய் இரக்கமின்றி அவனை அக்கினிக்கிரையாக்கினன். பின்பு குரு அவ்விடம் விட்டகன்று தன் மாளிகையிலுள்ள ஒரு அறைக்குட் சென்றபோது அவ்விடத்தில் ஒரு பெரிய கூண்டில் சுமார் இருபது அல்லது முப்பது அடி நீளமுள்ள ஒரு மாசுணமிருப்பக் கண்டான். அது தன்னுடலைச் சுருட்டிக்கொண்டிருந்தது. அதன் கண்களோ நக்ஷத்திரங்கள் போல் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அக்கூட்டினருகில் நின்றிருந்த அப்பாம்புடையான் குருவைக் கண்டதும் நமஸ்கரிக்க, குரு "இது இரையெடுத்து எத்துணை நாளாயது?" என்று வினவ, "தங்கள் நியமனப்படி ஆறுநாளாக அதற்கு இரை கொடுப்பதில்லை" என்று விடைபகர்ந்தான். அதற்குக்குரு "நல்லது: சிறைச்சாலையிலுள்ள இராமநாதன் மிகவும் வயோதிகன்

அவன் இதன் ஆற்றலுக் காற்முன். மன்மதசொரூபனைப் பல ஜனங்கள் முன்னர் அக்கினிக் கிரையாக்குதல் வேண்டும். விசித்திரவீரியன் வாலிபனாயிருக்கிறான். அவன் மேல் இந்த நாகத்தை விடல் வேண்டும்'' என்று நினைத்து, தன்னாட்களையேவி அவனை யழைத்து வரச்சொல்லினன். அச்சிறுவன் வந்ததும் அவனை நோக்கி "நீ இந்நாட்டுச் சனங்கள் முன்னர் என்னை நிந்தித்துரைத்தனை. என் மன்னிப்பை நீ கோருவையேல் யானுன்னை விடுவேன்'' எனலும், "நான் உண்மையே யுரைத்தனன். என்னுயிர் போயினும் போக'' என்முன். உடனே குருவின் கட்டளைப்படி அவனை அப்பாம் பிருக்கு மறைக்குள் விடுத்துத் தாளிட்டனர். சாளரவழியாய்க் கூட்டின் கவாடத்தை மெல்லெனத்திறந்தான் ஒருவன். விசித்திரவீரியன் அக்கரும் பாம்பின் கருணையைக் கோரிக் கடவுளைக் கருதி நின்முன்.

இவனிங்ஙனமிருப்ப, அந்நாகங்கூடு விட் டகன்று சிறிதுநேரம் பசியால் நகரமுடியாது சோர்ந்திருந்து முடிவில் இரை யகப்படுமோவென்று நினைத்து மெல்லெல்ன நகர்ந்து கடவுளைத் துதித்து நிற்கும் விசித்திரவீரியனிடஞ் சென்றது. வெளியே நின்று பலகணி வழியாகப் பார்த்திருந்த பலரும் உளந்துளங்கினர். காழியப்ப குருவோ கொடியரினுங் கொடியனுதலால், அவனுள்ளமாத்திரம் பூரித்தது. கல்லினும் வல்லெனும் நெஞ்சினையுடைய படுபாதகனுதலால் சிறிது மிளகிலன். அந்நாகம் அவனைத் தீண்டலும் அவன் மண்ணுல கொழிந்து விண்ணுல கெழுந்தான். இங்ஙனம் அக்குரு கொடுங்

கொலை புரிந்து குதூகலங் கொண்டிருக்கும் போது. காவற்கார னொருவன் கடுகெனவந்து "ஐயனே! வீர மார்த்தாண்டன் நம்மேல் படை யெடுத்து வருகிறான்" எனலும், குரு தன் சேனைகளை யெல்லாம் விரைவில் ஒருங்கு சேர்த்து வீரமார்த்தாண்டன் நாட்டுக்குள் வருவதன் முன்னம் அவன் மேல் ஏவினனாக, அவன் அச் சேனைகளை யெல்லாம் பஞ்சு போலப் பறக்கடித்தான். புறங்கொடுத் தோடினார் உயிர்தப்பினார். உடனே அவ்வீரன் 'இறுதி பயப்பினும் எஞ்சாதிறைவற்கு, உறுதி பயப்பதாந்தூது' என்பதற் கிலக்கியமாயுள்ள ஒரு தூதனை நோக்கி, காமியப்பகுருவினிடஞ் சென்று "ஆமடாபாத்தை வீரமார்த்தாண்டன் வசம் ஒப்புவித்தல் வேண்டு மென்றும், நின்னிடமுள்ள குற்றவாளிகளை விடுதலை செய்தல் வேண்டு மென்றும்" சொல், அவன் அதற்குடன்படானாயின் "விநாசகாலே விபரீதபுத்தி" என்று அவனிடம் உரை என்றான். அவன் சென்று அங்ஙனே யறைதலும் குரு அவனைச் சிறையிலடைத்துப் பின்பு கொன்றனன்.

வீரமார்த்தாண்டன் தானனுப்பிய தூதனிறந்து பட்டானென்று கேள்வியுற்றதும் "ஆ! தூதனைக் கொன்ற தூயன் இவனென்ன நிந்தித்துத் தன் சேனையுடன் ஆமடாபாத்துக்குச் சென்று பதின்மூன்று நாளளவும் அதை முற்றுகை செய்தான். அக்கோட்டைக்குளிருந்த இராணுவவீரர்கள் முடிவில் தளர்ச்சியடைய, அது காலையில் மாளவ நாட்டரசன் ஸ்ரீபாதன்-ஸ்ரீபிரான் பிரபு வினோடும் ஐயாயிரம் வீரரோடும் வருதலைக்காமியப்பகுரு

கேட்டு மிகவுஞ் சந்தோஷங் கொண்டனன். இவர்கள் அங்கு வந்து சேர்வதன் முன்னரே காராஜூலியைத் தோற்கடித்த ஜயவீரன் - மயன், மனோரஞ்சிதம் ஆகிய இவர்களை யழைத்துக்கொண்டு அங்கு வந்தனன். மனோரஞ்சிதம் வீரலக்ஷ்மியைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் விட்டனள். வீரமார்த்தாண்டன் மயனையும் தன் நேசன் ஜயவீரனையுங் கண்டு சந்தோஷித்துத் தன் சேனையை மூன்முக வகுத்து வலதுபுறச் சேனைக்கு மயனைத் தலைவனுகவும், இடதுபுறச்சேனைக்கு ஜயவீரனைத் தலைவனுகவும் ஏற்படுத்தித் தான் நடுவிலுள்ள சேனைக்குத் தலைவனுனன். பின்பு இம்மூவரும் யுத்தத்திற்கு எதிர் பார்த்திருந்தனர்.

இங்ஙனமிவர்களிருப்ப, மாளவராசன் தன் சேனையை அவ்வீரன் வகுத்தவாறு மூன்று பிரிவாக வகுத்து வலதுபுறச் சேனைக்கு ஸ்ரீபிரான் பிரபுவையும், இடதுபுறச் சேனைக்குத் தன்னுடன்வந்த நண்பனையும் தலைவராக ஏற்படுத்தித் தான் நடுவிலுள்ள சேனைக்குத் தலைவனுனன். பின்பு பெரும் போர் விளைந்தது. ஒருபக்கத்து வலதுப்புறச் சேனை மறுபக்கத்து வலதுபுறச் சேனையையும், ஒருபக்கத்து இடதுபுறச் சேனை மறுபக்கத்து இடதுபுறச் சேனையையும், ஒருபக்கத்து நடுவிலுள்ள சேனை மறுபக்கத்து நடுவிலுள்ள சேனையையும் எதிர்த்தது. மயன் தன்னை யெதிர்ப்பவன் தன் தந்தையெனவுணர்ந்து தன் சேனையை நோக்கி, "இவர் ஸ்ரீபிரான் பிரபு. என் தந்தை. அவரைக் கொல்லாது சிறைப்படுத்துக" என்முன். ஸ்ரீபிரான் பிரபு தன்னை

யெதிர்ப்பவன் தன் மகனென்றுணர்ந்திலன். இங்ஙனம் கடும் போர் விளையுங்கால், அரசனும் அவன் வீரர்யாவரும் புறங்கொடுத்தோடினர். ஸ்ரீபிரான் பிரபு சிறை செய்யப்பட்டான். மாளவராசன் நண்பன் கொலையுண்டான். இதைக் கேட்ட காமியப்பகுரு தன்னிடமுள்ள சிறந்த பொருள்களைக் கைக்கொண்டு மாறுவேடம் பூண்டு தப்பிப் பிழைக்கத் தன்னறைவிட்டு வெளிப் போந்தான். அவனை ஜனங்கள் இன்னானென்றுணர்ந்து வீரமார்த்தாண்டன் முன்னிலையில் கொண்டு சென்றனர்.

போர் முடிந்த பின்னர் வீரலக்ஷ்மி மன்மத சொரூபனைக் காணவிரும்பி அவனெங்குளானென்று தேடுங்கால் உயிரோடு சிறையிலிருக்கிறானென்று தெரியவந்து, சிலருடன் செல்லும்போது காமியப்பகுரு விலங்கு பூண்டு வருதல் கண்டாள். உடனே அவன் "மாதே! உன் வீரியமே வீரியம். உன் காதலன் உயிரோடிருக்கிறான். அவனிமித்தமாவது என்னை விடுதலை செய்வாயாக" என்றிரந்து வேண்ட, அவள் "நான் செய்வதொன்றுமில்லை. வீரமார்த்தாண்டன் தயாளமுள்ளவனாதலால், அவன் உனக்கு உதவி செய்யினுஞ் செய்யலாம்" என்றுகூறி, தன் காதலனிருக்குமறை சென்று அவனைச் சிறையினின்றும் மீட்டனள். பின்பு சிறையிலுள்ளார் யாவரையும் மீட்டு வரும் போது, ஒரு அறையில் மாசுணமிருக்கக் கண்டு அதைக் கொல்லும்படியேவ, அங்ஙனே செய்தனர். இராமநாதன்

விடுதலை செய்யப்பட்டனன். உடனே வீரமார்த் தாண்டன் அம்மாளிகைக்குள் நுழைந்து அதைக் கைக் கொண்டு "குருதவிர மற்றொருவரும் தண்டிக்கப்பட மாட்டார். முன் போலவே சுகமாயிருக்கலாம்" என்று பறை யறைவித்தான். குருவின் நிலைமை குன் றியிருக்கும் போது, ஸ்ரீபிரான் பிரபு தன் மகனால் சிறை யுண்டதாக வுணர்ந்து "மகம்மதியரால் தன் மகன் சிறைப் பட்டானென்று கேள்வியுற்றும் சிறைமீட்கப் பணங்கட்ட மாட்டோமென்று மறுத்தோமே; என்ன மதியீனம்! அவன் தப்பிப் பிழைத்ததே போதும்" என்ற உவகையும், "தன்னைச் சிறை செய்தனனே" என்ற கோபமுங் கொண்டவனாய் வருந்தி நின்றான். மயன் அவனிடஞ்சென்ல அவன் இவனை நோக்கி மிகவுங் கோபித்து "நீ குலநாசஞ் செய்யவந்தாய்; இழிகுலப் பெண்ணைக் காதலித்தாய்; கொள்ளை யடிப்பவருடன் கூடினாய்; நின் கீர்த்தி எத்தன்மைத்து" என்று கூற, மயன் தந்தை கோபந்தணியுமாறு நிகழ்ந்தனயாவு மெடுத் தியம்பித் "தாங்கள் சிறையிலிருப்பதாகக் கருதல் வேண்டாம்" என்றனன். இதைக்கேட்டு "நல்லது! இனி நீ வீரமார்த்தாண்டன் கூட்டம் விட்டகலு. மனோ ரஞ்சிதத்தை நேசியாதே" எனலும், அதற்கவன் உடன்படானாக, ஸ்ரீபிரான் பிரபு சிறையினின்றும் வெளிப்போந்து உதயபுரஞ் சென்றனன். வீரலக்ஷ்மி தன் காதலனை யழைத்துக்கொண்டு மேகநாதன் மேக நாயகி மனோரஞ்சித மிருக்கு மிடத்திற்கு வந்தாள். அவளைக் கண்டதும் யாவருங் களிப்புண்டனர்.

சூரியனுதயமாயதும் வீரமார்த்தாண்டன் ஆமடாபாத் தேயத்து நியாயாதிபதிகளிருவரைக்கொண்டு காமியப்ப குருவைத் தண்டிக்கக் கருதி ஒரு சபை சேர்த்து, குருவை அங்கு வரித்துவரக் கட்டளையிட்டான். குரு அங்கு வந்ததும் வீரமார்த்தாண்டன் சபையாரை நோக்கிக் கூறுவான்,—"குருவின்மேல் இன்று குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. இவனைப் பக்ஷபாதமின்றி விசாரணைசெய்ய இவன் நண்பர்களான இரண்டு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி யிருக்கிறேன். இவ்விருவரும் கடவுளாணையை மேற்கொண்டு உண்மையே மேற்கொள்வர் எனக் கருதுகின்றேன். இவர்கள் குற்றவாளி யல்லவென்று கூறுவாராயின், இவனை விடுதலை செய்கிறேன். அதன்மேல் இவனுக்கு யாராவது கெடுதி செய்வாராயின் நானே என்னுயிரைத் தருகிறேன்" என்று சொல்லித் தான் ஏற்படுத்தி வைத்திருந்த சாக்ஷிகளில் முன்னவனை யழைத்துக்கேட்க, அவன் "வீரமார்த்தாண்டன் அனுப்பிய தூதனைக் கொல்லும்படி இக்குரவன் எனக்குக் கட்டளையிட்டான். நான் கொன்றேன்" என்றான். இரண்டாவது சாக்ஷி "மாசுணம் குருவின் உத்தரவுப்படி கொணரப்பட்டது; அந்நாகத்தால் விசித்திர வீரியன் கொலையுண்டான்" என்றான். மூன்றாவது சாக்ஷி, சோமதத்தன் அங்கு வந்து குருவின் காரியமாகத், தான் கொள்ளைக்காரரிடம் நட்புக்கொண்டது முதல் தனக்குத் தெரிந்த யாவுங் கூறினன். நான்காவது சாக்ஷி, வீரலக்ஷ்மி தன்னைப் பலாத்காரமாய்க் கற்பழிக்க முயன்றதும், அதற் குடன்படாமையால் தான்பட்ட கஷ்டங்

களையுங் கூறினாள். ஐந்தாவது சாக்ஷி, மனோரஞ்சிதமும் அவ்வாறே கூறினள். இவையெல்லாஞ் செவியுற்ற குரு நடுநடுங்கினன். "இக்குற்றங்களுக்குப் பதில் என்ன கூறுகின்றாய்?" என்று அந்நியாயாதிபதிகள் வினவ, அவன் "வந்த தூதன் மரியாதை யின்றிப் பேசியதால் அவனைக் கொலைசெய்தேன். விசித்திர வீரியன் ஆலயத்திற்கு விரோதமாகப் பேசினனாகையால் அவனிறந்தான். மன்மத சொரூபனும், வீரலக்ஷ்மியும் தண்டனையினின்றுந் தப்பிச் சென்றாராதலால் அவர்களைக் கொணர்ந்து மீண்டுந் தண்டிக்க வேண்டிச் சோமதத்தன் உதவியால் மன்மத சொரூபனை மீண்டும் சிறை செய்தேன். இவ்விரண்டு மாதர்களைப் பற்றிய சங்கதிகள் யாவும் கற்பனையாகும். நானொன்று மறியேன்" என, நியாயாதிபதிகள் இவனது தன்மையை யுணர்வாராதலால் உண்மை யுணர்ந்து "குட்டி குரைத்து நாய் மேல் வைத்தது போல்" பேசுகின்றனை என்றுகூறி அவனைக் குற்றவாளி யெனத் தீர்மானித்துக் கொன்று விடும்படி கொலைஞருக்கு உத்தரவளிக்க அங்ஙனே கொலை செய்தனர். இதைக் கேட்ட யாவரும் ஆனந்தக்கூத்தாடினர். அன்று மூன்று நாள் மயன் மனோரஞ்சிதத்தை மணஞ் செய்து கொண்டனன். மன்மத சொரூபனும் வீரலக்ஷ்மியும் வீரமார்த்தாண்டனை நோக்கி "நாங்கள் அவசியம் ஐதராபாத்துக்குப் போக வேண்டும். நீர் எம்மோடு வரின் காராகூலி கூட்டம் எங்களை இம்சை செய்யாராதலால் உம்மை எம்முடன் அழைத்தேக இஷ்டமிருக்கிறது. இன்னும் பதினொரு நாட்களுக்குப்

பின்னர் நீர் அங்கு நிகழும் இலம்பத்தைக் கண்ணுற லாம்," எனலும், "அங்ஙனேயாக: மயனேயும் ஜயவீர னேயும் இங்கு வைத்து விட்டுப் போகிறேன். மாளவ நாட்டரசன் சேனைகளைச் சேர்த்து வருவதாயினும் அநே கவாரங்கள் செல்லும். இன்னும் மூன்று நாளைக்குள் நான் வருகிறேன். நீங்களிருந்தால் நாம் யாவரும் ஒன்று கூடிப் போகலாம்" என்று சொல்ல, வீரலக்ஷ்மி அதைக்கேட்டுச் சந்தோஷித்தாள். மேகநாதனும் மேகநாயகியும் விரைவில் தங்கள் நாடு சென்று மணம் புரிய எண்ணங் கொண்டாராயினும், காராஆலி கூட்டத் திற்கஞ்சினராய் இவர்களுடன் செல்வதே கருமமென நினைத்தனர்.

———:0:———

அத்தியாயம் XIII

முகுந்தராசன் மாளிகையின் விருத்தாந்தம் : காராஆலி வீரலக்ஷ்மியை மீண்டும் சிறைப் படுத்தல்.

இவர்கள் புறப்படுதற்கு நான்கு நாளாயின. ஐதராபாத்தில் சிலம்பம் நடக்க அற்றைக்கு ஒருவாரமிருந்தமையால், ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் அவ்வூருக்குச் சென்றுகொண்டிருந்தனர். சத்திரங்களில் அன்னமும் இடமும் கிடைப்பதரிதாயின. வீரமார்த்தாண்டன், வீரலக்ஷ்மி, மன்மதசொரூபன், மேகநாதன், மேகநாயகி ஆமடாபாத்தை விட்டு நந்தயபுரத்திற்கு வந்தனர். அவ்விரவு தங்க இடங்கிடைக்காது தியங்கிச் செல்லுங்கால், ஒரு வயோதிகன் பசியின் கொடுமையா லயர்ந்து ஒரு மரத்தினடியில் படுத்துக் கொண்டிருந்தான். வீரமார்த்தாண்டன் அவனிடஞ் சென்று, அவன் வேண்டியபடி உணவளித்து "இன்றிரவு தங்க இங்கு இடங் கிடைக்குமோ?" என்று கேட்க, "ஐயா! பசியால் வருந்திய எனக்குக் கொடுத்த அன்ன தானமே எல்லாத் தானங்களினுஞ் சிறந்தது. உம்மைச் சாலப் புகழ்கிறேன். சத்திரங்கள் தோறும் ஜனங்கள் நிரம்பி யிருக்கின்றனர். இடங்கிடைத்த லரிது. நீர் எனக்கு உண்டியளித்ததால் உங்களை முகுந்தராசன் கோட்டைக்கு அழைத்துச் செல்கிறேன்;" எனலும், மேகநாயகி "அக்கோட்டையிலே பேயி பிசாசி யிருக்குது, அங்கே போவாணும்"

என்றாள். வீரலக்ஷ்மி அக்கோட்டையைப் போய்ப் பார்க்க வேண்டுமென்றாவல்கொண்டு தன்னோடு வந்தாருடன் அங்குச் சென்று அம்மாளிகையி னொருபுறத்திலுள்ள ஒரு அறையிற்றங்கி யாவரும் போஜன மருந்தினர். அவ்வயோதிகன் முன்னமே யுண்டானாதலால் வாளாவிருந்தான். உண்ட பின் இம்மாளிகையின் அதிசயமென்ன வென்று கேட்க, வீரமார்த்தாண்டன் உரைப்பானாயினான்.

"மாளவ நாட்டரசனான முகுந்தராசன் செங்கோல் செலுத்தி வருநாளில் குலசேகரன் புத்திரி விசாலாக்ஷியைக் கற்பழித்து, பின் அவளை வெறுத்து மற்றொருத்தியை மணம்புரிய எத்தனித்தனன். இதை யுணர்ந்த குலசேகரன் அரசனைத் தண்டிக்கச் சமயம் எப்போது வாய்க்குமென்று காத்திருந்தான். ஒரு நாள் முகுந்தராசன் விருந்து செய்யுங் காலத்து அங்கு வந்த விருந்தினர் "நந்தய புரத்துள்ள மாளிகையில் அநேக அற்புதக் காட்சிகளிருக்கின்றன, அதற்குட் செல்வோர் மீண்டும் வருவதில்லை" என்று பலவாறாக அதன் பெருமையைப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது மதுவெறி கொண்ட முகுந்தன் "நான் அக்கோட்டைக்குச் செல்கிறேன், வருகின்றவர் வரலாம்" என்று கூறி எழுதலும், அநேகர் தகைந்துங் கேளானாய்ப் புறப்படும்போது அவனுயிரை யொத்த அன்பர்கள் அவன் பின் தொடர்ந்தனர். அக்கோட்டை வாயிலடைந்து கவாடத்தைத் திறக்கப் பன்முறை முயன்றும் பயன்படா தொழியவே, அதிகக் கோபாவேசங்கொண்டு அதை ஒரு இடி யிடித்

தான். அக்கதவம் உடனே திறந்துகொண்டது. உட்சென்று பார்ப்புழி அங்கு ஈட்டியைக் கையிற்கொண்டு நிற்கும் மூன்று பதுமைகளும், விலையுயர்ந்த ஆபரணங்களும், உயிரை வதைக்குங் கருவிகளு மிருப்பக்கண்டு, சிறிது தூரம் சென்றபோது ஒரு கல்லால் செதுக்கப்பட்ட தலை யங்கிருக்கக் கண்டனர். அதனருகே செல்லுங்கால் அது பின் வருமாறு கூறலுற்றது. 'என்வாயினின்று வரும் வார்த்தை வன்னியை யொக்கும். நான் கூறும் வார்த்தை எப்புத்தகத்தும், எக்காலத்தும் வழங்கும் வார்த்தையாம். நான் மிகுந்த சாமர்த்தியமுடன் வார்த்தையாடுவேன். என்போன்ற உருவம் பேசவதில்லை' என்றது என்றான். இதைக் கேட்டதும் வீரலக்ஷ்மி "என்ன! ஸ்ரீபிரான் மாளிகையி லிருப்பதுபோ லிங்கு மிருந்ததோ? இவ்விடத்திருந்தவைகளை அங்குக் கொண்டுபோய் வைத்தனரோ?" என்று தனக்குள்ளே நினைத்து, "மீண்டும் அது சங்கதியாது?" என, அவன் கூறலுற்றான். "அத்தலை அரசனை நோக்கி, 'ஓ அரசனே! நீ செய்யுங் காரியம் ஈனமானது. நீ விசாலாக்ஷியை இங்ஙனம் வைத்திருப்பது உனக்குக் கெடுதியே விளைக்கும். நான் சொல்லும் வண்ணம் நடந்து கொள். இங்கு நீ கண்ட பொருள்கள் யாவுங் கொண்டு செல்லுதி. நீ இப்போது காதலிக்கும் மாதினைத்தணந்து விசாலாக்ஷியை மணஞ் செய்து கொள்' என்றது. அதைக் கேட்ட பிரபுக்கள் அங்ஙனே செய்ய அரசனைத் தூண்டுதல் வேண்டுமென்று தீர்மானித்தனர். அரசன் தலை கூறியாங்கு ஆங்குள்ள பொருள்களைக்

கொண்டு சென்றனனே யொழிய விசாலாக்ஷியை மணந்திலன்: இது தான் சங்கதி'' என்று கூறினன். பின்பு மன்மதசொரூபன் "இன்னும் அம்மாளிகையில் யாதாகினும் அதிசயக் காட்சி யுளதாமென்று ஆராய்வோம்'' என, மேகநாயகி அதற் குடன்படாமையால் மேகநாதனை அவளுக்குக் காவல் வைத்துவிட்டு மற்றைய நால்வரும் சென்றனர்.

இந்நால்வரும் ஒவ்வொரு அறையையும் பார்த்துச் செல்லுங்கால், அக்கிழவன் அவர்களைப் பின்வரச் சொல்லி முன் நடந்து சென்றான். இப்படி நடந்து செல்லுங்கால் அக்கிழவன் ஒரு கள்ளவறைக்குட் சென்றான். வீரலக்ஷ்மி அவன்பின்தொடர்ந்தனள். அத்தருணத்தில் கையிற்கொண்டு சென்ற விளக்கு நின்றுவிட்டது. இத்தருணமே நற்றருணமெனக்கருதி, வீரமார்த்தாண்டனும் மன்மத சொரூபனும் ஓரறைக்குளிருக்கும் போது அதனைத்தாழ்க் கோலிட்டு, வீரலக்ஷ்மியை வழியில் தூக்கிச்சென்றான். அவள் கூக்குரலிட அக்கிழவனைக் காராளியே என்று எண்ணினான் வீரமார்த்தாண்டன். தன்னைப்போல் விருத்தவேடந் தரிக்க வல்லானென நினைத்தான் வீரன். அத்தருணத்தில் காராளி கூட்டம் புதரில் புகுந்திருந்து அங்குச் சென்றது. காராளி செய்கையை வீரமார்த்தாண்டன் கூட்டத்தார் தடுக்க, இருதிறச் சேனைக்குஞ் சண்டை மூண்டது.

காராளி மேக நாயகியைக்கொண்டு செல்ல முயன்றும் பயன்படாமையால், வீரலக்ஷ்மியைக் கைக்கொண்டு

ஓடினன். வீரமார்த்தாண்டன் கூட்டத்தார் தந்தலைவனைத் தேடிச்சென்று, ஓரறையிலிருப்பதையறிந்து அவ்வறையின் தாளைத் திறந்தனர். அவன் வெளிப்போந்து வீரலக்ஷ்மியைக் கண்டு பிடிக்கும் வழி தேடிக்கொண்டே தன் கூட்டத்துடன் நந்தய புரத்தினின்று தென்றிசை நோக்கிச் சென்றான். காராளி வீரலக்ஷ்மியுடன் ஐதாராபாக்கஞ் சென்று அங்குள்ள இராஜமாளிகைக்குள் நுழைந்தனன். வீரலக்ஷ்மி அம்மாளிகையி னழகைக் கண்டு களித்தனள்.

—:0:—

அத்தியாயம் XIV

—:o:—

வீரலக்ஷ்மி எண்ணமும் சிலம்பமும் முற்றுப்பெற்றன.

காராளி அம்மாளிகைக்கு வெளிப்போந்திருந்து வீரலக்ஷ்மியை உட்புகச் செய்ய, அவள் மாளிகைக்குட் சென்று விசாலமாயும் உயரமாயுமிருந்த தோரறைக்குள் நுழைந்தனள். அவ்வறையின் நாற்புறச் சுவரில் பதித்திருந்த நவரத்தினங்கள் நக்ஷத்திரங்கள் போல் மின்னின. அங்குக் காணப்பட்ட சித்திர வேலைகள் அவள் கண்ணைக் கவர்ந்துகொண்டன. அவ்வறையின் நடுவில் சிறந்த ஆபரணங்களும், விலையுயர்ந்த ஆடையு மணிந்திருந்த ஒருவர் இருமருங்கும் பெரியோர் சூழக் கொலுவீற்றிருந்தனர். அவரை யரசனென்றுணர்ந்து நமஸ்கரித்தாள். "நீயார்? அரசனிடம் வந்த காரணம் யாது?" என்று அரசனருகிலிருந்த அமைச்சன் கேட்க, "காராளி கொணர்ந்தான்" என்றாள். உடனே அரச னிவளை யின்னளென வுணர்ந்து யாவரையும் வெளிப்போக வுத்தரவளித்து இவளை நோக்கிக் கூறுவான்: "உன் சங்கதி முழுதுங் கமலாவதியாலுணர்ந்தேன். நீ ஒரு மோதிரங்கொண்டு வந்ததாகக் கூறினள். அது யாண்டுளது?" என்று கேட்க, அதை அவரது திருமுன்னர் வைத்தாள். அதைப் பார்த்ததும் அதிக ஆனந்தங்கொண்டு "நல்லது: இன்னும் அப் பெரியவர்

உயிரோடிருக்கின்றனரா? அவர் என் தந்தைக்கு உயிர்ப் பிரியர். என் தந்தையார் அவருக்கு இம்மோதிர மளித்து எவ்வாற்றாலும் யாதொரு கெடுதியும்வராது அவரைப் பாதுகாப்பதாக வாக்களித்துள்ளார். யான் எந்தை வாக்கை நிறைவேற்றல் வேண்டும்" என்று சொல்லி, "நீ யார்? நீ அவரை எவ்விடங் கண்டனை? நிகழ்ந்த சங்கதி யாது? எல்லாம் எனக்கு விளங்க விளக்குவாயாக" என்று விளம்ப, அவள் தன்னூரிலிருந்து பிரயாணமானது முதல் காராஆலி முகுந்தன் மாளிகையில் தன்னைக் கவர்ந்து ஐதராபாக்கத்திற்குக் கொண்டுவந்த திறுதியாக நடந்தன யாவும் விவரமாய் விளம்பி முடித்தனள். இதைக் கேட்டு அரசன் ஆச்சரியமடைந்து "நீ சிறந்த மாது. உன்னைப் போல் ஒருத்தியை இதுகாறுங் கண்டேனில்லை. கமலாவதியைக் காக்க வீரமார்த்தாண்டன் வருகின்றனனோ? அவனே அவளைக் காத்தல் வேண்டும்... ......(சிறிது நேரம் யோசித்து) அவன் வேண்டிய தவசியமேயில்லை. ஆமடாபாத்தில் காமியப்பகுரு நிமித்தம் நீ போருக்கெழுந்தனை யென்று நான் கேள்விப்பட்டிருப்பதால், நீயே சிலம்பத்தில் அவள் நிமித்தம் போர் புரிதல் கூடும்" என்று பரிகாசமாகச் சொல்லிப் புன்சிரிப்புக்கொண்டு, மீண்டுங் கூறுவான்: "கமலாவதியின் மூலமாய் நீ அக்கன்னியர்களுடன் வாராமைக்குக் காரணம் காராஆலியே யென்றுணர்ந்து அவனிடம் என் சேவகர்களைப் போக்கி உன்னை யவன்கொண்டு வாரானாயின் கொலை செய்வேனென்று உத்தரவளித்தேன். அச்சமயம் நீ யவன் வசமில்லாததால் மாயவேடம் பூண்டு

உன்னை யிவ்விடங் கொணர்ந்தான். நல்லது; நாளை சிலம் பம் நடப்பதால் நான் என்னாட்களால் வீரமார்த்தாண்டன் வருகின்றானா இல்லையா வென்று தெரிந்துகொண்டு உனக்குத் தெரிவிக்கிறேன். உன் சகி கமலாவதி நின் வருகைக்கு எதிர் பார்த்திருக்கிறாள். நீ அவளிடஞ் சென்று இவ்விரவைக் கழிப்பாயாக" என்று கூறித் தன் சேவக னொருவனை யழைத்து "அடே! நீ இம்மாதை நமது அந்தப் புரத்திலுள்ள அயிஷாவிடம் ஒப்புவித்து, கமலாவதி யிருக்கும் அறைக்குளனுப்பும்படிச் செய் வாய். இப்பெண்மணியைப் பக்ஷமாய்ப் பாராட்டச்சொல். மேலும் இம்மாதை யான் தங்கைபோல் பாவிக்கின்றே னாதலால் அயிஷா அந்தப்புரத்திலிருக்கும் மாதர் போல் கருதப்போகிறாள்: ஜாக்கிரதை" என்று சொல்லினன். வீரலக்ஷ்மி அரசனுக்குப் பணிவுடன் வந்தனம் புரிந்து அவனுடன் சென்று அந்தப்புரமடைய, அயிஷா அச் சேவகன் கூறியாங்கு அவளைக் கமலாவதி வதியுமிடங் கொண்டு சென்றாள். அச்சமயம் கமலாவதி "இன்னும் என்னை இரக்ஷிக்க வரவில்லையே என் கோரிக்கை எங்ங னம் ஈடேறும்!" என்று பலவாறாக எண்ணி வருத்த மொடு அமளிமேல் புரண்டுகொண்டிருந்தாள். வீரல க்ஷ்மியைக் கண்டதும் உள்ளத்தடங்கா உவகை யெய்தி "இனி நானுய்ந்தேன் உய்ந்தேன்" என்று கண்க ளினின்று ஆனந்த பாஷ்பம் பொழிந்தனள்.

வீரலக்ஷ்மி சென்றதும் அப்துராமன் II தன் சேவகனைக் கூவிக் காரா ஆலியை அழைத்து வருதி யென்றான். அவன் வந்தவுடன் "ஓ திருடர் தலைவ! நீ என்முன்

எவ்வளவு தைரியமுடன் வந்தனை. பொருள் நிமித் தம் எனக்குரிய ஒரு மாளவ மாதைக் கொள்ளை கொண் டனை யல்லவா? அது உனக்கு நியாயமாமோ?'' என, அவன் "சுவாமி! மகராஜ்! அங்ஙனஞ் செய்தது தவறே யாயினும், வயிற்றின் கொடுமை செய்ய நேர்ந்தது.

குடிப்பிறப் பழிக்கும் : விழுப்பங் கொல்லும் :
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம் :
நாணணி களையும் : மாணெழில் சிதைக்கும் :
பூண்புனை மாதரொடு புறங்கடை நிறுத்தும் பசிப்பிணி.

(மணிமேகலை)

ஆதலால் யானும் எம்மவரும் வயிறு வளர்க்கு நிமித்தம் அங்ஙனஞ் செய்ய நேர்ந்தது. அருளுடையீர்! மன்னிப்பீராக. 'நான் உலக நீதிக்குத் தவறினவனே னும் உமக்கு யானடிமைப் பட்டவனே'' என்று மறு மொழி பகர்ந்தான். இதைக் கேட்ட இறைவன் மகிழ்ந்து "காராளி ! நான் மாளவ நாட்டின்மேல் படையெடுக்க நேர்ந்தது. இச்செய்தியை யான் இது காறுங் கூறினதில்லை. சிலம்பம் மூன்று நாள் நடந்த தன் பின்னர் என்கருத்தை யான் பலருக்கு மறிவிப் பேன். நீ செய்வது யாதெனில் உன் கூட்டமுடன் சென்று ஸ்ரீபிரான் மாளிகையை முற்றுகை செய்து அதைக் கைக்கொள்வாயாக. பின்னர் உள் நுழைந்து பார்க்கின் அதிலொரு விருத்தரிருப்பர். அவருக்கு முகமன் கூறி நானழைத்து வரச் சொன்னே னென்று சொல்'' என்றான். காராளி "அங்ஙனேயாக'' என்று உடன் பட்டு அரசனை விட்டகன்றான்.

அந்தப்புரஞ் சென்ற வீரலக்ஷ்மி சிறுகாலே யெழுந்து ஸ்நானஞ்செய்து நல்லாடை அணிந்து உண்டி யுண்டு கமலாவதியுடன் இனித்திருக்குங்கால், அயிஷா அவளிடம் வந்து "உன் காதலனும் வீரமார்த்தாண்டனும் வந்தார்களென்றும், அவர்கள் உன்னைப்பார்க்க வேண்டி யிருப்பதாகவும் எங்களரசன் உனக்குத் தெரிவிக்கச் சொல்லினர். நீர் சுகமாய்ப் போகலாம்" என்றாள். அரசன் ஆணையால் சேவகர் பதின்மர் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு முன்னே நடக்க, வீரலக்ஷ்மியும் கமலாவதியும் பின்னே சென்று வீரமார்த்தாண்ட னிருக்கு மறையடைந்தனர். அங்கு அச்சேவகர்கள் மூட்டைகளை யவிழ்த்து அவற்றிலிருந்த விலை யுயர்ந்த ஆடைகளையும், கூரிய ஆயுதங்களையும், உடற்கவசத்தை யும் அவ்வீரனுக்குக் கொடுத்து அவ்வறைவிட் டகன்ற னர். கமலாவதி நிமித்தம் அரசனது காருண்யம் விளங்குகின்றதன்றோ? கமலாவதி ஓடிப்போவாளென்ற வெண்ணம் அரசனுக்கில்லாமையால் அவளோடு ஒரு மாதும் சென்றாளில்லை. வீரலக்ஷ்மி மன்மதனொரு பனைக்கண்டு ஆனந்தங் கொண்டு முகுந்தராசன் கோட் டையில் பிடிப்பட்டது முதல் அரசன் அரண்மனை வந்து அவரிடம் வார்த்தை யாடியது வரையிலுரைத்தனள்.

சிலம்பங் காரணமாய் அரசன் மாளிகைக்கருகில் ஒரு விசாலமான விடம் ஏற்படுத்தப் பட்டது. அங்கே யொரு உன்னதமாரி உயர்ந்த மேடையமைக்கப்பட்டி ருந்தது. அம்மேடை நானாவித புஷ்பச் செடிகளாலும் உயர்ந்த கொடிச் சீலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு

அழகமைந்திருந்தது. அம்மேடையில் அரசனுக்கும், உயர்ந்த அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்களுக்கும், வேற்றரசர்களுக்கும், அந்தப் புரத்து மாளவநாட்டு மாதர்களுக்கும் தனித்தனியிடம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பகல் பதினொரு மணியாவதன்முன் மன்மத சொரூபன், வீரலக்ஷ்மி, கமலாவதி அங்குச் சேரலும், ஒருவன் அவர்கட்கு ஆசனமமைத்தான். பன்னிரண்டு மணியாயதும் அரசனும் அவனது மாளவநாட்டுப் பத்தினிமார்களும் அங்குக் கூடினர். பற்பல வாத்தியங்கள் முழங்கலாயின. சிலம்பம் ஆரம்பிக்கப் பட்டு அடியில் வரும் முறையானே நடத்தப்பட்டது:—

1. மாளவநாட்டாரறுவர்க்கும் மகம்மதியரறுவர்க்கும் யுத்தம் நடந்தது: மகம்மதியர் வெற்றி பெற்றனர். உடனே மகம்மதியர் மேகமுழங்குவது போலப் பெருமிதங் கொண்டு கர்ச்சனை செய்தனர். வெற்றி பெற்றோர் அரசன் முன் சென்று வணங்க, பொன் கொலுசுகளை யெடுத்து ஒவ்வொருவர் கழுத்திலும் ஒவ்வொன்று சூட்டினான்.

2. ஒரு பராம்புரம் தேயத்தானுக்கும் ஒரு மகம்மதியனுக்கும் போர் விளைந்தது. மகம்மதியன் வெற்றியடைந்தான். அவனுக்கு அரசன் இரண்டு பொன் கொலுசு வெகுமதி யளித்தான்.

3. ஆமடாபாத் தேயத்தார் இருபத்தினால்வருக்கும் இருபத்தினன்கு மகம்மதியருக்கும் போர் விளைய, 'ஜயிக்குங்கூட்டத்தார் மாளவநாட்டிலிருந்து இவ்வருடம்

வந்திருக்கும் மாதர்களில் இருபத்தினான்கு மாதர்களை வெகு மதியடைவர்' என வேந்தன் விளம்பினன். மகம்மதியரே வெற்றி கொண்டு அக்கன்னியர்களைப் பரிசாகப் பெற்றனர்.

இவை யனைத்துங் கண்ணுற்றிருந்த கமலாவதி "என்ன! நம்மவர் ஜயிப்பதில்லையே: நான் எங்ஙனம் விடுதலை யடைவேன்" என்று வருந்த, "வீர மார்த்தாண்டன் உன்னைக் காப்பாற்றுவன்" என்று வீரலக்ஷ்மி சொல்லி அவள் மனதைத் தேற்றினள்.

4. கமலாவதி விஷயமாய் வீரமார்த்தாண்டனுக்கும் அரசன் சிநேகனும் போரில் வல்லவனுமான உசேயினுக்கும் போர் விளைந்தது: வீரமார்த்தாண்டன் வெற்றியடைந்தான். கமலாவதியின் சந்தோஷத்திற்களவுண்டோ? இக்கதையைக் கவன முடன்வாசிப் போர் கருதுவாராக.

5. பின்பு வீரமார்த்தாண்டன் அரசன் முன் சென்று "இறைவ! இன்னும் என் மேல் யாவரேனும் போருக்கு வரின் வரலாம்" என, முன்னர் ஜயவீரனால் தோல்வியடைந்தவனும், கொள்ளைக் காரர்களுக்குத் தலைவனுமான காராலி "ஐயோ! என் செய்கேன். இவன் கூட்டத்திற் சேர்ந்த ஒருவனையே வெற்றி கொள்ள முடியாமற் போயிற்றே. இவனை எங்ஙனம் ஜெயித்தல் கூடும்; வீரன் கூறியதைக் கேளாதவன் போலிருப்போமாயின், அரசன் நம்மேல் கொண்ட எண்ணத்தை விட்டு, நம்மை அற்பனென நினைப்பனே!

அவன் நம்மை வீரனென்றல்லவோ மதித்து ஸ்ரீபிரான் மாளிகையை முற்றுகை செய்கென்றான். நம்முயிர்போயினும் போக. இவனுடன் போர்புரிவதே தகுதி" என்று நினைத்து அவனுடன் போர்புரிய வெழுந்தான். வீரமார்த்தாண்டனுக்கும் காராஆலிக்கும் மும்முரமான யுத்தம் விளைந்தது. முன்னவனே முனையில் வெற்றியுற்றான். காராஆலி யடியுண்டு படிமேல் வீழ்ந்து துடிதுடித்தான். இவன் போன்ற சில வீரர்கள் இவன் மேல் சண்டை செய்து தோல்வியடைந்தனர். இவ்விதமாக அடுத்த இரண்டு தினமும் அநேக மகமதியர்களை வெற்றி கொண்டான். வேந்தனால் இவன் பெற்ற வெகுமதிகள் அளவிலவாயின.

இவனது வீரத்தை நோக்கி "யாவர் முன்னிலையிலும் மாளவநாட்டின்மேல் போர் புரியப் போகிறேன்" என்று சொல்ல நினைத்த அரசன் அங்ஙனங் கூறத் துணியானாய் அவ்வீரன்மேல் பொறாமை கொண்டு "இவ்வூரில் வந்திருக்கும் ஒவ்வொரு அன்னிய தேயத்தாரும் இந்நாட்டை விட்டு இக்ஷணமே ஏகக்கடவர்" என்று பறை யறைவித்தான். அன்னியதேயத்தார் அநேகர் தத்தமிடமேகினர். மன்மதசொரூபனும் - வீரலக்ஷ்மியும் வீரமார்த்தாண்டனும் - கமலாவதியும் பயணப்பட, வீரமார்த்தாண்டனுக்கு ஒரு நிருபமெழுதி யனுப்பினான் நிருபன். இவன் எழுதியது யாதெனில், "நானுன் திறத்தை மிகவும் மெச்சினேன். நான் உன் அரசனுடன் யுத்தஞ் செய்யக் காலம் வந்துளது. அப்போது

நானுனக்குப் பகைவனாக வேண்டி வருமே என்செய் தேன். நான் நின்னிடம் நட்புப் பாராட்ட நினைத்திருந் தேன். நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத் தது'' என்றெழுதி யிருந்தது. இதைப் படித்துப்பார்த்து ''இறைவ! நின் பரோபகாரத்திற்கு மிகவும் மெச்சி னேன். நீதியில் தருமனை நிகர்த்தாய்; கொடையில் கர்ணனை யொத்தாய்; வாய்மையில் அரிச்சந்திரனானாய்: உன்னைப் புகழ எனது நா துடிதுடிக்கின்றது'' என்று வீரமார்த்தாண்டன் மறு கடிதமெழுதி யனுப்பித் தன் னகரஞ் சென்றான். சோதிடனை அலாஸ்நாவை விடு தலை செய்ய, அவன் இனி யிங்கிருத்தல் தகுதியல்ல வென்றுணர்ந்து, கையிலுள்ள பொருளைக் கைக்கொ ண்டு அயல் நாட்டிற் கேகினன்.

—:o:—

அத்தியாயம் XV

—:o:—

ஸ்ரீபிரான் மாளிகையில் நடந்த விருத்தாந்தம்.

கமலாவதி வீரமார்த்தாண்டனை விவாகஞ் செய்து கொள்ள விரும்பினுளாகையால், அவனை அவனுடன் விடுத்து வீரலக்ஷ்மி மன்மதசொரூபன் ஆகிய இருவரும் நடந்து செல்லுங்கால் மேகநாதனும் மேகநாயகியும் வீரலக்ஷ்மியிடம் விடை பெற்றுத் தமதிடமேகினர். சிலம்பமான பத்தாநாள் சுமார் இரவு ஒன்பது மணிக்கு ஸ்ரீபிரான் மாளிகை குறுகி அங்குள்ள மணியை யசைக்க, சோமனென்பான் வெளிப்போந்து அவர்களைக் கண்டு முன்போல் பரிசளிப்பானெனப் பூரித்து "செல்வர்காள்! அக்காலத்தில் உங்களுக்கு இங்கு இடந் தரப் பயந்தேன். இப்போது அத்துன்ப மெனக்கில்லை. நீங்கள் சுகமே யிருக்கலாம்" என்று சொல்ல, மன்மத சொரூபன் "நீ முன்னர் எமக்குத் தந்த இடமே போதுமானது. வேறொரு சிறந்த இடம் வேண்டுவதில்லை" என்றான். அதற்குச் சோமன் உடன்படாது ஓர் உன்னதமான வறைக்கு அவர்களை யழைத்துச் சென்றான். அவ்வமையத்தில் முன்னர் தோல்வியடைந்துள்ள மாளவநாட்டரசனான ஸ்ரீபாதனும், ஸ்ரீபிரான் மாளிகைப் பிரபுவும் தங்கள் நகரமடைந்தவுடன் சேனைகளை மேன் மேலுஞ் சேகரிப்பான் வேண்டி அவ்வூர் குடிகளுக்குத்

தீர்வை அதிகமாய் விதிக்கவே அவ்வூரார் உடன் படா தவராய் ஒன்று கூடி அவ்விருவரையும் அவர்களுடைய வீரர்களையும் எதிர்த்தாராக, அவர்கள் அதிக பயமடைந்து தப்பிப்பிழைக்க வழி தேடியுமகப்படாமையால் அக்கோட்டைக்கு வந்து மணியடித்தனர். மணிச் சத்தங்கேட்டதும், மணியடித்தார் யாரென நோக்கினான் சோமன். அரசனும் அம்மாளிகைப் பிரபுவும் என்றறிந்து, உடனே வீரலக்ஷ்மியிடம் ஓடிவந்து "நண்பர்காள்! என்னைக் காப்பாற்றுதல் வேண்டும். இக்கோட்டைக் குரியான் வந்திருக்கின்றான். நீங்கள் முன்னிருந்த இடத்திற்கே சேறல் வேண்டும்" என்று வேண்டினனாக, "அங்ஙனே செய்கிறோம்" என்று உடன்பட்டனர். பின்பு சோமன் அவர்கள் முன்னந்தங்கிய அறையிற் கொண்டுபோய் விடுத்து 'நாளைக்கு வருகிறே' னென்று சொல்லிப் போயினன்.

தெருவில் நின்ற கூட்டமுழுதும் அம்மாளிகைக்குட் சென்றது. அரசனுக்கு மனையாளில்லை. இரண்டு சகோதரிகளும், ஒரு புத்திரியுமுண்டு. அரசன் அங்குச் சென்றதும் இனிச்செய்வதென்னென்றுணர்வான் வேண்டித் தன்னைச் சூழ்ந்துள்ள மாதர்கள் மூவரையும், பெரியோர் நாற்பதின்மரையும் நோக்கி "என் மகள் மரகதவல்லிக்குப் பட்டங்கட்டி வைக்க வேண்டுமென்ற எனதெண்ணத்தை வீரமார்த்தாண்டனுக்குத் தெரிவித்து அவனுதவி புரிய வேண்டுதல் நலமெனத் தோன்றுகின்றது. உம்முடைய எண்ணமென்ன?" என்று

வினவ, மந்திரி "அவன் தான் அரசுபுரிய எத்தனிக்கிறு ஞகையால் உமதெண்ணங் கைகூடாது" என்றான். உதயபுரத்து நியாயாதிபதி "அரசனே! பஞ்சாப் தேயத் தரசனைத் துணை கேட்பது நல்லது" என, அவனுக்குப் போதுமான சைந்நியமில்லை என்று அங்குளோர் அறை யக் கேட்டு அவன் தன்னெண்ணத்தை யொழித்தான். "அப்துராயன் II உதவிகேட்பது நல்லது: அவன் சிறந்த குணமுடையவன்" என்று மற்றொருவர் சொல்ல, அதற் கரசன் சகோதரிகளும், மற்று முள்ளாரும் உடன் பட் டனர். ஸ்ரீபிரான் பிரபு இந்த யோசனைக்குச் சம்மதி யாது ஒன்றுங் கூறுதிருந்து பின் கூறுவான் "ஓ அர சனே! நான் ஒரு யோசனை சொல்கிறேன். முகுந்த ராசன் கோட்டையில் அநேக அற்புதங்கள் நடந்து கொண்டிருந்தனவென்றும், கல்லால் செய்த தலை முகுந்தனுக்குப் பலபோதனைகள் போதித்ததென்றும், அவன் அதன் சொற்படி நடவாததால் கெடுதி விளைந்த தென்றுங் கேள்வியுற்றிருக்கிறோம். உமக்கு என் சொல்லின்மேல் நம்பிக்கை யுண்டாயின் முகுந்தன் கோட்டையிலுள்ள அதிசயப் பொருள்கள் இங்குச் சே மித்து வைக்கப்பட் டிருக்கின்றன. நீர் என்னுடன் வரின் அத்தலையினிடம் அழைத்துச் செல்கிறேன். அத் தலை சொல்லும் வண்ணம் நாம் நடந்து கொள்ளக் கட வோம்" என்று கூற யாவரும் உடன் பட்டு அவன் பின் சென்றனர்.

இவர்களிங்ஙன மிருப்ப, மன்மதசொரூபனும் வீர லக்ஷ்மியும் அக்கோட்டைக்குளிருக்குங் கிழவனிடஞ்

சென்று நடந்த சங்கதிகள் யாவும் சொல்லிக்கொண்டிருந்தனர். அக்கிழவன் ஸ்ரீபிரான் பிரபு முன்னும் ஏனையோர் பின்னும் வருதல் கண்டு அங்குள்ள ஒரு திரை மறைவில் அவர்களை நிறுத்தி அப்பிரபுவின் முன் செல்ல, அப்பிரபு, "ஏ! கிழவ! அரசன், தலையின் அபிப்பிராயங் கேட்க வருகின்றான். நீ மறைந்து கொள்வாய்" என்று கூறி, அரசனிடம் மீண்டும் அணுகி அவனைத் தலையினிடங் கொண்டு சென்றனன்.

அத்தலை 'அரச! ஏன் இங்கு வந்தனை?' என்று வினவலும், அரசன் தனது எண்ணத்தைவெளியிட்டான். "ஓ அரசனே! உன் க்ஷேமநிமித்தம் யான் கூறுகிறேன், நான் சொல்லும் வண்ணம் நடக்கக்கடவை. முகுந்தராசன் என் சொற்படி நடவாததால் துன்பமுற்றான். நீ நலம்பெற நாடுவையேல் இதோ அடுத்த அறையில் ஆயுதங்களும், கவசங்களும், ஆபரணங்களும் வாசனைக் குப்பிகளடங்கிய பேழைகளுமுள்ளன. ஆடவர் கவசங்களைத்தரித்துக் கொண்டு ஆயுதங்களைக் கைக்கொள்ளட்டும். பெண்கள் ஆபரணங்களை யணிந்து கொள்ளட்டும். ஆடவர் கவசங்களைத் தரித்துக்கொண்டு ஆயுதங்களுடன் ஆமடாபாத்துக்குப் போக வேண்டியது. இவ்வாயுதங்களின் மகிமையால், வழிவிளைப் படையார். ஜனங்களோ அவர்களைக் கண்டதுங் கதறுவர். பகைவரால் மாளார். பெண்கள் அவ்வாபரணங்களால் மிகுந்த சௌகரியமடைவர். நான் சொல்லும் வண்ணம் நடந்துகொள்" என்றது. இதைக்கேட்டு அரசன் முதலிய யாவரும் அதிசயங்கொண்டு அங்ஙனே செய்கிறோமென்று

அத்தலைக்கு உறுதிமொழி கூறினர். அதன் பின்னர் ஆடவர் ஆண்டுள்ள ஆயுதங்களினருகே சென்று அவ்வாயுதங்களைத் தரித்தும், மாதர்கள் அணிகலனருகே சென்று அவைகளை யணிந்தும் மிக்க எக்களிப்புடன் தங்கள் தங்களறை சேர்ந்து அமளி மீது பள்ளிகொண்டனர். அவர்கள் பள்ளிகொண்டதன் பின், அக்கிழவன், "சரி; நமது எண்ணம் இற்றைத்தினம் முற்றுப் பெற்றது: பழிதீர்த்தேன்" என்று சினந்துரைப்ப, இதைக் கேட்டிருந்த வீரலக்ஷ்மியும் மன்மத சொரூபனும் "என்ன! அக்கிழவன் இங்ஙனங் கூறினனே" என்று நினைத்து அக்கிழவனிடஞ் சென்றனர். அவன் இவ்விருவரையுமன்புடன் நோக்கி "என் நேயர்காள்! இக்கோட்டையிலுள்ள உண்மைகளை நீர் விரைவில் தெரிந்து கொள்ளலாம்" என்று சொல்லித் தன் கையில் ஒரு விளக்குக் கொண்டு அவர்களைத் தன்னுடனழைத்துச்சென்றான். அரசன் முதலிய யாவரும் மடிந்திருப்பதைக் கண்ட வீரலக்ஷ்மி "இஃதென்ன ஆச்சரியம்! இங்ஙனம் நடந்ததின் காரணம் என்ன?" என்று கேட்க, அக்கிழவன் கூறுவானாயினன். "இவ்வரசர் கூட்டம் தலையுருவஞ் சொல்லியவண்ணம் ஆயுதங்களையும், அணிகலன்களையும் அணிந்தனர். அரசன் தலைக்கவசந்தரித்தான்: அதற்குள் மறைந்திருந்த கூரியதோர் வாள் அவன் நித்திரையிலசையும்போது அவன் தலையைத் துமித்தது. ஸ்ரீபிரான் பிரபு உட்கவசம் பூண்டான்: அக்கவசத்தின் நடுவண் கூரியவாளாயுதமுண்டு; அது அவன் மார்பைப் பிளந்தது. அரசன் மகள் மரகத

வல்லி இரத்தினப்பதக்க மணிந்தாள்: அது அசைந்தனும் அதற்குள் மறைந்திருந்த வளைந்த ஈட்டி அவள் வயிற்றைக் குத்திக் கிழித்தது. மற்றவர் அணிந்திருந்த மோதிரத்துள் கூரிய ஊசியுண்டு. அதன் முனை நஞ்சு தீட்டப்பட்டது. அது விரலைக் குத்தவும் நஞ்சேறி மாண்டனர். இவ்வாறாக யாவரும் மண்ணுல கொழிந்து விண்ணுல கடைந்தார்'' என்று கூறுதலும் இவ்விருவரும் பயந்தனர்.

இவர்களிப்படியிருக்க, அரசன் ஏற்பாட்டை மேற்கொண்ட காராஆலி கூட்டம் இரவு பன்னிரண்டு மணிக்கு அக்கோட்டைக்கு வந்து, கதவைப்பிளந்து, உள் நுழைந்தனர். அவர்களைக் கண்டதும் அக்கிழவன் சந்தோஷமடைந்தான். வீரலக்ஷ்மியும் மன்மத சொரூபனும் பயங்கொண்டு அக்கிழவனை நோக்கி "இவன் எங்கள் சத்துரு. எங்களைக் காக்கவேண்டும்'' என, அக்கிழவன் காராஆலியை நோக்கி "நீ இங்கு வந்த காரணம் யாது?'' என, அரசன் உரைத்த செய்தியை அவனுள்ளங்களிக்க வுரைத்தனன். அது கேட்டதும் உளங்கொளா உவகை கொண்டு காராஆலி என் நிமித்தம் வந்தானுகையால் நீங்கள் அஞ்சுதல் வேண்டாம். நீவிர் எனக்கு நண்பராதலால் உங்களையும் அவன் அங்ஙனே கருதுவன்'' என்றான். இதைக் கேட்ட காராஆலி "ஓ பெரியோய்! நீ கூறியது சரி'' என்றான். சோமனும் பாக்கியமும் இராணுவவீரர் வந்ததைக் கண்டு நடுங்கினர். அப்போது அக்கிழவன் அவர்களை நோக்கி "உங்கள் மேல் நான் குற்றஞ்சுமத்

தக் காரணமில்லை. இராஜ்ஜியத்தை யிழந்த பிரதாப சீலனுக்கு நீங்கள் யாதொரு கெடுதியும் புரிந்ததில்லை. நன்மையே புரிந்தீர்'' என்றான். இதைக் கேட்டதும் மன்மதசொரூபனும் வீரலக்ஷ்மியும் அரசியலினின்று நீங்கினவனும், மகப்மதியருக்கு வருடந்தோறும் நூறு கன்னியர்களை யனுப்புவதாக உடன்படிக்கை செய்தவனும், பிரதாபசீலனென்னும் நாமதேயமுடையானும் இக்கிழவனேயெனக் கொண்டனர். பின்பு அக்கிழவன் இருவரையும் நோக்கி "நான் உமக்கு இரண்டு காரியஞ் செய்யவேண்டி யிருக்கிறது. இக்கோட்டையில் நிகழ்ந்தவைகளை உங்களுக்குக் கூறுதல் ஒன்று. உங்களுதவிக்கு நன்றியுள்ளவனா யிருத்தல் இரண்டாவது. முதலெண்ணம் காலையில் முடிவு பெறும். இரண்டாவதெண்ணத்தை நான் அரசனான பிறகு முடிக்கிறேன்'' எனலும் இருவரும் விநயமுடன் வணங்கினார். பின்பு அவர்கள் தங்கள் மாளிகைக்குச் சென்றனர். காராஜூலி கூட்டம் அன்றிரவு அங்கே தங்கிக் கழித்தது.

—:o:—

அத்தியாயம் XVI.

——:.——

பிரதாபசீலன் விருத்தாந்தம்.

மறுதினந் தினகரனுதயமாதலும் சுமார் எட்டு மணிக்கு யாவரும் ஒன்று கூடினர். அக்கிழவன் வீரலக்ஷ்மி வேண்டுகோளின்படி யடியில் வருமாறு கூறுவானாயினான். "வீரலக்ஷ்மி! என் விருத்தாந்தத்தை யான் விளம்பவேண்டுவையாயின் முகுந்தராசன் காலமுதல் மொழிய வேண்டியிருக்கிறது. அவன் காஷ்மீர் தேயத்தரசன். அவன் மாளவநாட்டின்மேல் படையெடுத்து அதற்கரசனான ஆனந்தசோருபனைக் கொலைபுரிந்து நாட்டைத் தன் வயப்படுத்திக் கொண்டனன். ஆனந்த சொரூபனுக்குப் புதல்வரிருவருளர். அவர்கள் நாமதேயம் சுகுமாரன்: தனதத்தன். தந்தை, நாட்டையிழந்தமையால் இவ்விருவரும் எங்குச் சென்றோ மறைந்தனர். முகுந்தராசன் குலசேகரன் புதல்வி விசாலாக்ஷியைக் கற்பழித்து, பின்னரம்மாதின்பால் அன்புகொள்ளாது அவளை விடுத்து வேறொரு மாதினைக்காதல் கொண்டான். இச்செய்தியை யவள் தந்தை யுணர்ந்து, பழிவாங்க உறுதிப்பாடு செய்து கொண்டு, இவ்வரசனுக்கு எக்கெடுதி செய்யலாமெனநினைந்து நந்தயபுர மார்க்கமாகச் செல்லுங்கால், ஒருவருஞ் சஞ்சரித்த லில்லாததோர் மாளிகையினருகே யாதொரு காரணமுமின்றிச் சென்றனன். அம்மாளிகையில் மனிதரொருவரும்

வதிவதில்லை. அவ்விடஞ் சென்று மீண்டுந் திரும்புங்கால், அக்கோட்டையின் கதவந் திறந்தது. அதற்குள்ளிருந்த ஒரு வயோதிகன் குலசேகரனை நோக்கி "நானுன் நேசனாதலால், உனக்கு நேர்ந்த அவமானம் எனக்கும் நேர்ந்ததேயாகும். என்னோடு இம்மாளிகைக்குளிருப்பாயாக: உன் கருத்தை யான் நிறைவேற்றுகிறேன்" என, அவன் உள்ளே சென்றதும் ஆனந்தசொரூபன் புதல்வர் சுகுமாரன்—தனதத்தன் அம்மாளிகையின் முற்றத்தில் பேசிக்கொண் டிருக்கக்கண்டான். அவர்கள் இவனுக்கு முகமன் கூறி அக்கோட்டைக்குளுள்ள அதிசயக் காட்சிகளைக் காண்பிக்கக்கருதி ஒரு அறைக்குள் நுழைந்து சென்றனர். அங்குப் பன்னிரண்டு கம்மியர் பதக்கம்-மோதிரம் முதலியவைகளையும், தச்சர்கள் வாசனை வஸ்துக்கள் நிரப்பி வைக்கத் தந்தப் பேழைகளையுஞ் செய்துகொண்டிருந்தனர். மறு அறைக்குட் செல்ல, அங்கே குலசேகரன் கவசமுதலியவைகளைக் கண்டான். சுகுமாரன் அவைகளைப் பற்றிச் சொல்வானாயினன் 'இக்கவசங்களுக்குள் கூரிய வாட்களிருக்கின்றன. கவசம் பூண்டபின்னர் உடம்பையசைத்தால் அவ்வாட்கள் உடம்பைப் பிளந்துவிடும். அவ்வாட்களின் மீது நஞ்சு தீட்டப் பட்டிருப்பதால், மரணம் சித்தமே. இந்நஞ்சின் காரணத்தால் இக்கவசம் துருப்பிடிப்பதில்லை. கழுத்துப்பக்கத்தில் ஒருவளைந்த ஈட்டியிருக்கிறது. கழுத்தை யசைக்கின் அது கண்டத்தைக்குத்திக் கொன்றுவிடும். மோதிரங்களுள் கொடிய நஞ்சு தீட்டிய ஊசிகளிருக்கின்றன. அவற்றையணிபவர்

அவ்வூசியாலிறப்பர். இப்பெட்டிகளிற் காணும் வாசனை வஸ்துக்களில் நஞ்சு சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை முகருகின்றவரும் உடம்பின்கண் பூசுகின்றவரும் இறப்பது திண்ணம். இங்கு நிற்கும் மூன்று எற்புச் சட்டகங்கள் அவற்றின் பின்னுள்ள யந்திரசத்தியினால் அவைகள் தங்கையிலுள்ள ஈட்டியை யசைக்கின்றன. இதோ காணப்படுகிற தலை பலப்பக்கல்லால் செதுக்கப் பட்டிருக்கிறது. இத்தலை இவ்வறையில் நன்றாய்ப் பதிக்கப் பட்டிருப்பதால், அதையசைத்தல் முடியாது. இத்தலையின் வாயினின்று அடுத்த அறை வரைக்கும் ஒரு குழாய் அமைக்கப் பட்டிருக்கிறது. அவ்வறையிலிருந்து அக்குழாய் வழியாய்ப்பேசினால் அத்தலை உரத்ததொனியோடு பேசுதல்போ லிருக்கும்' என்று அவனுரைத்தனவெல்லாம் அக்கிழவன் வீரலக்ஷ்மிக்கு விளம்ப, 'அப்படியா!' என்று ஆச்சரியமுற்று நின்றாள். பின்னுங் கிழவன் கூறுவான் 'இவை யாவும் முகுந்த ராசனுக்கு விரோதமாகச் செய்தனவேயாம். குலசேகரனை யழைத்துச் சென்ற அவ்வயோதிகன் மிகவுஞ் செல்வவான். அவனுதவிகொண்டே இவ்வாயுதங்கள் செய்யப்பட்டன. அங்கே வேலைசெய்த ஆட்கள் அந்தரங்கத்தை வெளியிடேமென்று வாக்களித்தாராதலால், இவற்றின் இரகசியம் ஒருவருமுணர்ந்திலர். சுகுமாரன் சொல்லியயாவுஞ் செவியேற்ற குலசேகரன் அவர்களுடன் சேர்ந்தான். சமயம் எப்போது வாய்க்குமெனக்கருதி யிருந்தனர். சிலவாரத்திற்கெல்லாம் இவர்கள் கோட்பாடு முற்றுப்பெற்றது, எவ்வாறெனில் :—

முகுந்தராசன் ஒரு விருந்து செய்தான். அவ்விருந்துக்கு வந்தவர் அக்கோட்டையைப் பற்றி நானுவிதமாகப் புகழ்ந்து கூறினர். இதைச் செவியேற்ற அரசன் அவ்வதிசயக் காட்சிகளைக் காண்பான்வேண்டிப் புறப் படவே, அவனுடன் அவனது ஆத்ம நேயர்களும் புறப் பட்டனர். அரசன் உள்ளே சென்றதும் அதிக பயங் கரமான ஒருசத்தங் கேட்டான். மூன்று எற்புச்சட்டங் கள் சுகுமாரன் சூழ்ச்சியால் ஈட்டியைத் தூக்கின. இவைகளைக்கண்டு பயந்து செல்லும்போது தலையிருக்கு மறைக்குள் தற்செயலாகச் சென்ருன். இதற்குள் சுகுமாரன் அடுத்த அறைக்குட்சென்று அக்குழாய் வழியாய்க் கூறுவான் "ஓ அரசனே! நீ என் பேச் சைக் கேட்பாயாளுல் சுகமுறுவாய். நீ இங்குள்ள ஆயுதங்களையும், ஆபரணங்களையும், வாசனைப் பேழை களையுங் கொண்டு சென்று, நீயும் உன் வீரர் களும் உன் பத்தினிமார்களும் தகுந்தபடியணிந்து கொள்ளுங்கள். அங்ஙனஞ் செய்யின் உங்களை வெற்றி கொள்வாரொருவருமில்லை" என்று கூறினுன். உடனே அரசன் இவைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று விருந்தின் ஆடம்பரத்தால் அப்பதுமை கூறி யதை மறந்து ஒரு அறைக்குள் வைத்து விட்டான். தனதத்தனும் சுகுமாரனும் எண்ணிய எண்ணம் முற் றுப் பெருமையால் அக்கோட்டையை விட்டகன்றனர். அக்காலத்தில் விசாலாக்ஷி ஒரு பூகனையீன்ருள். அக் குழந்தை ஒரு இடையன் குடிலில் வளர்ந்துவந்தது. அச்சமயத்தில் மகம்மதிய தேசத்தார் குலசேகரன் ஏவ

லால் மாளவ நாட்டின்மேல் படையெடுக்க, அரசன் பயந்து அத்தலையிருக்கும் அறையிடஞ்சென்றான். அத்தலை ஒன்றுங் கூறிற்றிலது. ஆகவே அத்தலை முன்னஞ் சொன்னபடி நடவாததால் தன்மேல் கோபங்கொண்டுள தென்று கருதினமையாலும், அம்மகமதியர் முன்னிற்கச் சாத்தியப்படாமையாலும், மாளிகையிலிருந்து முன்னங் கொணர்ந்த யாவற்றையும் எடுத்துக் கொண்டு இந்த ஸ்ரீபிரான் மாளிகையில் அடைக்கலம் புகுந்தான். குலசேகரன் மனவருத்தத்தினால் பித்தன்போல் மயங்கித் தியங்குங்கால் அவனை இம்மாளிகையில் சிறை செய்து பின் கொலை புரிந்தனர். அவன் மகள் தந்தையைத் தப்புவிக்க முயன்றும் பயன்படாமையால் உள்ளம் வருந்தியிறந்தனள். முகுந்த ராசனும் சில நாளைக்குள்ளேயே இம்மாளிகையில் இறந்தான். சின்னாள் சென்றதன் பின்னர் முகுந்த ராசனுக்கும் விசாலாக்ஷிக்கும் பிறந்த புதல்வன் இடையன் மகளை மணந்து என்னை யீன்றான். நான் 1148-ம் வருஷம் பிறந்தேன். இப்போது எனக்கு 83 பருவமாகிறது. நான் அரசனாகாமுன் சில வீரரைச்சேர்த்துக்கொண்டு மகம்மதிய நாட்டைக்கொள்ளை கொண்டேன். மகம்மதிய அரசன் அப்துராமன் I முன் என்னைக் கொண்டு சென்றனர் அந்நாட்டவர். அவன் என் தைரியத்திற்கு மகிழ்ந்து என்னை விடுதலை செய்தான். அக்காலத்தில் மாளவ நாட்டரசனிறக்க, அவ்வூரார் என் வீரத்தை நோக்கியும், மகம்மதியருக்குத் தக்கவன் நானேயெனக்கருதியும் என்னை அரசனாக்கினர். அப்போது அப்துராமன் என் மேல் படையெடுத்துவர அது

போது தகுந்த வீரர்கள் என்னிட மில்லாமையால், செய்வது இன்னதென வோராது இடர்ப்படா நின்றேன். அப்துராமன் வருடந்தோறும் நூறு கன்னியர்களைத் தன்னூருக்கனுப்ப வேண்டுமென்று என்னைக்கேட்க, யானங்ஙனே செய்கிறேனென வாக்களித்தேன். ஜனங்கள் இதற்கு உடன்படாததை அறிந்த அப்துராமன் I என்னை நோக்கி "ஓ அரசனே! உனக்கு உன் தேயத்தார் கெடுதி செய்வார்போல் தோன்றுகிறது" என்று சொல்லித் தன்விரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி "இதனைக் கைக்கொள்ளுதி. உனக்குக் கெடுதி நேரிடின் எவர் மூலமேனும் இம்மோதிரத்தை யனுப்புவையேல் உடனே நான் வந்து உனக்கு உதவி செய்கிறேன். நானிறந்தபோதிலும் என் மகன் உனக்கு உதவி செய்வன். இதைப்பற்றி என்மகனிடமு மியம்புகின்றேன்" என்றுசொல்லி என்னூட்டை விட்டகன்றார். அவர் ஐதராபாக்கஞ் சென்றதும் ஜனங்கள் என்மேல் சினங்கொண்டு என்னை இந்த ஸ்ரீபிரான் மாளிகையில் சிறை செய்தனர். நான் இக்கோட்டைக்கு வந்ததுமுதல் அப்துராமன் கொடுத்துள்ள மோதிரத்தை அவன் பாலனுப்பி யவனுதவிபெற எவ்வளவோ முயன்றும் பயனொரு சிறிதும் படவேயில்லை. என்பின் அரசுக்கு வந்த அரசனை ஸ்ரீபாதனும் நான் ஆயுள் வரையில் சிறையிலே தானிருக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்தான். ஒரு நாள் ஸ்ரீபிரான் பிரபு என்னிடம் வந்து அப்துராமன் I என்னை எங்குளானென்று தன்னைக் கடித மூலமாய் விசாரித்ததாகவும், நானே இராஜ்ஜியத்தை வெறுத்துச் சென்

றதாகத் தான் கூறியதாகவும் கூறினன். அதைக் கேட்டதும் நான் தப்பி யுய்யும் எண்ணமெல்லாம் ஒழிந்தது. ஆகவே நானிங்குள்ள ஒவ்வொரு அறைக்குஞ் சென்று முன் முகுந்த ராசன் கோட்டையிலுள்ளவாறு போல் பதுமைகளை யழகுபெறச் செய்தேன். ஆபரணங்களையும், ஆயுதங்களையும் சுத்தப்படுத்தி வைத்தேன். தலையைச் செவ்வைப்படுத்தினேன். தோலினால் குழாயொன்று செய்து அதன் வாய்க்குள் ஒரு முனையும் அடுத்தவறையிலொரு முனையும் இருக்க வைத்தேன். ஒழுங்கு செய்வதற்கே அநேக நாளாயின. பின்னுமொருநாள் ஸ்ரீபிரான் பிரபு என்பால் வந்து 'அரசன் உன்னைக் கொன்றுவிட உத்தரவளித்தான்' என்றார். அதற்கு "ஐயா! அங்ஙனஞ் செய்யேல். முகுந்தராசன் வமிசத்தைக் கொலை புரிபவர் விரைவிலிறுதியடைவர் என்று ஒரு நாள் தலைகூறியுளது. முகுந்தராசன் என் கனவிற்றோன்றி 'இவ்வறையிலுள்ள அதிசயங்களைக் கண்ணுறுவாய்' என்று எனக்குக் கட்டளையிட, நான் அங்ஙனே சென்று பார்த்தேன். அப்போது அத்தலை அவ்வண்ணமே கூறியது" என்றேன். "அப்படியா! நான் நேரில் பார்க்கிறே"னென்று அதனருகிற் செல்ல, நான் அடுத்தவறைக்குட் சென்று அத்தலை உரைக்கும் பாவனையாக வுரைத்தேன். அதைக் கேட்டதும் அவன் என்னைக்கொல்லாது விட்டகன்றனன்" என்றார். "1191-ம் வருடத்தில் நீர் இறந்ததாக ஒரு நிருபச் சுருளைக் கண்டேனே யான். அதன் காரணமென்னை?" என்று வீரலக்ஷுமி வினவலும், ஸ்ரீபிரான் பிரபு

என்னை ஜாக்கிரதையாக விருக்கக் கட்டளையிட்டு, அரசனிங்கு ஒருகால் வருவானாயின் நானிறந்து விட்டதாக எண்ணிக்கொள்வனெனக் கருதி என்னை அங்ஙனம் எழுதிவைக்கச் சொல்லினர். யான் அங்ஙனே யெழுதி வைத்தேன். அகதிபோல் அநேகவாண்டாயிண்டிருக்கையில் நீங்களிருவரும் வரக் கண்டேன். உன்னை நோக்கி நீ சாமர்த்திய முள்ளவனென மதித்தும் அப்துராமன் மகன் என் விஷயத்தில் தன் தந்தையின் சொற்படி விசுவாசம் பாராட்டுவானென்றெண்ணியும், நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நீ என் பின் தொடர்வாயென்றெண்ணி அக்கதவினருகில் நின்றேன். என்னை நோக்கி நீ அங்ஙனே வந்தாய். நீ தசையற்ற மூன்று அங்கங்கள் நிற்பதைக் கண்டு நிற்க, நீ தைரியமுள்ளவனா என்று உணரவேண்டி நடுவணுள்ள எற்புச் சட்டகத்தின் கையிலுள்ள ஈட்டியை யசைத்தேன். நீ அதைக் கண்டு நடுங்கினாய். பயங்கொண்டு எங்கே ஓடிப்போகின்றையோ வென்று பயந்தேன். நீயோடிப் போகாமல் அங்கேதானே யிருந்து நானும் மனோரஞ்சிதமும் வார்த்தையாடியதைக் கேட்டுக்கொண்டிருந்தாய். நீ தலையருகே சென்றதும் அத்தலை கூறியதாக நீ நினைத்திருந்த வார்த்தைகளெல்லாம் நான் கூறினவே. நீங்களிருவரும் என் விஷயத்தில் மிகவுங் கஷ்டமடைந்தீர். இதற்குக் கைம்மாறு என்ன செய்யப் போகிறேன்'' எனலும், வீரலக்ஷ்மி "அரசே! நீர் சத்துருவைக்கொன்றது சரியே: அல்லாரைக்கொன்றது நியாயமோ? மேலும் நீர் கொடுத்த முடிப்பினுள்

ளிருந்த காகிதத்தை ஔரங்கபாத்துக்குச் சென்று வாசிக்கச் சொன்னீர். அதன் காரணம் என்ன'' எனலும், ''ஓ மாதே! நீ கூறியது உண்மையே. நான் சத்துருக்களைக் கொன்று ஏனையோரைக் கொல்லாவிடின், இங்கு நடந்தவைகளைப் பிறருக்கு வெளியிடுவர் என்னும் எண்ணங்கொண்டு செய்தேன். ஔரங்கபாத்துக்குச்சென்று நான் கொடுத்த காகிதத்தை வாசிக்கச் சொன்னது யாது காரணமெனில், ஔரங்கபாத்துக்குச் சமீபத்தில் ஐதராபாத் இருப்பதால் அவசியம் அப்துராமனைக் காண்பா யென்றும், அங்கு நூறு கன்னிமார்கள் தங்குதலால், மனோரஞ்சிதத்தைத் தப்புவிப்பாயென்று நினைத்தும் அங்ஙனே செய்தேன். நான் அரசுக்கு வந்தபின் உமக்கு வேண்டிய உதவி செய்கிறேன்'' என்று கூறிக் காராஜுலி கூட்டமுடன் வெளிப்போந்தான். வீரலக்ஷ்மியும் மன்மத சொரூபனும் அக்கோட்டை விட்டகன்றார்.

அத்தியாயம் XVII

—:o:—

பரான்புர யுத்தமும் வீரலக்ஷுமி அரசியலும்.

மன்மத சொருபன், வீரலக்ஷுமி ஆகிய இவ்விருவரும் ஆமடாபாத்துக்குச் சென்று, வீரமார்த்தாண்டனைக் கண்டனர். அரசனிறந்ததாகப் பரவிய சங்கதி இவ்விருவரால் உண்மை யென்றுணரப்பட்டது. வீரலக்ஷுமி வீரமார்த்தாண்டனுக்கு ஸ்ரீபிரான் மாளிகையில் நிகழ்ந்தனயாவுங் கூறி, "பிரதாபசீலன் அப்துராமன் உதவிகொண்டு மாளவ நாட்டை யரசு செய்யப்போகிறுனும்" என்று கூற, அவ்வீரன் மிகவுங் கோபாவேசங் கொண்டு "ஆ! இப்போது என்னைச் சுற்றி யிருக்கும் ஜனங்களும், வீரர்களும் என் விஷயத்தில் நம்பிக்கையுள்ளவர்களா யிருப்பாராஞல், நான் மகம்மதிய நாட்டரசன் மேல் இப்போதே படை யெடுப்பேன்" எனலும் "அங்ஙனே செய்யும்! அங்ஙனே செய்யும்"!! என்று யாவரும் உடன் பட்டனர். வீரலக்ஷுமியும் மன்மதசொருபனும் கவசம் பூண்டு வீரனுக்கு உதவியாயினர், ஊரிலுள்ளோ ரெல்லாரும் பிரதாபசீலனை மீண்டும் அரசனுகக்கொள்ள விருப்பமில்லாராதலால், வீரனுடன் சேர்ந்தனர். வீரமார்த்தாண்டன் தன் சேனையுடன் புறப்பட்டுச் செல்லுங்கால், காராஆலி கூட்டத்தைப் பரான்புரமென்னு மிடத்தில் சந்திக்க, அங்கு இருதிறத்தாருக்கும் பெரும்போர் விளைந்தது. காராஆலி

கூட்டத்தைச் சார்ந்தார் அநேகர் மாண்டனர். காராஆலி கொலையுண்டான். பின்பு வீரமார்த்தாண்டன் தன் சேனையுடன் ஐதராபாக்கத்திற் சேகினான். பிரதாபசீலன் அரசனருகிலிருந்து இனிய வசனம் வசனித்துக் கொண்டிருக்குங்கால், வீரன் தன் சேனையுடன் வருவதை ஒற்றராலறிந்த அப்துராமன் II தன் வீரர்களுடன் போருக்கெழுந்தான். பிரதாபசீலனும் தன் வீரத்தைக் காட்டப் போருக்கெழுந்தான். இருதிறத்தார்க்கும் பதினைந்து நாள் பெரும்போர் விளைந்தது. அப்துராமன் சேனைத்தலைவர்கள் யாவரும் மரித்தனர். பிரதாபசீலன் குதிரைமேலிருந்து கீழே விழுந்து உயிர் நீத்தான். அப்துராமன் II காயப்பட்டு ஐயோ வென்றலறிக் கீழே விழுந்து உயிரிழந்தான். அப்துராமன் சேனை, வீரனுக்கு முன்னிற்கமாட்டாது புறங்கொடுத் தோடிற்று. வீரமார்த்தாண்டன் ஐதராபாத்தைத் தன் வயப்படுத்திக் கொண்டனன். மாளவதேயத்து ஜனங்களும், வீரமார்த்தாண்டன் வீரரும் வீரமார்த்தாண்டனை ஐதராபாத்துக் கரசனாகவும், வீரலக்ஷ்மியின் வீரதீர பராக்ரமமெல்லாம் அப்போரில் யாவரும் அறிந்தாராதலால், அவளது குணவிசேடமும் புத்தி நுட்பமும் விடாமுயற்சியுங் கருதி அம்மாதை மாளவநாட்டிற்கு அரசியாகவும் ஏற்படுத்தினர். இச்செய்தி யுணர்ந்த குபேரனும் இனி இவ்வூரிலிருப்பது தகுதியல்லவென நினைத்து, தான் விரும்பிய மாது தனக்கு வாய்க்காததால் இவ்வுலக இன்பத்தை வெறுத்துத் துறவு பூண்டனன். வீரலக்ஷ்மி வீரமார்த்தாண்டனிடம் நெடுநேரம் வார்த்தை

யாடித் தன் காதலனுடன் மாளவ நாட்டை யடைந்ததும் தம்மூர்க் குடிகளால் திருமுடி புனையப் பெற்றாள். சிம்மாஸனம் ஏறிய அஞ்ஞான்றே வீரலக்ஷ்மிக்கும் மன்மத சொரூபனுக்கும் திருமணம் நடந்தேறியது.

"மருவிய காதல் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டொர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று"

என்பதுகொண்டு, "காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித் தீதி லொருகருமஞ்செய்ப" என்னு முது மொழிக் கிலக்கியமாக இருவரும் மனமொத்து இல்லறம் வழாது நடாத்தி மக்கட்பேறடைந்து மகிழ்வுடன் வாழ்ந் திருந்தனர்.

ஒள்ளிய மௌலி பூண்ட உத்தம ஜார்ஜூ வாழ்க
விள்ளருந் தகைமை சான்ற மேரியோ டினிது வாழ்க
பள்ளநீர்ப் பழனஞ் சூழுங் கச்சிவாழ் பச்சையப்ப
வள்ளலின் சீர்த்தி யோங்கி வாழ்கபல் லாண்டு மாதோ.

சுபம்.

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
சென்னை-1

Printed by Srouti & Co., at the Success Press, Triplicane, Madras.